www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 11/00

දිනමුරසු වාරමලර් டிச.29,1996–ஜன.04,1997

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 185

# கிழக்கு முனையில் கடும்போர் முற்றுகை




சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## ஆண்டுகள் மாறினும்....

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

யுத்தத்தில் குளித்த
இரத்த வாடையுடன்
'96ம் ஆண்டு விடைபெறுகிறது!

பிரியாவிடை என்ற
பேச்சுக்கே இடமில்லை!
விடைபெற்றுச் செல்கிறதே என்று
மனம் வருந்துமளவுக்கு
குணம் காட்டவில்லை '96.

ஆட்சிகள் மாறினாலும்
ஆண்டுகள் மாறினாலும்
யுத்தக் காட்சிதான்
நிரந்தரமாக நீடிக்கிறது!

சென்ற ஆட்சி
விட்டுச் சென்ற இடத்திலிருந்து
வந்த ஆட்சி
போரைத் தொடர்ந்து நடத்துகிறது!

சென்ற ஆண்டு
தந்துவிட்டுப்போகும் அவலங்களை
வருகின்ற ஆண்டு
பத்திரமாகப் பாதுகாத்து
மேலும் வளர்த்துச் செல்லுவதே
இங்கே வரலாறாகி வருகிறது!

ஒவ்வொரு புத்தாண்டிலும்
"சமாதானம் மலர்க"
என்று சொல்லிச் சொல்லியே
வாய் புளித்துவிட்டது!

அரசியல்வாதிகள் மட்டும்
அசரவே மாட்டார்கள்,
"சமாதானம் மலரப் பிரார்த்திப்போம்!"
என்று செய்தி விடுப்பார்கள்!

நாடே சமாதானத்துக்காகத்தான்
ஏங்கிக் கொண்டிருக்கிறது.
அரசியல்வாதிகள் சொல்லித்தான்
அது தெரியவேண்டுமா?

வழக்கமான
வாழ்த்துச் செய்திகளை
விடுத்துக் கொண்டிருக்காமல்
தங்கள் கடமையை
அரசியல்வாதிகள் செய்தால் போதும்;
சமாதானப் பாதை திறக்கும்!

'பாலுக்கும் காவல்
பூனைக்கும் தோழன்' என்று
அரசியல்வாதிகள்
நேர்மை தவறியதுதான்
நாட்டைத் தப்பான பாதையில்
கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது.

"சமாதானம் மலரட்டும்,"
என்று செய்தி சொல்வதைவிட
சமாதானப் பாதைக்கு
வழிகாட்டுகிறவர்களாக
தங்களை மாற்றிக் கொள்ளட்டும்!

ஏதோ இன்றைய
சமருக்கும்-அழிவுக்கும்
மக்கள்தான் காரணம்
என்பதுபோல
மக்களை நோக்கி
சமாதானத்தைப் பற்றிச்
சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்!

இதிலிருந்து தெரிவது யாதெனில்,
நம் அரசியல்வாதிகள்
இன்னமும் தமது தவறுகளையும்
திரும்பிப் பார்க்கவில்லை;
தமது பொறுப்புக்களையும்
உணர்ந்து திருந்தவில்லை!

பிரதான எதிர்க்கட்சிக்கு
இப்போதுதான்
ஞானம் பிறந்திருக்கிறது!
புலிகளோடு நிபந்தனையில்லாமல்
அரசு பேசலாம் என்கிறது!

ஆட்சியில் இல்லாதபோதுதான்
இங்குள்ள கட்சிகளுக்கு
தர்ம நியாயம் புரிகிறதா?
பதவி வந்தால் பத்தும் பறக்கும்
என்பது நியாயமான கூற்றுத்தானோ?

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்
வருமானால்
நியாயமான தீர்வுக்கு
தாமும் உடன்படவேண்டிவரும்
என்ற பயமும்
எதிர்க்கட்சிக்கு ஏற்பட்டுள்ளது!
'சோழியன் குடுமி சும்மா ஆடுமா?'

போரில் வெற்றி பெற்றால்
ஆளும் கட்சி
அடுத்த தேர்தலிலும்
வெற்றி பெற்றுவிடும் என்றுதான்
சமாதானப் பேச்சை
எதிர்க்கட்சி நாடுகிறது!

ஆக, மொத்தத்தில்
யுத்தம்-சமாதானம் இரண்டும்
அரசியல் விளையாட்டில்
சதுரங்கக் காய்களாகிவிட்டன.
இந் நிலையில்- இங்கே
உண்மையான சமாதானம்
மலர்வது எந்நாளோ?

ஆண்டுகள் மாறலாம்;
அரசியல்வாதிகள் மாறாதவரை
எரியும் பிரச்சனை தீராது.
விரியும் யுத்தம் ஓயாது!
வலிகளும் நமக்குக் குறையாது!

❑❑

வாழ்த்து மடல்கள் அனுப்பிய
அனைவரோடும் கைகுலுக்கிக்கொண்டு
மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## தீவினையா?

நல்லவைவற்றையே செய்கிறோம் ஆனால் நற்பெயர் பெறுவதில்லை என வருந்தும் உள்ளங்கள்தான் எத்தனை! பொய்க் குற்றச்சாட்டுக்களால் பிணைக்கப்பட்டு வருந்தும் உள்ளங்கள் தான் எத்தனை! எத்தனை! எமக்கு எதிராக பொய்ச்சாட்சி கூறும்போது என்ன செய்கின்றோம்....? கோபப்படுகின்றோம். அவர்கள்மேல் எரிச்சலடைகின்றோம். கர்த்தரை நம்பியிருக்கும் எமக்கு இத்தனை பிரச்சனைகளா எனக் கலங்கித் தவிக்கின்றோம்.

சங்கீதம் 37 கூறுவதென்ன.....?

"தீவினை செய்கிற மனுஷன்மேல் எரிச்சலாகாதே! கோபத்தை நெகிழ்ந்து உக்கிரத்தை விட்டுவிடு...பொல்லாப்புச் செய்ய ஏதுவான எரிச்சல் உனக்கு வேண்டாம்!"

தீவினை செய்பவர்கட்கு என்னதான் நடக்கும்....? சங்- 37:10 கூறுகிறது: "இன்னுங் கொஞ்ச நேரந்தான்- துன்மார்க்கன் இரான்!"

சங்- 37:38- "அக்கிரமக்காரர் ஏகமாய் அழிக்கப்படுவார்கள். அறுப்புண்டு போவதே துன்மார்க்கரின் முடிவு."

நீதிமான்களுக்கு இரட்சிப்பு கர்த்தரால் வரும். கர்த்தர் அவர்களுக்கு உதவி செய்து விடுவிப்பார். எனவே எமக்கு எதிராக தீவினை செய்கிற மனுஷன்மேல் எரிச்சலடையாதிருப்போம். கர்த்தர் எமக்கு உதவி செய்து அவர்களின் கைக்கு தப்புவிப்பார்.

ஜே. புளோரன்ஸ், அம்பக்கோட்டை கெங்கல்ல.



## இறைவன் இருக்கிறான்!

இமாமுல் அஃளம் அபூஹனீபா (ரஹ்) அவர்களிடம் நாத்திகர்கள், "இறைவன் இருக்கின்றான் என்பதை ஆதாரபூர்வமாக நிரூபிக்க உங்களால் முடியுமா?" என்று வினா விடுத்தனர்.

"ஒரு கப்பல், மாலுமி இல்லாமல், ஆட்களும் இல்லாமல், தானாகவே சாமான்களை ஏற்றிக்கொண்டு அக்கரையிலுள்ள ஒரு நகரத்துக்குச் சென்று தானாகவே அச்சாமான்களை இறக்கி விட்டுத் திரும்பவும் இக்கரைக்கே வந்து சேர்ந்து விடுகிறது என்று நான் கூறினால் நீங்கள் நம்புவீர்களா?" என இமாமவர்கள் நாத்திகர்களிடம் கேட்டார்கள். அவ்வாறு நிகழ்வது சாத்தியமில்லையே, என்று அவர்கள் கூறினார்கள். அது கேட்ட இமாமவர்கள், "ஒரு கப்பல் அதனை இயக்கக்கூடிய மாலுமியின் துணையின்றி இயங்க முடியாது என்றால் பரந்த வானமும், பிரமாண்டமான பூமியும், அவற்றிலுள்ள பொருட்களும் இயக்கக்கூடிய எவனுமின்றித் தானாகவே இயங்குகின்றன என்று தாங்கள் நம்புவீர்களா?" என்று திருப்பிக் கேட்டார்கள். உடனே இறைவனை மறுக்கும் நாத்திகர்கள் வாயடைத்துப் போனார்கள். இவ்வுலகையும், ஏனைய சிருஷ்டிகளையும் படைத்துப் பரிபாலிக்கும் ஏக இறைவன் இருக்கின்றான் என்ற உண்மையை உணர்ந்தார்கள்.

திஹாரிய- ஹாரித்

## கவிதைப் போட்டி இல.182

### பரிசுக்குரிய கவிதை

### அங்கராணி

அரை குறை ஆடை கட்டி
அடி வயிறு வெளியில் காட்டி
ஆங்காங்கே சாயம் தீட்டி
ஆலாத்தி நடை நடந்து
அங்கங்கள் காட்டி நின்றால்
அதற்குப் பெயர் 'அழகுராணி!'

அம்பிளாந்துறையூர்-அரியரன்.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

#### மாந்தர் மகிழ்வதெப்போ?

எண்பத்தெட்டு ஊர்கூட்டி
கோடி கொட்டிச் செலவாக்கி
அழகி ஒருத்தி தெரிவதனால்
பாழும் உலகின் பயங்கரங்கள்
பனியாய்க் கரைந்து மாறிடுமா?
துன்பம் துயரம் இல்லாத
சுபதினம் ஒன்று வந்திடுமா?
மாதரசே உன் மகிழ்வதுபோல்
மண்ணில் மாந்தர்கள் மகிழ்வதெப்போ?

தர்ஷிக்கா கனகசிங்கம்- கல்லடி, மட்டக்களப்பு.

#### கொளுத்துவோம்

உலக அழகு இராணியாக வேண்டுமென்றால்
உடல் அழகை காட்ட வேண்டுமென்று
மாதர் தம்மை உடை களையும்
கொடுமையைக் கொளுத்துவோம்!


செல்வி க. ஹேமா ஜெயந்தி- நாரஹேன்பிட்டிய, கொழும்பு-05.

#### அவளே இவள்!

துரியோதனர்களின்
துயிலுரி காண்டத்தின்
துணை நடிகை!

ச.மகாலிங்கம்-வெலிமடை குரூப், வெலிமடை.

## கவிதைப் போட்டி இல-185



**கவனியுங்கள்!** எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி:- 04.01.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.185 தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.



#### அவலத்தின் ஏணி

அன்னை திரேசா
அகிலத்தின் ராணி;
அழகு ராணியோ
அவலத்தின் ஏணி!

சங்கீதா தவமணிதாசன்- இறம்பைக்குளம், வவுனியா.

#### அழகெதுவோ?

மனவழகு மண்டியிட்டு
மண்ணில் மறைந்தது;
புறவழகு புள்ளியிட்டு
பெண்ணில் எழுந்தது;
போரழகு பார்த்து நின்ற
புண்ணான நெஞ்சங்கள்
எதுவழகு என்றெண்ணி
ஏங்கும் காலமிது...!

தெ. நஞ்ஜனா- சின்னப்புதுக்குளம், வவுனியா.

#### யார் மொழியோ?

வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்!
ஆடையுயர
அழகுயரும்;
யார் மொழியோ
பாரினிலே.....?

முவைஸ் ஏ.மஜீத்-நேரியகுளம்.

#### கிரீடம்

அங்கம் அதற்கு பங்கமில்லை;
அள்ளி வழங்கு 'மார்க்' என்று
அணி வகுப்பில் மின்னலடித்து
அழகி பெற்றாள் தங்கக்கிரீடம்.

தெ. லோஜனா- கொழும்பு-15.

#### அழகே நீ கவனம்..!

மனம் பேரி மரணம்...!
ராஜினியும் மரணம்...!
கிருஷாந்தி மாயம்...!
எனவே நீ கவனம்!!

திரு. கலாமணி-கொம்மாதுறை, செங்கலடி.

#### அழகு!

நீ...
ஒருமுறை கைத்தட்டு!
அது---
நூறு முறை எதிரொலிக்கும்,
எங்கள் இளம் உள்ளங்களில்.....

மனசு- நீர்கொழும்பு.

#### பவனி

கவர்ச்சி உனது ஏணி
கட்டுடல் தனைப் பேணி
சபையோர் முன் பவனி
ஒய்யாரமாய் வா நீ!
நீயே உலக அழகு ராணி-என
போற்றுமே இந்தத் தரணி!

கொட்டாரமுல்லை-அப்துல் முனா.ஃப்.

#### எல்லோருக்கும்....

இவள் தான்
உலக அழகியாம்;
என் காதலி
போட்டிக்கு போகாததால்.....!

சுபா வரன்- கண்டி.

## வாசகு(ர்) சாலை

தித்திக்கும் தேன் முரசே என் தினமுரசு!

'முரசம்' எங்கள் முதல் உண்மை. 'எக்ஸ்ரே'- இந் நாட்டில் உள்ளதின் உண்மை. 'அல்பிரட்' அடிபட்ட உண்மை. 'அலசல்' ஆழத்தின் உண்மை. 'ரசிகன்' அனுபவ உண்மை! முரசின் உண்மையின் சேவை பாராட்டுக்குரியது.

என்.எஸ்.குமார், 5ம் வட்டாரம், உடப்பு.

என் இனிய முரசே!

நீ வாரம் தோறும் சுமந்து வரும் எல்லா அம்சங்களும் முத்தானவை ரசிகனின் இலக்கிய நயம் பிரமாதம். அதிலும் கொள்ளை ராணி பூலான் தேவியின் கதை மிகநன்று. 'அனிதா இளம் மனைவி','தூக்கு மேடை' விறு விறுப்பாக அமைகின்றன. உனது பணி தொடர என் வாழ்த்துக்கள்.

ப.பர்ஸானா, பாரதிபுரம்.

புதிய பல அம்சங்களை எமக்குத் தந்திருக்கிறாய்! அதிலும் அரசியல் ஆய்வை நீண்ட தூர நோக்கில் ஆராய்வது எதிர்காலம் பற்றிய நம்பிக்கை, நம்பிக்கையீனத்தையும் வெளிப்படுத்துகிறது. "தூக்கு மேடை குறிப்பு" பசுமரத்தாணியாக மனதில் தைக்கிறது. உன் சேவை தொடர வேண்டும். புது வருடத்தில் புதுமை பல எதிர்பார்க்கின்றேன்'!

பிரியதர்சினி குமாரசிங்கம், செங்கலடி

உன் சேவையில் இடம் பெறும் அம்சங்கள் மெருகூட்டுகின்றன. முரசின் "தூக்குமேடை குறிப்பு" மிகவும் விறு விறுப்பாக அமைந்துள்ளது. மகிழச் செய்கின்றன, அதேமாதிரி பூலானின் கதையில் வரும் அம்சங்கள் யாவும் மெய் சிலிர்க்க வைக்கின்றன.

திருமதி ஜெ.ஜெகதீஸ்வரி, திருகோணமலை.

### மடல் அனுப்பியவர்களில் இடம்உள்ளவரை பெயர் பதிவு செய்யப்படுபவர்கள்:

* திருமதி ரிஸ்மிலா ரில்வான், அக்குரணை.
* யா. சஞ்ஜீத், பதுளை.
* ரி. நதி, விநாயகபுரம்.
* ஆர்.கே. கருணாகரன், கொட்டாந்தீவு.
* ஏ.ஏ. ஜபார், கல்முனை.
* ஆர். பிரசாத், மட்டக்களப்பு.
* தர்மபாலன் மகிந்தரூபன், வவுனியா.
* றாலி முஹம்மத், அக்கரைப்பற்று-06.
* ம.கே. முத்துக்கிருஷ்ணா, கொழும்பு-14.
* ப. சுகந்தி, உடப்புலல்லாவ.
* எ. நிசாந்தன், பெரிய நீலாவணை-01.
* பி. பொன்னுத்துரை, உக்குவெல.
* க. மரியநாயகம், ஜெர்மன்.
* திருமதி மகேஸ்வரன் பாக்கியலட்சுமி, ஆறுமுகத்தான்குடியிருப்பு.
* எம்.ஆர்.எம். இன்லாப்ஃ, கல்முனை-06.
* ரி. விஜயச்செல்வன், கண்டி.
* ஏ.சி.எம். மசூர், பலாங்கொடை.
* எம்.எம். நவ்பர், கிண்ணியா-02.
* த. லக்ஸ்மணராஜ், சத்துருக்கொண்டான்.
* எஸ். கவிதா, நாவலப்பிட்டி.
* ஜீவரெத்தினம் ஜீவிதா, கொக்கட்டிச்சோலை.
* அ. விஜயகுமார், வெள்ளவாய.
* ஏ.சி. பிறாஸ், அக்கரைப்பற்று-06.
* ஜி.யோகராணி, இரத்தினபுரி.
* ஆ. பாஸ்கரன், பதுளை.
* சி. சிவயோகமூர்த்தி, அவுஸ்திரேலியா.
* வி. ராமக்குமார், கொழும்பு-06
* எஸ். பத்மா, கொழும்பு-10.
* வி. பிரகாஷ், சுவிற்லர்லாந்து.
* என்.ஆர். ரகுமான், மொரட்டுவ.
* செல்வி ஆர். சரஸ்வதி, நுவரெலியா.

இந்திய அமைதிப்படை காலத்தில் நடைபெற்ற அநியாயங்களை அரசியல் தொடர் மறைக்காமல் தரவேண்டும். அமைதிப்படை செய்த நல்ல செயல்களையும் மறக்காமல் வெளிப்படுத்துங்கள்.

வி. ஜீவராஜ், வவுனியா.

திலீபனின் மரணத்தை விடுதலைப்புலிகள் தடுத்திருந்தால் என்ன? ஒரு பெறுமதியான உயிர் காப்பாற்றப்பட்டிருக்குமல்லவா? அந்த இறுதி நாள் நிகழ்வுகளின் உருக்கத்தை கூட்டிக் குறைக்காமல் காட்சியாகத் தந்த அற்புதனுக்குப் பாராட்டுக்கள். முரசின் பாணியே தனிதான்.

ஜெ. விவேகராசா, ஆரையம்பதி.



'பூலான் தேவி' தொடர் வாராவாரம் எம்மை வசப்படுத்தி வருகிறது. பூலானை சுற்றிப் போடப்பட்ட முள்வேலிகளையும், அந்த முட்களால் கிழிக்கப்பட்ட காயங்களில் இருந்துதான் பழிவாங்கும் உணர்ச்சி பீறிட்டுக் கிளம்புகிறது என்பதையும் உணர்த்தியிருப்பது நன்று. பூலானை ஏதோ ஒரு அதிசயப் பிறவி, சாகசக்காரி, கொள்ளைக்காரி என்று மட்டும் நோக்காமல், துயரங்களில் இருந்து எழும் புயலாகக் காட்டியுள்ளமை சரியானதே!

செல்வி தாரிணி துரைசிங்கம், கொழும்பு-05.

### பெண்களால் ஏன் முடியாது?

பெண்களிடம் இரகசியம் தங்காது என்ற கேலிப்பேச்சுக்களுக்கு 'தூக்கு மேடைக்குறிப்பு' சாட்டையடி. கொடும் சித்திரவதைகளைத் தாங்கும் மன உரமிக்க பெண்கள் அன்றும், இன்றும், என்றுமிருக்கிறார்கள். பெண்களை கேலி செய்து ஜோக்குகள் வெளியிடுவதும், பெண்கள் என்றால் இளக்காரமாக நினைக்கத்தக்க கருத்துக்கள் ஆதிக்கம் செலுத்துவதுமே பெண்களின் ஆளுமையை மூடிமறைக்கின்றன. 'தூக்கு மேடைக் குறிப்பு' நெஞ்சுரத்தில் பெண்களும் ஆண்களுக்கு நிகர் என்பதை உணர்த்திவிட்டது.

திருமதி கார்த்திகா ரங்கன், திருக்கோணமலை.

'மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்' பற்றிய காதிலை பூ கந்தசாமியின் கற்பனை, 'மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்' வந்தால் உண்மையாகிவிடும் என்பதில் ஐயமில்லை.

எம்.எம். பர்சான், மட்டக்களப்பு.

வவுனியா அகதிகள் விடயம் தொடர்பாக பேசியதால் அரசியல்வாதிகளின் பெயர்கள் பத்திரிகைகளில் இடம்பெற்றன. இப்போது அவர்கள் புதிய விளம்பரத் தேடலுக்கு எதைப் பேசலாம் என்று தேடிக் கொண்டிருக்கிறார்கள். வவுனியா அகதிகள் மட்டும் முகாம்களில் அடைபட்டுத்தான் கிடக்கிறார்கள். பெயர் தேடிய அரசியல்வாதிகளும் இப்போது அவர்களை மறந்துவிட்டார்கள். முரசு முன்னரே இதனைக் குத்திக் காட்டியதில் என்ன தவறு?

ஏ. லோச



படிப்பகம்

www.padippakam.com

# வடக்கில் தரைப்பாதை திறக்க படையினர் திட்டம்!

## வடக்கு – கிழக்கு தரைப்பாதை திறக்க புலிகள் ஆயத்தம்!

கிழக்கில் புலிகள் தமது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ள அதேவேளை, வன்னிக்கும், கிழக்குக்கும் இடையே உள்ள தரைவழித் தொடர்பை ஏற்படுத்தவும் திட்டமிட்டுள்ளனர்.

வடபகுதிக்கான தரைப்பாதையைத் திறக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ள நிலையில், புலிகள் வடக்கு-கிழக்கு தொடர்புக்கான தரைப்பாதையைத் திறக்க திட்டமிட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கு தரைத் தொடர்பை வெலி ஓயா பகுதி இராணுவ முகாம்கள் துண்டித்துள்ளன. இதனால் புலிகளின் அணிகளும் கடல் வழியான போக்குவரத்தையே மேற்கொண்டுவருகின்றன.

வன்னித் தளத்திலிருந்து கிழக்குக்கு புலிகளின் அணிகளுக்கு இடையே விநியோகமும், போக்குவரத்தும் கடல் வழியாகவே நடைபெற்று வருகின்றன.

வடக்கு-கிழக்கு தரைத் தொடர்பைத் துண்டித்து இராணுவ முகாம்களும், குடியேற்றத் திட்டங்களும் ஐ.தே.கட்சி ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்டிருந்தன.

கிழக்கு போர்முனையில் புலிகளின் கவனம் திரும்பியிருப்பதால் தரைவழித் தொடர்பை ஏற்படுத்தும் முயற்சியிலும் புலிகள் ஈடுபடலாம் என்று தெரிகிறது.

அதனால் வெலி ஓயாப் பகுதியில் புலிகளின் தாக்குதல்கள் தீவிரமாகலாம் என்று நம்பப்படுகிறது.

சமீபத்தில் வெலி ஓயாப் பகுதியில் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த இராணுவத்தினர் எட்டுப்பேர் புலிகளின் கண்ணி வெடியில் சிக்கிப் பலியானார்கள்.

வெலி ஓயாப் பகுதியில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடும் இராணுவத்தினர் மீதும் புலிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

வெலி ஓயாப் பகுதியில் பாரிய தாக்குதல் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதற்கான அறிகுறியாகவே இச் சம்பவங்கள் அமைந்துள்ளன.

இதேவேளை, சமீபத்தில் வன்னியில் வெளியான 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் வடக்கைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து பின்னர் கிழக்கைக் கட்டுப்படுத்தும் அரசாங்கத்தின் யுத்த தந்திரம் தோல்வியைத் தழுவும் என்று தெரிவிக்கப்படுகிறது.

"அரசாங்கம் பயன்படுத்திவரும் ஒவ்வொரு அரசியல் மற்றும் இராணுவ மூலோபாயங்களை முறியடிக்க பிரபாகரனால் எதிர் மூலோபாயமும், தந்திரோபாயங்களும் உருவாக்கப்பட்டு வந்திருக்கின்றன.

புதிய தந்திரோபாயம் காரணமாக கிழக்கையும் இழந்து வடக்கையும் அரசாங்கம் பறிகொடுக்கப்போகிறது" என்று 'விடுதலைப் புலிகள்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

கிழக்கில் புலிகள் இயக்கத்தினரின் தாக்குதல்கள் மேலும் தீவிரப்படுத்தப்பட உள்ளதையே அச் செய்தி உணர்த்துகிறது.

## பேபி சுப்பிரமணியம் எங்கே?

## இரகசியப் பேச்சுக்கு சென்றாரா?

புலிகள் இயக்கத்தில் முக்கிய பிரமுகரான பேபி சுப்பிரமணியம் இந்தியாவில் இருக்கிறார். இந்திய மத்திய அரசின் அதிகாரிகளுடன் பேசுவதற்காக அங்கு இரகசியமாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளார் என்று சமீபத்தில் சில செய்தி நிறுவனங்கள் தகவல் வெளியிட்டிருந்தன.

முன்னர் தமிழ்நாட்டில் புலிகளின் பிரசாரப் பீரங்கியாக செயற்பட்டவர் பேபி சுப்பிரமணியம். புலிகள் இயக்க அரசியல் பிரிவுச் செயலாளராகவும் இருந்தவர். கி.வீரமணி தலைமையிலான திராவிடர் கழகம் உட்பட தமிழகத்தில் உள்ள தீவிரவாத தமிழ் அமைப்புக்களுடனும் நெருக்கமான தொடர்புகளை வைத்திருந்தவர்.

எனவே பேபி சுப்பிரமணியம் இந்தியாவுக்குச் செல்லக்கூடிய நிலை இல்லை. அவ்வாறு இருந்தும் அவர் இந்தியா சென்றுள்ளதாக செய்திகள் வெளியாகின.

பேபி சுப்பிரமணியம் தற்போது எங்கிருக்கிறார்? அவர் வன்னியில் இருக்கிறார். தமிழ்க் கல்வித் துறைப் பொறுப்பாளராக இளங்குமரன் என்ற பெயரில் செயற்பட்டு வருகிறார்.

17.12.96 அன்று வன்னியில் மல்லாவி என்னுமிடத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேபி சுப்பிரமணியம் கலந்து கொண்டார்.

வடபகுதியில், தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அவசர சுகாதார விழிப்பு வாரத்தை புலிகள் இயக்கத்தினர் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

அரசாங்கம் உணவையும் மருந்தையும் ஆயுதமாகப் பாவித்து வருகிறது. இவ்வேளையில் மக்களை சுகாதாரப் பிரச்சனையில் இருந்து பாதுகாக்கவே சுகாதார வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக பேபி சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

சுகாதார வாரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக மல்லாவியில் கூட்டம் நடைபெற்றது. பாடசாலை அதிபர்கள், சமூக சேவையாளர்கள், அரச திணைக்கள உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட கூட்டத்திலேயே பேபி சுப்பிரமணியம் உரையாற்றினார்.

சுகாதார வாரத்தை முன்னிட்டு வன்னியின் பல பகுதிகளில் பேபி சுப்பிரமணியத்தின் பொறுப்பில் சுகாதாரப் பயிற்சித் திட்ட முகாம்கள் நடத்தப்படுகின்றன.

## குமார் ரூபசிங்காவின் மத்தியஸ்த முயற்சி!

## எதிர்க்கட்சியின் உடன்பாடும் தந்திரமும்!

'இன்டர் நேஷனல் அலேட்' அமைப்பைச் சேர்ந்த குமார் ரூபசிங்கா புலிகளுடன் சமாதானப் பேச்சில் ஈடுபட விருப்பம் தெரிவித்துள்ளார். குமார் ரூபசிங்கா சிறிமாவோ பண்டாரநாயக்காவின் புதல்வியின் ஒருவரான சுனேத்திராவின் முன்னாள் கணவராவார்.

தற்போது ஆளும் கட்சி வட்டாரங்களுடனும், எதிர்க்கட்சித் தலைவருடனும் குமார் ரூபசிங்கா நட்பை வைத்திருக்கிறார்.

ஜனாதிபதி சந்திரிக்காவையும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவையும் சந்தித்து தனது முயற்சி தொடர்பாக குமார் ரூபசிங்கா கூறியுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

கடந்தவாரம் குமார் ரூபசிங்கா கொழும்பில் இருக்கவில்லை என்று நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிழக்கு மாகாணத்திற்கு அல்லது வெளிநாடொன்றுக்குச் சென்று புலிகள் இயக்கப் பிரமுகர்களைச் சந்தித்துப் பேச அவர் திட்டமிட்டிருந்தார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எனினும் குமார் ரூபசிங்காவின் முயற்சிகளும் முன்னர் சமாதான முயற்சிகளில் இறங்கிய தனிநபர்களின் முயற்சிகள் போலவே முடிவடையும் என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

ஆளும் கட்சி, எதிர்க்கட்சி மற்றும் புலிகள் ஆகிய மூன்று தரப்புகளும் குமார் ரூபசிங்காவின் முயற்சிகளுக்கு தடை இல்லை என்று காட்டிக் கொண்டாலும், எந்தளவுக்கு ஒத்துழைப்பார்கள் என்பதே கேள்விக் குறியாகும்.

சர்வோதயத் தலைவர் ஆரியரத்னா முன்னர் இவ்வாறான ஒரு முயற்சியில் ஈடுபட்டார். புலிகளை சென்று சந்தித்துவிட்டு வந்து பரபரப்பாக செய்திகளில் அடிபட்டார். அவரிடம் ஒரு இரகசிய 'கசட்டை' புலிகள் கொடுத்து அனுப்பியதாகவும் செய்திகள் வெளியாயின. இறுதியில் அது பொய்யான தகவல் என்பது தெரிந்தது.

தனிநபர்களால் மத்தியஸ்தம் செய்வைக்கும் கட்டத்தை கடந்துவிட்ட பாரிய பிரச்சனை இது. சகல தரப்புக்களையும் உடன்பாட்டுக்குக் கொண்டுவரக் கூடிய மூன்றாம் தரப்பாக தனிநபர்களால் செயற்பட முடியாது என்பதே உண்மையாகும்.

குமார் ரூபசிங்காவின் முயற்சியை எதிர்க்கட்சி ஊக்கவிக்கலாம் என்றும் நம்பப்படுகிறது. மூன்றாம் தரப்பு மத்தியஸ்தராக ஒரு நாடு தலையிடுமானால் ஏதாவது ஒரு தீர்வுக்கு தாமும் உடன்பட்டாக வேண்டும். அதனால் தனிநபர்கள் மத்தியஸ்தத்தில் ஈடுபட்டு காலம் கடந்து செல்வதையே எதிர்க்கட்சி விரும்புகிறது.

### மாடுகளை நோக்கித் தாக்குதல்

யாழ்ப்பாணம் மிருசுவில் பகுதியில் உள்ள சோதனைச் சாவடி ஒன்றின் அருகே கூட்டமாகச் சென்ற மாடுகள் மீது பலத்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

அதிகாலை 3 மணியளவில் மாடுகள் கூட்டமாக வந்ததைக் கண்டனர் இராணுவத்தினர். அதனை புலிகளின் தாக்குதலுக்கான தந்திரம் என்று கருதினார்களோ தெரியவில்லை, உடனடியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்யத் தொடங்கிவிட்டனராம். ஷெல் தாக்குதலும் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

### கரையொதுங்கும் சடலங்கள்

வடக்கில் சுண்டிக்குளம் கடற்கரையில் மேலும் இரண்டு இளைஞர்களின் சடலங்கள் கரையொதுங்கியுள்ளன.

சடலங்கள் இரண்டும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் அடையாளம் காண முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் முல்லைத்தீவுக் கடற்கரையில் மூன்று சடலங்கள் கரை ஒதுங்கியமை தெரிந்ததே.

சடலங்கள் கடலில் வீசப்படுவதால் அடையாளம் தெரிய வாய்ப்பில்லாமல் உப்பி விடுகின்றன.

### மட்டக்களப்பில் புதிய இராணுவ முகாம்கள்!

(ஏறாவூர் நிருபர்)

அம்பாறை-புலுக்குணாவ விஷேட அதிரடிப்படை முகாம் தாக்கப்பட்டதையடுத்து மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பொலிஸ், இராணுவ, விமான நிலைய மற்றும் விஷேட அதிரடிப்படை முகாம்கள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு-கொழும்பு பிரதான வீதியில் மட்டக்களப்பிற்குச் சமீபமாகவுள்ள பிள்ளையாரடியில் இதுவரை பொலிஸாரே முகாம் அமைத்திருந்தனர். கடந்த வாரம் முதல் இந்தப் பொலிஸ் முகாம் முன்னாலிருந்த பாடசாலைக் கட்டிடத்தில் படையினர் முகாம் அமைத்துப் பலப்படுத்தி வருகின்றனர்.

மட்டக்களப்பு நகருக்குள் நுழைவதற்குள்ள முன்னரங்க முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், மட்டக்களப்பு விமான நிலையப் பாதுகாப்புக்கும் இப்பகுதி பிரதானமாகக் கருதப்படுவதாலும் பாதுகாப்புத் தீவிரமாக்கப்பட்டுள்ளது.

## கற்பிட்டியில் தொடரும் கெடுபிடி!

## அடையாள அட்டையும் ஒப்படைக்க வேண்டும்!

(மன்னார் நிருபர்)

மன்னாரிலிருந்து படகுகள் மூலமாக கற்பிட்டிக்கு வந்தவர்களில் நூற்றுக்கணக்கானோர் தொடர்ந்தும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மாலை 5.30 மணிக்கு மன்னாரிலிருந்து வரும் பயணிகள் இரவு 10 மணி வரை காத்து நின்று தமது அடையாள அட்டைகளை ஒப்படைக்க வேண்டியுள்ளது.

அன்றைய தினம் கற்பிட்டியில் தங்குவதற்கு வற்புறுத்தப்படுகின்றனர். இதனால் பெருமளவு பணத்தை விரயமாக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

செல்ல வேண்டிய இடம் தொடர்பான சகல விபரங்களும் பெறப்பட்டபின்பே அடையாள அட்டையை மீளப்பெற முடியும்.

சில வேளைகளில் சரியான தகவல் கிடைக்காத விடத்து பலர் திருப்பியனுப்பப்படுகின்றனர்.

கற்பிட்டியில் தங்கும் போது ஆயிரக்கணக்கான ரூபாய்களை செலவு செய்கின்ற நிலை ஏற்பட்டுள்ளதால் பலர் தமது நகைகள் உட்பட பெறுமதியான பொருட்களை குறைந்த விலைக்கு விற்க வேண்டியுள்ளது.

இந்த நடைமுறையினால் அரச ஊழியர்கள், நோயாளர்கள் அவசரத் தேவைகளுக்குச் செல்வோர் மற்றும் நேர்முகப் பரீட்சைகளுக்குத் தோற்றுவோரின் நிலை சங்கடமாகிவிட்டது.

மேலதிக அரசாங்க அதிபர் கூட அடையாள அட்டையினை ஒப்படைக்க வேண்டியுள்ளது. இக்கடமையிலுள்ளோர் மக்களுடன் புரியாத மொழியில் பேசுவதால் வீண் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

தற்போது கற்பிட்டியில் முகாம் அமைக்கப்பட்டு வருகின்றது. இதில் 3 நாட்களுக்கு பயணிகள் தங்கவைக்கப்படவுள்ளதாகத் தெரிகிறது.

### விசேட அடையாள அட்டைகள்!

யாழ் குடாநாட்டில் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் தனித்தனியான விசேட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

வடமராட்சியில் உள்ளவர்களுக்கு நீல நிற விசேட அடையாள அட்டை வழங்கப்பட்டது. அவ்வாறு ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவில் உள்ளோருக்கும் வெவ்வேறு நிற அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ் குடாநாட்டில் தேசிய அடையாள அட்டையுடன் விசேட அடையாள அட்டையையும் பொதுமக்கள் வைத்திருக்க வேண்டும்.

கொழும்பில் தங்கியுள்ள தமிழர்கள் வதிவிடப் பதிவுத் துண்டுகளுடன்தான் வெளியில் நடமாட வேண்டியுள்ளது. அதேபோல் யாழ்ப்பாணத்திலும் விசேட அட்டைகளுடன் தான் வெளியே நடமாடமுடியும்.

யாழ் குடாநாட்டில் படையினர் நிலை கொள்ளாத பகுதியில் உள்ளோரையும் விசேட அட்டைகள் மூலம் சுலபமாக இனம் காண முடிகிறது. ஏனைய பகுதிகளில் உள்ளோரை விட அவர்கள்மீது விசேட கவனிப்பு செலுத்தப்படுகிறதாம்.

### கழுத்தை நெரித்துக் கொலை!

யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் மீசாலை வடக்கில் ஒரு குடும்பப் பெண் இரவோடு இரவாக கொலை செய்யப்பட்டார்.

சுலோசனா செல்வராஜா (வயது 47) என்னும் பெண்ணே கொலை செய்யப்பட்டவராவார். இவரது கணவர் வெளிநாட்டில் வேலை பார்த்துவருகிறார். தனியாகவே இவர் வீட்டில் வசித்துவந்தார்.

கைகள் பின்னால் கட்டப்பட்டும், கழுத்தில் கயிற்றினால் சுருக்கிடப்பட்டும் அவர் கொல்லப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

வீட்டின் பக்கமுள்ள கிணற்றுக்கு அருகில் இவரது உடல் கிடந்தது. கொலையாளிகள் கூட்டில் இருந்த கோழிகளையும் திருடிச் சென்றுள்ளனர்.

### தமிழகத்தில் மாபெரும் பேரணி

ஈழத் தமிழருக்கு ஆதரவாக எதிர்வரும் பெப்ரவரி மாதம் தமிழகத்தில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்படவிருக்கிறது. பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் ராமதாஸ் தலைமையில் இப் பேரணி நடைபெறவுள்ளது.

இதேவேளை, கச்சதீவுக் கடற்பகுதியில் இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டது தொடர்பாக தமிழக முதல்வர் கருணாநிதி கண்டனம் தெரிவித்துள்ளார். இச் சம்பவம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு இந்திய மத்திய அரசிடம் கேட்டுள்ளார்.

## திருமலையில் புலிகள் திடீர் சுற்றிவளைப்பு

## இராணுவ ரோந்து அணிமீது தாக்குதல்!

கிழக்கு மாகாணத்தில் திருக்கோணமலை மாவட்டத்தில் நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக புலிகள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

27.12.96 அன்று கெப்பிட்டிக் கொலாவை- பதவியா வீதியில் சிறீலங்கா இராணுவ ரோந்துப் படையணிமீது தாக்குதல் நடத்தப்பட்டது.

அன்று காலை 7.45 மணியளவில் கவச வாகனங்கள், டிரக் வண்டிகள், மற்றும் மோட்டார் சைக்கிள்களைக் கொண்ட இராணுவ வாகனத் தொடர் வந்து கொண்டிருந்தது.

அவ்வாகனத் தொடரை திடீரென்று சுற்றிவளைத்து விடுதலைப் புலிகள் தாக்கினார்கள். பத்து நிமிடங்கள் மட்டுமே நடைபெற்ற தாக்குதலில் 10க்கு மேற்பட்ட இராணுவத்தினர் பலியானார்கள். நான்கு கவச வாகனங்களும், இரண்டு மோட்டார் சைக்கிள்களும் தாக்கி அழிக்கப்பட்டன.

பதவியாவிலிருந்து உதவிக்கு விரைந்த இராணுவ அணிமீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. விடுதலைப் புலிகள் தரப்பில் எவ்வித இழப்பும் ஏற்படவில்லை. ஆயுதங்கள், இராணுவ உபகரணங்கள் என்பவையும் கைப்பற்றப்பட்டன என்று புலிகளின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

இம் மோதலில் தமது தரப்பில் ஒன்பது இராணுவத்தினரே பலியானதாகவும், தாக்குதல் முறியடிக்கப்பட்டதாகவும் படையினர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வீட்டுக் காவலில் அன்ரன் பாலசிங்கம்!

## எவரையும் சந்திக்க அனுமதி இல்லை

விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக 'முரசு' பலமாதங்களுக்கு முன்னர் செய்தி வெளியிட்டமை தெரிந்ததே.

கடந்த நவம்பர் மாதம் இடம்பெற்ற மாவீரர் தின நிகழ்ச்சிகளில் அன்ரன் பாலசிங்கம் கலந்துகொள்ள அனுமதிக்கப்படவில்லை.

சமீபத்தில் வன்னி சென்ற புலிகள் இயக்கத்துடன் தொடர்புடைய பிரமுகர் ஒருவர் அன்ரன் பாலசிங்கத்தை சந்திக்க விருப்பம் தெரிவித்திருந்தார்.

சந்திக்கலாம் என்று முதலில் கூறப்பட்டதாம். பின்னர் மீண்டும் கேட்டபோது சந்திக்கக்கூடிய நிலையில் அவர் இல்லை என்று புலிகள் இயக்கத்தினரால் தெரிவிக்கப்பட்டதாம்.

வன்னியில் வசதியான வீடொன்றில் அன்ரன் பாலசிங்கம் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை அன்ரன் பாலசிங்கத்தின் பாரியாரான அடேல் பாலசிங்கம் புலிகள் இயக்க மகளிர் பிரிவில் தொடர்ந்து செயற்பட்டு வருகிறார்.

அதனால் அன்ரன் பாலசிங்கம் ஒரு குறிப்பிட்ட கால ஒழுங்கு நடவடிக்கைக்குப் பின்னர் மீண்டும் இயக்க நடவடிக்கைகளில் சேர்த்துக் கொள்ளப்படலாம் என்று கருதப்படுகிறது.

யாழ் குடாநாடு படையினரால் கைப்பற்றப்பட்ட பின்னர் தனக்கு நெருக்கமான சிலருடன் இயக்கம் தொடர்பாக விமர்சித்தமை சம்பந்தமாகவே ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

### "தமிழக அரசு ஒதுங்கி நிற்கட்டும்"

### விகடன் சஞ்சிகை தெரிவிப்பு

"இலங்கைப் பிரச்சனையில் தமிழக அரசு தலையிடத் தேவையில்லை. 'விடுதலைப் புலிகளுக்கு அதரவு' என்பது தமிழ் நாட்டில் சாத்தியமில்லாத ஒன்று." இவ்வாறு தமிழக சஞ்சிகையான ஆனந்த விகடன் தனது ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

'ஆனந்த விகடன்' அசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

"ஈழப் பிரச்சனையையும், விடுதலைப் புலிகளையும் தனித்தனியாகப் பிரிக்க முடியாது என்பது தமிழக மக்களுக்கு தெரியாமல் இல்லை. ஆனால் தமிழர் என்ற உணர்ச்சியோடு மட்டும் இந்தப் பிரச்சனையை அணுக முடியாது. இதைக் கையாள தேசிய அடிப்படையிலான நுணுக்கமான ராஜதந்திரம் தேவை. மாநில அரசுக்கு இது குருவி தலையில் பனங்காய். எதைச் செய்ய வேண்டுமோ அதை மத்திய அரசு செய்யட்டும். நாம் விலகியே நிற்போம்.

இதுதான் இன்று தமிழக மக்கள் இந்த விஷயத்தில் திடமாக எடுத்திருக்கும் ஒருமித்த முடிவு" என்று ஆனந்த விகடன் தலையங்கம் தீட்டியுள்ளது.

பாட்டாளி மக்கள் கட்சி மீதும் அச் சஞ்சிகை கண்டனம் தெரிவித்துள்ளது.

## பலம் குறைந்த முகாம்களை மூடுக!

## கிழக்கிலுள்ள அதிரடிப்படையினர் கோரிக்கை!

கிழக்குப் பிராந்தியத்தில்-மட்டக்களப்புக்குத் தெற்கேயும் அம்பாறையிலும் கடமையிலீடுபட்டுள்ள விசேட அதிரடிப்படை அணியினர் (எஸ்.ரி.எஃப்) இப்போதுள்ள சூழ்நிலையில், அந்தப் பகுதிகளில் தொடர்ந்து கடமையிலீடுபட முடியாதிருப்பதாக பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவித்திருப்பதாகத் தெரிகிறது. தங்கள் முகாம்களை எல்.ரி.ரி.ஈ.யினரின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பதற்கேற்ற வீரர்கள் போதுமான அளவு இல்லாதிருப்பதால் சில முகாம்களை மூடிவிடுமாறு அமைச்சிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளதாம்.

அதிரடிப்படை நடவடிக்கைகளுக்கு பொறுப்பாகவிருந்த பிரதி பொலிஸ் மா அதிபர் உப்பாலி சகாபந்து, அண்மையில் [illegible]முனைக்குடியில் வைத்து எல்.ரி.ரி.ஈ.யின் [illegible]காலைப் படையைச் சேர்ந்த ஒருவரால் [illegible]ப்பட்டதைத் தொடர்ந்து இவ்வணியில் [illegible]ருப்திகள் தோன்றியிருப்பதாகக் கூறப்படுகிறது.

மட்டக்களப்பு தெற்கிலும் அம்பாறை மாவட்டத்திலும் மொத்தம் 52 அதிரடிப் படைப்பிரிவு முகாம்கள் உள்ளன. ஆனால் இவற்றில் கடமை பார்க்கும் வீரர்கள் தொகை மிகக் குறைவாகவே காணப்படுகிறது. இதனால் புலிகள் முழுவலிமையுடன் முகாம்களைச் சுற்றி வளைத்துத் தாக்கும்போது பலத்த பின்னடைவுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இம்முகாம்கள் ஒவ்வொன்றிலும் 100 வீரர்களுக்கும் குறைவாகவே உள்ளனர்.

மட்டக்களப்பு-களுவாஞ்சிக்குடி முதல் அம்பாறை மாவட்ட எல்லையிலுள்ள பாணமைவரை சுமார் 5000 அதிரடிப் படையினரே சேவையிலீடுபட்டுள்ளனர்.

1995ல் புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் முறிவடைந்ததைத் தொடர்ந்து புலிகளுக்கும் அதிரடிப் படையினருக்குமிடையில் ஏற்பட்ட மோதல்களில் பல அதிகாரிகள் உட்பட 200க்கு மேற்பட்ட வீரர்கள் உயிரிழந்துள்ளனர். பின்னர் மட்டக்களப்பு-புதுக்குடியிருப்பு, வெல்லாவெளி மற்றும் அண்மையில் இடம்பெற்ற புலுக்குணாவ ஆகிய இடங்களில் எல்.ரி.ரி.ஈ.யினர் நடத்திய தாக்குதல்களில் மேலும் 150 பேர் வரை உயிரிழந்துள்ளனர். இதுதவிர தங்கள் 10 வருடகால சேவையை முடித்துக் கொண்டு கணிசமான தொகையினர் அணியிலிருந்து விலகிச் செல்கின்றனர்.

அதிரடிப்படைக்கு மேலும் வீரர்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டு அணிகள் பலப்படுத்தப்படாவிட்டால், எல்.ரி.ரி.ஈ.யினர் நன்கு திட்டமிட்டு நடத்தும் திடீர்த்தாக்குதல்களைத் தம்மால் சமாளிக்க முடியாமற் போய்விடும் என்றும் வீரர்களின் பேரழிவையே சந்திக்க வேண்டிவரும் என்றும் இவ்வணியுடன் தொடர்புடைய பேச்சாளர் கூறியதாக கொழும்பு ஆங்கில வார ஏடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# பஸ்ஸினுள் குடை பிடிக்கும் பயணிகள்!

## இடை நடுவில் காலை வாரும் பயணங்கள்!!

(மன்னார் மாவட்ட நிருபர்)

மன்னார்ப் பகுதியில் தற்போது பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் வீதிகளில் நீர் தேங்கி நின்று பாதையை மூடி வருகின்றது.

இப் பகுதியில் சேவையிலீடுபடும் பஸ்கள் மிக மிகப் பழமை வாய்ந்தவை. பஸ்ஸின் கூரைகள் ஆட்டம் கண்டு விட்டன. மழை பெய்யும்போது பஸ் கூரையில் காணப்படும் ஓட்டைகளால் நீர் வடிகின்றது. இதனால் பஸ்ஸினுள்ளும் குடை பிடிக்க வேண்டிய நிலை பயணிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

23, 29, 30, 60 போன்ற தொடரிலக்கங்களைக் கொண்ட பஸ்களே இங்குள்ளன. இவற்றை மீளத் திருத்தித் திருத்தியே சேவையிலீடுபடுத்தப்படுகிறது. சில வேளைகளில் இந்த பஸ்கள் இடை நடுவில் மூச்சை நிறுத்தி விடுகின்றன.

மிகவும் இக்கட்டானதொரு காலகட்டத்திலும் வ.பி.போ.ச.வின் கீழ் இயங்கும் மன்னார்ச்சாலை நிர்வாகம் சறுசுறுப்புடன் இயங்குவதாலேயே இங்கு பஸ்கள் ஓடுகின்றன. இங்கு 10 பஸ்கள் மட்டுமே உள்ளன. புதிய பஸ்கள் எதுவுமே இல்லை.

இதேவேளை, மன்னார்-தலை மன்னார் வீதியில் 5ஆம் கட்டை முதல் தலை மன்னார் வரை பாதையில் நீர் தேங்கி குளமாக காட்சி தருகிறது. இதனால் இப்பாதையால் தொடர்ந்தும் பஸ் சேவை நடத்துவதில் பிரச்சனைகள் தோன்றியுள்ளன.

மன்னார் புதிய பஸ் நிலையத்திலும் மழை பெய்தவுடன் பெரும் குளம் தோன்றி விடுகிறது. நீண்டகாலமாக இருந்து வரும் இக்குறைபாடு இது வரைக்கும் நிவர்த்திக்கப் படவில்லை.

அத்துடன் இங்குள்ள பஸ்களின் படிகள் மிகவும் உயரமாகவே வைக்கப்பட்டுள்ளன. வீதிகளின் நிலைமையைக் கருத்திற்கொண்டே இவ்வாறு வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப் பட்டுள்ளது. இதனால் படிக்குக் கீழே சிறு ஏணியோ அல்லது பலகைப் பெட்டிகளோ வைத்துத்தான் பயணிகளை ஏற்ற வேண்டி இருக்கிறது.

# கொட்டும் மழையிலும் தொடரும் சோதனை!

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் தற்போது பலத்த மழை பெய்து வருவதால், குளம், குட்டை எல்லாம் நிரம்பி வழிவதுடன் நுளம்புகளும் ஏராளமாய்ப் பெருகிவிட்டன.

இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் முழுவதிலும் மழையையும் பொருட்படுத்தாது சோதனை நடவடிக்கைகளை தீவிரமாக்கியுள்ள இராணுவத்தினர், பாதுகாப்பைப் பலப்படுத்தி வருகின்றனர்.

கொட்டும் மழையையும் பாராமல் பஸ்ஸில் வரும் பயணிகள் சோதிக்கப்படுகின்றனர். பஸ்ஸின் பகுதிகளும் கடுமையான சோதனைக்குட்படுத்தப்படுகின்றன.

கடந்த 11.12.1996ல் ஆரம்பமான க.பொ.த. (சா/த) பரீட்சை பெருநிலப்பரப்பு உட்பட மாவட்டத்தில் 20 பரீட்சை நிலையங்களில் மிகவும் அமைதியான முறையில் நடைபெற்றது.

இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்த 10 பரீட்சை நிலையங்களிலும் இராணுவத்தினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர். மண்டபத்தின் உட்பகுதியிலும், வெளிப் பகுதியிலும் இவர்கள் காவல் புரிந்தனர்.

பூநகரி இராணுவ முகாமிலிருந்த படையினர் மன்னார்த்தீவில் ஏராளமாகக் குவிக்கப்பட்டுள்ளதால் அதிகமான ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். காடுகளிலும் இவர்கள் தினமும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் அன்றாடத் தொழிலாளர்கள் காடுகளுக்குச் செல்ல அஞ்சுகின்றனர்.

# மட்டக்களப்பில் நெசவு நிலையம்

## யாழ் மாவட்ட பா.உ. உதவி

யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மட்டக்களப்பு மாவட்ட ஈ.பி.டி.பி. பிரதம அமைப்பாளருமான அ.இராசமாணிக்கம் எம்.பி.யின் நிதி ஒதுக்கீட்டில் செட்டிபாளையத்தில் ரூ.5லட்சம் செலவில் நெசவு நிலையம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டுவிழா 08/12/96 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த அடிக்கல் நாட்டு விழாவில் இளைஞர் சேவைகள் மன்றத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் பொன். செல்வநாயகம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தார்.

பொன், செல்வநாயகம் அங்கு உரையாற்றுகையில், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான அ.இராசமாணிக்கம் பெருந்தொகையான நிதி ஒதுக்கீட்டில் செட்டிபாளைய மக்களின் நலன் கருதி அமைக்க இருக்கும் இந் நெசவுக்கட்டிடம் பல வகையிலும் இப்பகுதி மக்களுக்கு தொழில் ஊக்குவிப்பை ஏற்படுத்தும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை, என்று தெரிவித்தார். இப்பகுதி மக்கள் அவரின் சேவையை பாராட்டுவதுடன் முழு ஒத்துழைப்பையும் எதிர்காலத்தில் வழங்க வேண்டும் எனக்கூறினார்.

செட்டிபாளையத்தில் உளள 40 யுவதிகள் தற்பொழுது மாங்காட்டில் அமைந்துள்ள நெசவுக் கட்டிடமொன்றுக்கே சென்று வருகின்றனர்.

இவ்விழாவில் ஊர் மக்கள் பலரும் கலந்துகொண்டனர். செட்டிபாளைய கிராம அபிவிருத்தி சங்கத்தலைவர் திரு.க.பரமானந்தம் விழாவிற்கு தலைமை தாங்கினார்.

# ஊனமுற்றோருக்கு உதவும் திட்டம்

(ஏறாவூர் நிருபர்)

ஏறாவூர்ப்பற்று செங்கலடிப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அனைத்து ஊனமுற்ற மாணவர்கட்கும் உதவும் திட்டமொன்றைத் துவங்கவிருப்பதாகப் பிரதேச செயலாளர் திரு.என். ஸ்ரீசங்கர் தெரிவிக்கிறார்.

வடக்கு கிழக்கு மாகாண சமூக சேவைத் திணைக்களம் இத்திட்டத்திற்கு உதவியளிக்கவிருக்கிறது.

இத்திட்டத்தின் கீழ் கண்பார்வை குறைந்தவர்களுக்கு மூக்கு கண்ணாடிகளும், நடக்க இயலாதவர்களுக்கு ஊன்று கோல்கள், ஜெய்பூர் கால்கள், சக்கர நாற்காலி வண்டிகள் என்பனவும் செவிப்புலனற்றோருக்குக் கேட்கும் கருவிகளும் வழங்கப்படவிருக்கின்றன.

இத்தகைய குறைபாடுள்ள அங்கவீனர்களை சமூகம் ஒதுக்கிவைக்கக்கூடாது. அங்கவீனர் சமூகத்தில் அங்கத்தவர் என்பதை சகலரும் ஏற்றுக்கொள்ளவேண்டும். அவர்களை வளமுள்ளவர்களாக ஆக்கும் நல்லெண்ணத்தை வளர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளும் பிரதேச செயலாளர் ஸ்ரீ சங்கர், இத்திட்டத்தைச் செவ்வனே அமுல்படுத்த சகலதரப்பினரும் தம்மாலான ஒத்துழைப்பை வழங்கவேண்டுமென்றும் கோருகிறார்.

# ஓய்வு பெறும் பத்தாயிரம் ஆசிரியர்கள்

## கண்டியில் வெற்றிடங்கள் ஏற்படுமா?

(கண்டி நிருபர்)

அரசாங்க ஊழியர்களுக்கான புதிய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் கண்டி மாவட்டத்திலிருந்து சுமார் 10,000 ஆசிரியர்கள் ஓய்வில் செல்வார்களென எதிர்பார்க்கப் படுகின்றது.

கண்டி மாவட்டத்தில் உள்ள நூறுக்கும் மேற்பட்ட முஸ்லிம் பாடசாலைகளில் இருந்து நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் 55 வயதைத் தாண்டிய நிலையில் ஓய்வில் செல்ல விண்ணப்பித்திருப்பதாக ஆசிரியர் வட்டாரம் தெரிவித்தது. இதேபோன்று தமிழ்- சிங்கள ஆசிரியர்களும் இவ்வாறு ஓய்வில் செல்ல இருப்பதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் இவ்வாறு செல்வதால் கண்டி, மாத்தளை மாவட்டங்களில் இயங்கும் முஸ்லிம் பாடசாலைகளில் அதிபர்களுக்கான வெற்றிடங்கள் பல ஏற்படும் எனவும் கூறப்படுகின்றது.

முஸ்லிம் பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடங்களும் இதன் விளைவாக ஏற்படும் எனவும் சில அதிகாரிகள் 'தினமுரசு'க்குத் தெரிவித்தனர்.

# வன்னியில் வீதியில் மரணம்

வன்னிப் பகுதியில் கடும் மழை பொழிந்துகொண்டிருந்தபோதும் எறிகணை வீச்சுக்கள் இடம்பெற்றன. இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த தற்காலிக குடியிருப்புக்களும் எறிகணை வீச்சால் சேதமடைந்தன.

வன்னிப் பகுதியில் தொற்றுநோய்கள், மலேரியாக்காய்ச்சல் போன்றவை பரவி வருகின்றன. முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் வீதியால் நடந்து சென்றுகொண்டிருந்த மலேரியா நோயாளி ஒருவர் அவ்வீதியில் விழுந்து இறந்துள்ளார். கந்தசாமி வினோதினி என்னும் 18 வயதுப் பெண்ணே அவ்வாறு மரணமாகியுள்ளார்.

வன்னிப்பகுதிக்கு தேவையான மருந்துப் பொருட்களுக்காக விடுக்கப்பட்ட வேண்டுகோளை சுகாதார அமைச்சு நிராகரித்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தாமதமாகும் தபால் விநியோகம்

பதுளைப் பகுதி தோட்டங்களில் தபால் விநியோகம் மிகவும் சீரற்ற நிலையில் காணப்படுவதாக பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

நகர்ப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் தபால்காரர்கள் மூலமாக நேரடியாக கடிதங்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. ஆனால் தோட்டங்களில் நேரடித் தபால் விநியோகம் நடைமுறையில் இல்லை. தபால் நிலையத்திலிருந்து கொண்டு வரப்படும் கடிதங்கள், தந்தி, மணியோடர் போன்றவைகள் தோட்டக் காரியாலயத்தில் அல்லது வெளிக்கள உத்தியோகத்தர்களின் காரியாலயங்களிலேயே வைக்கப்படுகின்றன. அவசரக் கடிதங்கள், மணியோடர்கள், உரிய நேரத்தில் விலாசதாரர்களுக்குக் கிடைப்பதில்லை.

சில சமயங்களில் நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற வேண்டிய திகதிக்குப் பின்பே கடிதங்கள் விலாசதாரர்களுக்கு கிடைக்கின்றன. இக் குறைபாட்டை நீக்க தோட்ட நிர்வாகங்கள் தனியாக தபால்காரர் ஒருவரை தோட்ட வாரியாக நியமித்து நேரடியாகக் கடிதங்கள் கிடைக்க வழி செய்ய வேண்டும் எனவும் பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

எஸ்.கே. ராஜரட்ணம்-ஹாலி-எல.

# அதிகாரப் பரவலாக்கல் வேண்டாம்!

## புதிய பிக்குமார் சபை உதயம்.

"தமிழர்களின் பாரம்பரியத் தாயகம் என்ற கோட்பாட்டை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளக்கூடாது. அவ்வாறு ஏற்றுக் கொண்டு அதிகாரப் பரவலாக்கல் மூலம் சமஷ்டி முறையை ஏற்படுத்த முயலக் கூடாது. அப்படிச் செய்தால் நாட்டில் பாரதூரமான விளைவுகள் ஏற்படும்."

இவ்வாறு பௌத்த பிக்குமார்களின் அமைப்புக்களில் ஒன்றான 'தேசிய சங்கசபை' தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

சமீபத்தில் கொழும்பிலுள்ள பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் 'தேசிய சங்கசபை' என்னும் புதிய அமைப்பு தொடங்கப்பட்டுள்ளது. நாடு முழுவதிலும் இருந்து 20 ஆயிரம் பிக்குகளை 'தேசிய சங்கசபை' யில் சேர்ப்பது என்றும் முடிவு செய்துள்ளனர். இனப்பிரச்சனைத் தீர்வுக்கான அரசியல் தீர்வு முயற்சிகளுக்கு மற்றொரு சவாலாக இந்தச் சபை உருவாகியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.


## சாயி கல்வி வெளியீடுகள்

G. C. E. (A/L) புதிய பாடத்திட்டத்திற்கான

| | |
|---|---|
| மனித உயிரியல் Part - 1 | 150/= |
| மனித உயிரியல் Part - 2 | 160/= |
| பிறப்புரிமையியல் | 100/= |

G. C. E. (O/L) மாணவர்களுக்கான

| | |
|---|---|
| அடிப்படை இலத்திரனியல் (விளக்கங்களுடன்) | 60/= |
| விஞ்ஞானம் - பரீட்சை வழிகாட்டி (10 மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன்) | 120/= |

சகல புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்

SAI EDUCATIONAL PUBLICATIONS
155, Canal Road, Colombo - 06 Phone : 592707

## EFFECTIVE ENGLISH WITH GRAMMAR AND SPOKEN ENGLISH

செயற்திறனுடைய ஆங்கில இலக்கணமும் பேச்சு ஆங்கிலமும்

- ஆங்கிலச் சொற்கள் ஆயிரக்கணக்கில் தெரிந்திருந்தும் ஆங்கிலம் பேச முடியவில்லையே!
- பேசும் ஆங்கில வகுப்புக்கு பலரிடம் சென்றும் ஆங்கிலம் பேச முடியவில்லையே!
- ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்ற விருப்பம், ஆனால் தவறாக பேசி விடுவோமா என்ற தயக்கம்

**இவை தானே உங்கள் பிரச்சனை**

நீங்கள் பாடசாலையில் ஆங்கிலத்தைப் பரீட்சைக்காகப் படித்தீர்களே அன்றி, அதைப் பேசப் பயிற்சி பெறவில்லை. இதுவே பெரிய குறைபாடு.

இதனை நன்குணர்ந்த எமது நிறுவனம் சிறந்த முறையில் பேச்சு ஆங்கிலத்தை உங்கள் நாவிலிருந்து சரளமாக எளிய முறையில் வெளிக் கொணரவுள்ளது. நவீன உளவியல் ரீதியில் மாணவர் உவந்தேற்கும் முறையில் பன்னிரண்டு (12) பாடப் புத்தகங்களை அடிப்படையாகக் கொண்ட தபால் மூலமான கல்வி நெறி.

விபரங்களுக்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

பேச்சு ஆங்கிலம் நேரடி வகுப்புகள் பிரைட் இயக்குனர் PON. SAKTHIVEL அவர்களால் ACA நிறுவனத்தில் NO.55. ST. LUCIAS STREET. COLOMBO - 13ல் ஞாயிற்றுக்கிழமைகளில் கற்பிக்கப்படும்.

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S -27, First Floor, P. O. Box 162,
Colombo Central Super Market Complex,
Colombo - 11. T. P. 434770

## விளம்பரப் பகுதி

உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
+
எப்பேர்ப்பட்ட வியாதியாயினும் சரி உடனே என்னை சந்தியுங்கள்



**K. சிவசுப்பிரமணியம்**
M.I.H. Ind. S.M.P.

எவ்வளவு நாள்பட்ட வியாதியானாலும் சரி. காலதாமதம் செய்யாமல் கீழ்கண்ட வியாதிகளுக்கு நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வர முடியாது போனால் கடிதம் மூலம் தெரிவித்துக் கொள்ளுங்கள்.

ஆஸ்மா. க்ஷயம். இளைப்பு. பீனிசம். தலைவலி. மலேரியா. கண்டமாலை. சொறி. சிரங்கு. பாண்டு. ரோகை. காக்கை வலிப்பு. வாதம். நீரிழிவு. மூலரோகங்கள். இருதய நோய்கள். இடுப்புவலி. நெஞ்சு எரிவு. குடல்வாய்வு. நரம்புத் தளர்ச்சி. வீரியக் குறைவு. இரத்தமின்மை. சொப்பன ஸ்கலிதம். பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு. மாசம் முன். பின் காணுதல். சூதகவலி. பிள்ளை இல்லாமலிருத்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

வார நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் விடுமுறை தினங்களில் காலை 9 மணி முதல் பகல் 12 மணி வரை வைத்தியரை சந்திக்கலாம்.

**முருகானந்தா வைத்தியசாலை**
No. G/02, கொழும்பு மத்திய சுப்பர் மார்க்கெட், (நிலமாடி) மீன்கடை மேல், கொழும்பு - 11.

## ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 225/=,125/=
தங்க பஸ்பம் கலந்தது 1025/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 925=

**ஞான சுந்தர வைத்தியசாலை**
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398




செல்விகள் றொசாரியும் மரிஷாவும் இரட்டைச் சகோதரிகள். இருவருக்கும் 22 வயதாகிறது. றொசாரி கனகரட்ணம் விதிவசத்தால் தனது 20வது வயதில் இரத்தப்புற்று நோயின் (லுக்கேமியா) பாதிப்புக்குள்ளானார். உள்நாட்டில் மருத்துவம் எதுவும் பலனளிக்கவில்லை. இந்தியாவில் சென்னை அப்பலோ மருத்துவமனையில் எலும்புமச்சை மாற்றீடு (BONE MARROW TRANSPLANT) செய்தால் மட்டுமே உயிர் பிழைப்பார். சகோதரி மரிஷா எலும்புமச்சை அளிக்க முன்வந்துள்ளார். இச்சிகிச்சைக்கு இந்திய ரூபா சுமார் 22 1/2 இலட்சம் செலவாகும். உதவவிரும்புவோரும் ஸ்தாபனங்களும் கந்தானை அரிமா கழகம் 306 B அமைப்புடன் தொடர்பு கொள்ளுமாறு அல்லது 'றொசாரி பண்ட்', அரிமா கழகம் 306B, மக்கள் வங்கி, கந்தானை-36955ம் இலக்கக் கணக்குக்கு பணம் அனுப்பிவைக்குமாறு அன்பாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.


**UNION**
யூனியன் மோட்டிஸ் கதவு பூட்டுக்கள்
Single, Double, Night Latch & Sliding Locks, (English Origin)

**றம்சன்ஸ்**
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 4344




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

நாரதர்

# பாடாத மீன்களும் பாடப்போகும் துப்பாக்கிகளும்

## 97ல் கிழக்கில் கிடுக்கிப்பிடி

அம்பாறை மாவட்டத்தில் விசேஷ அதிரடிப்படை முகாம்மீது புலிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்து படையினர் 'பாடும் மீன்' நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

மீன் பாடத்தொடங்க முன்னரே புலிகள் தமது கெரில்லா பிரதேசங்களில் இருந்து வெளியேறிச் சென்றுவிட்டனர்.

தாக்குதல் நடவடிக்கை ஒன்றில் புலிகள் ஈடுபட்டபின்னர், பதிலடி நடவடிக்கையில் படையினர் குதிப்பர் என்றே எதிர்பார்ப்பார்கள்.

கிழக்கில் புலிகள் விரும்புவது நேரடி மோதல்களையல்ல; தமக்குச் சாதகமான சண்டை முனைகளில் போரிடவே புலிகள் விரும்புகின்றனர்.

கிழக்கில் புலிகளைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் பெரும் நிலப்பகுதிகளில் படையினர் பரவலாக நிலைகொண்டிருக்க வேண்டும்.

அவ்வாறு நிலைகொண்டிருப்பதற்கு பெரும்தொகையான படையினர் தேவைப்படுவர். குறைந்தது 500 படையினராவது ஒவ்வொரு முகாமிலும் இருக்க வேண்டும். முகாம்களுக்கிடையே தொடர்புகள் இருக்கக் கூடிய வகையில் தொடர்ச்சியான இராணுவ வேலியாக முகாம்கள் நிறுவப்பட வேண்டியிருக்கும்.

இல்லாவிட்டால் புலிகளின் கெரில்லாத் தாக்குதலுக்கு இலக்காக வேண்டி வரும்.

ஆட்பலரீதியிலும், ஆயுத பலரீதியிலும் கிழக்கில் புலிகளின் பலம் உயர்ந்துள்ளது.

சொர்ணம், கருணா, ராம் போன்ற முக்கிய தளபதிகளை கிழக்குக்கு பிரபாகரன் அனுப்பிவைத்திருக்கிறார்.

**முழுக்க முழுக்க கெரில்லா யுத்த தந்திரத்தின் அடிப்படையிலேயே கிழக்கு மாகாணத்தில் புலிகளின் இராணுவ நகர்வுகள் திட்டமிடப்பட்டுள்ளன.**

கிழக்கில் படையினர் இல்லாத பகுதிகளில் புலிகள் நிர்வாகம் நடத்துகிறார்கள். அலுவலகங்களை வைத்திருக்கிறார்கள்.

ஆனால் அவை கெரில்லா பிரதேசங்களே தவிர, நிரந்தரமான தளப்பிரதேசங்கள் அல்ல.

முன்னர் யாழ்ப்பாணத்திலும், இப்போது வன்னியிலும் புலிகள் தளப்பிரதேசத்தைக் கொண்டிருக்கிறார்கள்.

தளப்பிரதேசத்துக்கும், கெரில்லாப் பிரதேசத்துக்கும் இடையே வித்தியாசம் இருக்கிறது.

போருக்கான விநியோகம், கட்டளைகள், திட்டமிடல்கள் போன்றவை தளப்பிரதேசத்தில் இருந்தே மேற்கொள்ளப்படும்.

தளப்பிரதேசத்தை பாதுகாக்க நிரந்தரப் படையணியும் இருக்கும். அதனால் குறிப்பிட்ட தளப்பிரதேசத்தை கைப்பற்றுவதற்கு மறு தரப்பு கடுமையாகப் போராட வேண்டியிருக்கும்.

புலிகளின் வன்னித் தளத்தை படையினர் கைப்பற்றுவதானால் புலிகளின் கடும் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டும். சுலபமாக தளப்பிரதேசம் விழாது.

யாழ் குடாநாடு புலிகளின் தளப்பிரதேசமாக இருந்தபோது அதனையும் சுலபமாகக் கைப்பற்ற முடியவில்லை. படைபல குவிப்பு மூலமும், அதிகளவிலான கனரக ஆயுதப் பிரயோகங்கள் மூலமும் மூர்க்கத்தனமான பலப்பிரயோகம் மூலமுமாகவே யாழ் குடாநாட்டை படையினர் கைப்பற்ற முடிந்தது.

மறுதரப்பின் படைபலம் தம்மைவிடப் பல மடங்கு மேலோங்கிய நிலையில்தான் தளப்பிரதேசத்தை கைவிட்டு புலிகள் பின்வாங்கினார்கள்.

அதாவது தளப்பிரதேசங்களும் மாறக்கூடியவை. ஆனால் அடிக்கடி மாறிக்கொண்டிருக்காது. குறிப்பிட்ட கால கட்டத்திற்காவது தளப்பிரதேசத்தைப் பாதுகாக்கும் படைவலிமை உள்ளபோது தான் தளப் பிரதேசம் உருவாகிறது.

யாழ் குடாநாடு படையினர் வசம் சென்ற பின்னரும், அங்கு படையினர் நிலைகொள்ளாத பகுதிகளில் புலிகள் இருக்கிறார்கள்.

இரண்டுவிதமாக புலிகளின் செயற்பாடு அங்கு காணப்படுகிறது.

1. **நடமாடும் கெரில்லாக்கள்.**
2. **தற்காலிக கெரில்லா பிரதேசங்கள்.**

ஒரு இடத்தில் நிலையாகத் தங்கியிருக்காமல் தமது இருப்பிடங்களை கெரில்லாக்கள் மாற்றிக்கொண்டே இருப்பார்கள். திடீரென்று தோன்றித் தாக்குதல் நடத்திவிட்டு மறைந்து விடுவார்கள். அதுதான் நடமாடும் கெரில்லா அணிகளின் தந்திரம்.

சில பகுதிகளில் முகாம்களை அமைத்து கெரில்லாக்கள் தங்கியிருப்பர். படையினர் முன்னேறி வருவதாகத் தெரிந்தால் முகாங்களை கைவிட்டு தப்பிச் சென்றுவிடுவர். அந்தப் பகுதிகள் கெரில்லாப் பிரதேசங்கள் என்று அழைக்கப்படும்.

யாழ் குடாநாட்டில் பெரும்பாலும் நடமாடும் கெரில்லாக் குழுக்களாகவே புலிகளின் அணிகள் இயங்கிவருகின்றன.

சில பகுதிகளில் பகலில் படையினர், இரவில் புலிகள் என்ற நிலை காணப்படுகிறது.

கிழக்கு மாகாணத்திலும் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் பலவற்றில் இரவில் புலிகளின் கெரில்லாக்கள் நடமாடுகின்றனர்.

அதேவேளையில், படையினர் சுலபமாக, அல்லது குறைந்த பலத்தோடு முன்னேறிச் செல்ல முடியாத பகுதிகளை புலிகள் தமது கெரில்லாப் பிரதேசங்களாக மாற்றிக்கொள்கின்றனர்.

எப்போதும் கைவிட்டுச் செல்லக்கூடிய நிலையில்தான் கெரில்லாப் பிரதேசத்தில் உள்ள அணிகளின் செயற்பாடுகள் அமைந்திருக்கும்.

படையினர் பலத்தோடு முன்னேறும் போது கெரில்லாப் பிரதேசத்தை கைவிட்டுச் செல்வது; படையினர் திரும்பிச் சென்ற பின்னர் மீண்டும் அங்கு வருவது என்பது தான் புலிகளின் நடைமுறையாக இருக்கும்.

**எனவே கிழக்கில் புலிகளின் கெரில்லாப் பிரதேசங்களுக்குத் தாம் சென்று திரும்பி வருவதை புலிகளைப் பலவீனப்படுத்தும் நடவடிக்கையாக படையினர் சித்தரிப்பது சரியாக இருக்காது.**

**புலிகளின் கெரில்லா தளப்பிரதேசங்களை படையினர் கைப்பற்றி நிலைகொண்டிருந்தால்தான் இராணுவரீதியில் தமது பலத்தை விஸ்தரித்துள்ளனர் என்று கருத முடியும்.**

புலிகளின் தளம் நோக்கி படையினர் நகர்வு என்றே செய்திகள் வெளியிடப்படுகின்றன. தளமும் கெரில்லாத் தளப்பிரதேசமும் இராணுவரீதியில் வெவ்வேறானவை. பலம், பலவீனம் தொடர்பாக வேறுபட்ட குணாம்சங்களைக் கொண்டிருப்பவை.

**கெரில்லாப் தளப்பிரதேசம் என்பதின் முக்கிய குணாம்சமே அடிக்கடி கைமாறிக் கொண்டிருக்கும் என்பதுதான்.**

புலிகள் வடக்கில் ஒரு பலமான, பரந்த தளப்பிரதேசத்தையும், கிழக்கில் பகுதி பகுதியாக பரவலான கெரில்லா தளப்பிரதேசங்களையும் கொண்டிருக்கின்றனர்.

கடந்த பதின்மூன்று வருட கால யுத்தத்தில் தமது தளப்பிரதேசத்தை இரண்டு தடவைகள் புலிகள் மாற்றிக்கொண்டனர்.

இந்தியப் படை காலத்தில் ஒரு தடவையும், சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் பின்னரும் யாழ் தளப்பிரதேசம் புலிகளிடம் இருந்து கைமாறியிருக்கிறது.

அதனால்தான் யாழ் குடாநாட்டை படையினர் கைப்பற்றியமை இராணுவரீதியில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. தமக்கு அது ஒரு 'தற்காலிகப் பின்னடைவே' என்று பிரபாகரனும் கூறியிருக்கிறார்.

கிழக்கின் பூகோள நிலைமைகள் காரணமாக அங்கு ஒரு நிரந்தரத் தளப்பிரதேசத்தை வைத்திருப்பது புலிகளுக்கு உடனடிச் சாத்தியமில்லை.

அதுமட்டுமல்லாமல் படையினராலும் புலிகளின் கெரில்லாப் பிரதேசங்களைக் கைப் பற்றி நிரந்தரமாக நிலைகொள்ள முடியாது. எனவே சண்டையிட்டு தமது கெரில்லாப் பிரதேசங்களைப் பாதுகாப்பதை விட, படையினர் வந்துவிட்டுச் செல்லட்டும் என்று விட்டுவிடுவது புலிகளுக்கு இலாபமாக இருக்கிறது.

அதன்மூலம் தமது அணிகளையும் பாதுகாத்துக் கொள்ள முடிகிறது.

புலுக்குணாவை விசேட அதிரடிப்படை முகாம்மீதான தாக்குதல் படையினருக்கு மட்டுமல்லாமல், அரசாங்கத்திற்கும் சங்கடங்களை ஏற்படுத்தியிருந்தது.

"வடக்கைப் பிடிப்பதாகச் சொல்லிக் கொண்டு கிழக்கைப் பறிகொடுக்கிறார்கள்" என்று எதிர்க்கட்சியினர் பிரசாரம் செய்து வருகின்றனர்.

"வடக்கைக் கைப்பற்றத்தான் கிழக்கை தந்திரோபாயமாக விட்டுக் கொடுத்திருக்கிறோம்" என்று அரசாங்கம் சொல்லி வந்தது.

கிழக்கில் முகாம்கள்மீது புலிகளால் தாக்குதல் நடத்த முடியும் என்று அரசாங்கம் கருதியிருக்கவில்லை.



ரோந்து அணிகள்மீதும், எல்லைக் கிராமங்கள்மீதும்தான் தாக்குதல் நடத்துவார்கள்; அவற்றை புலிகளின் திசைதிருப்பல் நடவடிக்கை என்று மக்களும் புரிந்து கொள்வர் என்றே அரசாங்கம் நினைத்திருந்தது.

புலுக்குணாவை தாக்குதல் எதிர்பாராத அதிர்ச்சியாக அமைந்துவிட்டது. அதனை புலிகளின் இயலாமையின் வெளிப்பாடாகவும், திசை திருப்பும் தந்திரமாகவும் சித்தரிக்க முடியாமல் போய்விட்டது.

'பாடும் மீன்' நடவடிக்கை மூலமாக புலிகளை துரத்தித் தாக்கும் பலம் தம்மிடம் உண்டு என்று படையினர் நிரூபிக்க முற்பட்டனர்.

"புலிகள் தங்கள் இடங்களைவிட்டுத் தப்பி ஓடிக்கொண்டிருக்கிறார்கள்," என்று அரசாங்க பிரசார சாதனங்கள் செய்தி வெளியிட்டன.

உண்மையும் அதுதான். படையினர் வருவதாகத் தெரிந்ததும் புலிகள் ஓடத்தொடங்கி விட்டனர். ஆனால் விஷயம் என்ன வென்றால் ஓடுவதும், ஒளிவதும், மறைந்திருந்து தாக்குவதும்தான் கெரில்லாக்களின் குணாம்சம்.

ஓடாமல், ஒளியாமல் நேருக்கு நேர் நின்று மோதுவதாக இருந்தால் அது கெரில்லாக்களுக்கு அடுத்த படியான நிலை. நிரந்தர இராணுவ அணியாக மாறிவிட்டார்கள் என்று அர்த்தம்.

நிரந்தர இராணுவ அணிகள் பின்வாங்கிச் செல்வதுதான் பின்னடைவு என்று கருதப்படும். யாழ் குடாநாட்டில் புலிகளின் நிரந்தரப் படையணிகளும் பின்வாங்கின. கிளிநொச்சி போர் முனையிலும் புலிகளின் மரபுப்போர்முறையும் கெரில்லா உத்தியும் கலந்த பதிலடி படையினரால் முறியடிக்கப் பட்டது. அதனையும் பின்னடைவு என்று கருதலாம்.

**கிழக்கில் புலிகளிடம் இருப்பது கெரில்லாப் பிரதேசங்களே தவிர தளப்பிரதேசங்கள் அல்ல. கெரில்லாப் பிரதேசங்களை கைவிட்டு ஓடுவதும் பின்னர் திரும்பிவருவதும் பின்னடைவா? தந்திரமா?**

ஆனால், கெரில்லாக்கள் ஓடுவதும், ஒளிவதும் தந்திரமே தவிர, பின்னடைவு அல்ல.

எதிரியின் கைகளில் மாட்டாமல் நெளிவு சுழிவாக ஓடி தப்பிக்கத் தெரிந்தவர்களே உண்மையான கெரில்லாக்கள்.

ஆக, புலிகள் தப்பி ஓடிவிட்டார்கள் என்று படையினர் தெரிவிப்பது தெற்கில் பிரசாரரீதியில் அரசாங்கத்திற்கு உபயோகமாக இருக்கலாம். போர்த்தந்திர ரீதியில் நோக்கும்போது நேர்மாறான முடிவே கிடைக்கிறது. தமது எதிரிகள் தப்பிச் செல்லாதவாறு படையினரால் வியூகம் வகுக்க முடியவில்லை. கெரில்லாக்கள் மிக வேகமாக நழுவிச் செல்லக்கூடியவர்களாக இருக்கிறார்கள் என்பதே உண்மையாகும்.

அதுமட்டுமல்லாமல் ஓடுவதாகப் போக்குக் காட்டிக் கொண்டு, படையினரின் பின்புறமாகச் சென்று தாக்குதலும் நடத்தியிருக்கின்றனர்.

'பாடும் மீன்' நடவடிக்கையில் முன்வரிசையில் நின்று துடிப்போடு செயற்பட்டவர் விசேஷ அதிரடிப்படை அதிகாரியான உபாலி சகாபந்து.

படையினரை ஒழுங்குபடுத்தி களத்திற்கு அனுப்புவதில் முனைப்புடன் செயற்பட்டவர் அவர்தான்.

அவரது கவனம் முழுக்க 'பாடும் மீன்' நடவடிக்கைமீதே இருந்தது. புலிகளின் கோட்டைக்குள் புலிகளை சந்தித்துப் பதிலடி கொடுப்பதுதான் அவரது முழுச் சிந்தனையாகவும் இருந்தது.

அதேநேரம் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் புகுந்துவிட்ட கரும்புலி தனக்கு குறிவைத்துவிட்டதை அவர் அறியவில்லை.

புலிகளின் கவனமெல்லாம் தற்காப்பில்தான் இருக்கும் என்று படையினர் நினைத்துக் கொண்டிருக்க, படையினரது கட்டுப்பாட்டுப் பகுதியான கல்முனைக்கும் களுவாஞ்சிக்குடிக்கும் இடையில் வைத்து கரும்புலித் தாக்குதல் நடந்திருக்கிறது.

கொழும்பில் வைத்து கடற்படைத்தளபதி கிளன்ஸி பெர்னாண்டோமீது கரும்புலித் தாக்குதல் நடத்தப்பட்ட பாணியில்தான் இத் தாக்குதலும் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் வெடிமருந்தை நிரப்பிக்கொண்டு வந்த கரும்புலியே ஜீப்மீது மோதியிருக்கிறார். அவரது உடலிலும் வெடிகுண்டு கட்டப்பட்டு இருந்திருக்கலாம்.

ஜீப் வண்டி முற்றாகச் சேதமடைந்ததுடன் சகாபந்துவும், அவருடன் சென்றவர்களும் பலியாகினர்.

அருகிலுள்ள கட்டிடங்கள், மின்கம்பம் போன்றவையும் பாதிக்கப்படுமளவுக்கு வெடிமருந்து அதிகளவில் பாவிக்கப்பட்டிருக்கிறது.

'பாடும் மீன்' நடவடிக்கை தொடர்பான படையினரின் பிரசாரத்திலும் சகாபந்துவின் மீதான தாக்குதல் பின்னடைவை ஏற்படுத்தி விட்டது.

கிழக்கில் **உள்ள விசேஷ அதிரடிப் படையினர் தமது அதிகாரி பலியான பின்னர் பொதுமக்கள்மீது தம் கோபத்தை திருப்பவில்லையென்பது குறிப்பிடத்தக்க விஷயம்.**

சம்பவம் நடைபெற்ற பகுதியில் உள்ள மக்கள் அச்சத்துடனேயே இருந்தனர். வழக்கமாக இவ்வாறான தாக்குதல்கள் நடைபெற்றால் பாதிக்கப்பட்ட படையினரின் கோபத்திற்கு அப்பகுதியில் உள்ள மக்களே வடிகாலாக இருப்பதுண்டு.

அதிரடிப்படையினர் அவ்வாறு நடந்து கொள்ளாதது அப்பகுதி மக்களுக்கு ஆறுதலாக அமைந்துவிட்டது.

கரும்புலித் தாக்குதல் நடைபெற்ற பாதைவழியாகவே அம்பாறை மாவட்டத்துக்கு அமைச்சர் அஷ்ரப் உட்பட பல முக்கிய பிரமுகர்கள் பயணம் செய்வது வழக்கம்.

**இத் தாக்குதலின் பின்னர் கிழக்கு மாகாணத்திற்கு அமைச்சர்கள் உட்பட முக்கிய பிரமுகர்கள் விஜயம் செய்வதை இடைநிறுத்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்டிருப்பதாகத் தெரிகிறது.**

அமைச்சர் அஷ்ரப்பையும் உடனடியாக கொழும்பு திரும்புமாறு ஜனாதிபதியிடமிருந்து அவசர உத்தரவு பறந்ததாகக் கூறப்படுகிறது.

ஏற்கெனவே யாழ் ஸ்டான்லி வீதியில் கரும்புலித்தாக்குதல் நடைபெற்ற பின்னர் அங்கு முக்கிய அமைச்சர்கள் செல்வது நிறுத்தப்பட்டது.

சீருடை விநியோகிக்கச் செல்வதாக இருந்த கல்வியமைச்சர் கூட அங்கு செல்ல முடியவில்லை.

அவர் வருவார் என்று யாழ் கல்வித் திணைக்கள அதிகாரிகள் சீருடையை வழங்காமல் வைத்திருந்தனர். "கல்வி அமைச்சரை இங்கு அழைத்து பலியிட நினைக்கிறீர்களா?" என்று இராணுவத்தினர் யாழ் கல்வித் திணைக்களத்தினரை எச்சரித்தார்களாம்.

இப்போது கிழக்கு மாகாணச் சூழ்நிலையும் 'நிலவரம் இங்கு வழமைதான்' என்று அரசாங்கம் சொல்ல முடியாதளவுக்குக் கட்டுமீறிப் போய்விட்டது.

மேலும் போர்க்கள நிலவரம் கிழக்கில் கடுமையாகிச் செல்லும் என்பதை மிகத் தெளிவாக அறிய முடிகிறது.

**புலிகளின் தொடர்ச்சியான கெரில்லாத் தாக்குதல்களும், படையினரின் தற்பாதுகாப்பு நகர்வுகளும் உண்மையான பாடும் மீன்களையும் அச்சமூட்டப் போகின்றன.**

பாடப்போவது மீன்களல்ல, துப்பாக்கிகள்தான்! 97ம் ஆண்டில் கிழக்கில்தான் கள நிலவரங்கள் கடுமையாகமாறப் போகின்றன.

## அதிரடி அய்யாத்துரை



தமிழ் கட்சிகளின் போட்டா போட்டியை நினைத்தால் புல்லரிக்குது! ஜனநாயகக் கட்சியின் தலைவர் ராஜீவின் பாரியாரை சந்தித்துவிட்டு வந்திருந்தார். கனடா பத்திரிகைகளிலும் அச் செய்தி வெளியானதாம். செய்தியைப் படித்த மற்றொரு தமிழ் கட்சிக்கு பொறுக்க முடியவில்லை. தங்கள் கட்சித் தலைவர் முன்னரே சந்தித்துவிட்டார் எண்டு ஒரு பத்திரிகைக்கு கதையளந்திருக்கினம். அதை நம்பி செய்தி வெளியிட்ட பின்னர்தான் அது சுத்தமான பொய் என்று தெரிந்ததாம். செய்தி போட்ட பத்திரிகைக்காரர் செய்தி கொடுத்தவரை தேட, அவர் தலைமறைவாம்! போட்டி இருக்கலாம், பொறாமை இருக்கலாமோ? செய்தி கொடுத்தவர் முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாணசபைக் கட்சிக்காரராம். சபாஷ், சரியான போட்டி.

திருவான மலையில் மரக்கறிச் சந்தையை குத்தகை எடுத்தவரின் பின்னால் தமிழ் கட்சி ஒன்று பின்னால் நின்றதாம். ஆனாலும் குத்தகை எடுத்த விஷயத்தில் குளறுபடிகள் நடக்கவில்லை என்பது மட்டும் உண்மை. குறிப்பிட்ட தமிழ் கட்சியினர்தான் பின்னணியில் நிற்கினம் எண்ட விடயத்தை எதிர்த்தரப்புக்கு நைசாகச் சொன்னவரும் நகரசபையின் முக்கிய புள்ளிதானாம். பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டி விடுவது என்பது இதுதானுங்கோ.

பேச்சுவார்த்தைகள் நடக்குதோ இல்லையோ அதைச் சொல்லி விளம்பரம் தேடும் ஆட்கள் காலத்துக்குக் காலம் தலைகாட்டிக் [illegible]டிருப்பினம். இப்போது மீண்டும் அந்தச் சீசன் 'வதந்திகள் [illegible]இருக்கு' இருதரப்புமே பேச்சுவார்த்தையை விரும்பவில்லை. [illegible] நாடிபிடித்து அறிந்து கொண்ட பச்சைக் கட்சியினர் பேச்சுகளுக்கு பச்சைக் கொடி காட்டுவதோடு, முயற்சிகள் நடப்பதாக செய்திகளையும் கிளப்பிவிட்டிருக்கினமாம். காதிலை பூ தான்!

ரெண்டு எழுத்தாருக்கு ஒரு பெரிய அடி அடித்துப்போட்டு தெற்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்துவதுதான் அதிகாரதரப்பாரின் திட்டமாம். அதற்கிடையில் மூன்றாம் தரப்பார் தலையிட்டுக் காரியத்தை கெடுத்துப்போடக்கூடாது எண்டதால்தான், இரகசியமாக முயலலாம் எண்டு ஒரு போடு போட்டவராம் கதிரர்! இரகசியமாக முயல எந்த நாடும் முன்வராது. தனிநபர்கள்தான் முன்வருவினம். 'இரகசிய பேச்சுக்கு தயாராக இல்லை' எண்டு கடந்த பேச்சுக்காலத்திலேயே ரெண்டு எழுத்துத் தலைவர் திட்டவட்டமாக அறிவித்திருந்தவர். இரகசியப் பேச்சென்றால் நஷ்டம் ரெண்டு எழுத்தாருக்குத்தான். அவை தாக்காமல் இருக்க, அதை அவையின் பலவீனம் எண்டு தெற்கில் நினைக்க, யுத்த வெற்றியை சொல்லி தெற்கில் தேர்தலும் நடத்திப்போடலாம் அல்லோ. கதிரர் 'ஸ்பின்போல்' போட்டிருக்கிறார்.

'மூத்திரையில் விஷம்' எண்டு ஒரு செய்தி வயிற்றைக் கலக்குது. எப்படி எப்படி நடக்கலாம் எண்டு ஊகித்து பச்சை உடைத்தரப்பார் உஷாராக இருப்பது சரிதான். அதைச் செய்தியாக வெளியிட்டு ஏன் கிலி கொள்ள வைக்கவேணும்? யாழில் சனத்திடம் தண்ணீர், சாப்பாடு போன்றவையும் வாங்கவேண்டாம் எண்டு எச்சரிக்கப் பட்டிருக்குதாம். ரெண்டு எழுத்தாருக்கு இது சந்தோசமான செய்தி. பச்சை உடையினரும், சனமும் நெருங்கிப் பழகாமல் இருக்க வேண்டும் என்பதுதான் அவையின் விருப்பம். அதிகாரத்தரப்பாரின் நிலைதான் பரிதாபம். சனத்தை வென்றெடுத்துப் போட்டோம் எண்டும் சொல்லிப் போட்டு, விக்கல் எடுத்தாலும் தண்ணி வாங்கிக் குடிக்கவேண்டாம் எண்டு உத்தரவுப் போடவேண்டிக் கிடக்கு.

கிழக்கின் தனித்துவமான கட்சிக்காரர் தமிழ் உறுப்பினர்களையும் சேர்க்கத் தொடங்கியிருக்கினமாம். சந்தாப்படிவம் கொடுத்து கையெழுத்துப் பெறும் வேலைகள் சுறு சுறுப்பாக நடந்திருக்குதாம்.

கிழக்கின் தனித்துவக் கட்சிக்கு போட்டியாக உருவான கட்சிக்குள் உட்பூசல். தனித்துவத் தலைவரின் ராஜதந்திரம்தான் காரணம் எண்டு அரசல் புரசலாகப் பேசப்படுகிறது. போட்டிக் கட்சியின் தலைவர் தனது தவறை உணர்ந்துவிட்டதாகக் கூறி தனித்துவத் தலைவருடன் நட்பாகிவிட்டதாகவும் கேள்வி. அரசியலில் நண்பன் என்னடா, எதிரி என்னடா?

தமிழ் பேசுவோர் வீடுகளில் மட்டுமல்ல பெரும்பான்மை இனத்தார் வீடுகளிலும் தேசிய தொலைக்காட்சியின் அலைவரிசைகளை தட்டிப்பார்ப்போர் கிடையாது. தென்னிந்திய தொலைக்காட்சி அலைவரிசைகள் தூள் கிளப்புது. சில வீடுகளில் அம்மா பிள்ளைச் சண்டைகளும் சம அளவில் தூள் கிளப்புவதாகத் தகவல். தேங்காய்கூட துருவித் தராமல் ரீவி பார்த்தா கோபம் வரும்தானே! வேறு சில வீடுகளில் ஞாயிறு சமையல் கட்! "தட்ஸ் குட்!" என்கிறார்கள் சில கணவன்மார். ஒருநாளாவது நல்ல சாப்பாடு கடையில் சாப்பிடலாமாம்! ஹி ஹி ஹி.

ஒரு வித்தியாசமான குட்டிக் கவிதை.

*"அகிம்சைக்காக போராடு*
*இருப்பினும்-உனது*
*இடுப்பில் ஒரு கத்தி இருக்கட்டும்!*
*அது-உனது முதுகைத் தேடும்*
*துரோகிகளுக்காக!"*


படிப்பகம்

109

அரசியல் தொடர் — எழுதுவது அற்புதன்

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# பஸ்நிலையம் முன்னால் வீசப்பட்ட உடல்கள்!

## வீதியில் பிணங்கள்

புலிகளின் முகாமில் எட்டு இராணுவத்தினர் காவலில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களை விடுதலை செய்யுமாறு அவர்களின் பெற்றோர்கள் புலிகள் இயக்கத்தினரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை அடுத்து தமிழ் கைதிகளை அரசாங்கம் விடுதலை செய்திருந்தது. ஆயினும் தமது காவலில் இருந்த இராணுவத்தினரை



மாத்தையா

புலிகள் இயக்கத்தினர் விடுதலை செய்யவில்லை.

குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 பேரின் உடல்கள் கொண்டுவரப்பட்ட அதேநேரம் புலிகள் இயக்க முகாமில் வைக்கப்பட்டிருந்த எட்டு இராணுவத்தினரும் சுட்டுத் தள்ளப்பட்டனர்.

மறுநாள் காலையில் அந்த எட்டுப் பேரின் உடல்களும் யாழ் நகர பஸ் நிலையம் அருகில் கிடந்தன.

குமரப்பா, புலேந்திரன் ஆகியோரின் உடல்களை பலாலித் தளத்தில் பொறுப்பெடுக்கச் சென்றவர்களில் ஒருவர் சூசை. அப்போது அவர் வடமராட்சிப் பொறுப்பாளராக இருந்தார். (இப்போது கடற்புலிகளின் சிறப்புத் தளபதியாக இருக்கிறார்.)

உடல்களை தமது முகாமில் ஒப்படைத்துவிட்டு தனது குழுவினருடன் வல்வெட்டித்துறை சென்றார் சூசை. வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் அதிகாரி ஒருவர் மதுபான விடுதி ஒன்றுக்குள் இருந்தார். சூசையும், அவரது குழுவினரும் அந்த அதிகாரியைப் பிடித்து வெளியே இழுத்துவந்தனர். வீதியில் வைத்து தாக்கினார்கள். அடிதாங்க முடியாமல் அவர் பலியானார்.

"கொதிப்படைந்த பொதுமக்கள் பொலிஸ் அதிகாரியை அடித்துக் கொன்றுவிட்டனர்" என்று மறுநாள் யாழ் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை மீண்டும் திறப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவந்தன.

கொழும்பிலிருந்து பொறியியலாளர்கள் குழு ஒன்று வந்து பரிசீலனை செய்தது. அக்டோபர் 5ம் திகதி அக் குழுவினர் கொழும்பு திரும்பினார்கள்.

அவர்களை வழியனுப்பிவைத்துவிட்டு காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை பொது முகாமையாளர் ஜெயமன்ன மற்றும் உதவி முகாமையாளர் கஜநாயக்க ஆகியோர் விருந்தினர் விடுதியில் தங்கியிருந்தனர்.

பொறியியலாளர்களான சோதிலிங்கம், வேலாயுதம் ஆகியோருடன் அவர்கள் இருவரும் இரவு உணவை சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, அயுதங்களுடன் புலிகள் இயக்கத்தினர் புகுந்தனர்.

ஜெயமன்னவையும், கஜநாயக்காவையும் பிடித்து இழுத்துச் சென்றனர். அவர்களை ஒன்றும் செய்ய வேண்டாம் என்று தடுத்தார் பொறியியலாளர் சோதிலிங்கம். அதனால் அவரும் தாக்கப்பட்டார்.

மறுநாள் காலையில் இருவரது உடல்களும் சீமெந்து தொழிற்சாலையின் முன்பாகக் கிடந்தன.

சுன்னாகத்தில் நீண்டகாலமாக பேக்கரி நடத்திவந்த ஒரு சிங்களவரும் இரவோடு இரவாகக் கொல்லப்பட்டார்.

சில பகுதிகளில் பேக்கரி உரிமையாளர்கள் மற்றும் சிங்கள ஆட்களை அப்பகுதிகளில் உள்ள மக்கள் புலிகளுக்குத் தெரியாமல் பாதுகாப்பு வழங்கினார்கள்.

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த வாகனம் ஒன்று காங்கேசன்துறையில் வைத்து வழிமறிக்கப்பட்டது. அதில் நான்கு சிங்கள ஊழியர்களும், விக்னேஸ்வரன் என்னும் தமிழரும் இருந்தனர்.

நான்கு சிங்கள ஊழியர்களும் கொல்லப்பட்டனர். விக்னேஸ்வரனை மிரட்டிவிட்டு துரத்திவிட்டார்கள்.

## கிழக்கில் தாக்குதல்

கிழக்கிலும் சிங்கள மக்கள் பலர் கொல்லப்பட்டனர். இருப்பிடங்களைவிட்டு விரட்டப்பட்டனர். நூற்றுக்கு மேற்பட்டோர் அவ்வாறு கொல்லப்பட்டதாகச் செய்திகள் தெரிவித்தன.

விசேஷ அதிரடிப்படை பொறுப்பதிகாரி நிமால் சில்வா சென்ற வாகனம் நிலக்கண்ணிவெடியில் சிக்கியது. நிமால் சில்வாவும், அவரோடு பயணம் செய்த மட்டக்களப்பு அரசாங்க அதிபர் அந்தோனி முத்துவும் பலியானார்கள்.

தமது முக்கிய தளபதிகள் உட்பட 12 பேரும் பலியானதும் புலிகள் பதிலடியில் இறங்குவார்கள் என்பதை இந்தியப்படை அதிகாரிகள் உணர்ந்தே இருந்தனர்.

வடக்கு-கிழக்கில் உள்ள இலங்கைப் படையினர்தான் புலிகளால் தாக்கப்படுவார்கள் என்றே அவர்கள் கருதியிருந்தனர்.

யாழ்-குடாநாட்டில் இருந்த படை முகாம்களில் அப்போது சிறிய அளவினரான படையினரே தங்கியிருந்தனர். இந்திய படைத் தளபதி திபீந்தர் சிங் உடனடியாக தனது படைப்பிரிவுகளை அம்முகாம்களைப் பாதுகாக்க அனுப்பிவைத்தார்.

ஆயினும் இந்தியப் படையினர் எதிர்பாராத கோணத்தில் புலிகள் தமது கோபத்தைத் திருப்பியிருந்தனர்.

## தளபதி விஜயம்

இந்தியப்படைத் தளபதி சுந்தர்ஜி அக்டோபர் 6ம் திகதி பலாலி தளத்துக்கு விஜயம் செய்தார்.

அதேநாள் இந்திய பாதுகாப்பு அமைச்சர் பி.சி.பந்த் கொழும்புக்கு விஜயம் செய்தார்.

இந்த இரு விஜயங்களும் புலிகள் இயக்கத்தினர் தொடர்பாக ஒரு கடும்போக்கைக் கடைப்பிடிக்க இந்திய அரசு முடிவுசெய்துவிட்டதன் அடையாளமாகவே அமைந்தன.

- 'குமரப்பா, புலேந்திரன் ஆகியோர் உட்பட கைது செய்யப்பட்ட 17 பேரையும் கொழும்பு கொண்டு செல்லும் முயற்சிகளில் தலையிடவேண்டாம்' என்று இந்திய அமைதிப்படைக்கு ஒரு இரகசியத் தகவல் வந்தது அல்லவா?

புலிகள் மீதான கடும் நடவடிக்கைக்கு இந்திய அரசியல் தலைமைப்பீடம் முடிவு செய்த பின்னரே புதுடில்லியிலிருந்து அத்தகவல் அனுப்பப்பட்டது.

குமரப்பா, புலேந்திரன் ஆகியோர் பலியாகி இருக்காவிட்டாலும்கூட, புலிகளை தமது வழிக்கு கொண்டுவர இந்தியா கடும் நடவடிக்கைகளை எடுக்க முன்கூட்டியே முடிவு செய்துவிட்டது.

ராஜீவ் காந்திக்கு பிரபாகரன்மீதும் புலிகள் இயக்கத்தினர் மீதும் கோபம்வந்துவிட்டது. 'இந்தியாவுடன் இவர்கள் என்ன விளையாடுகிறார்களா?' என்று நினைத்துவிட்டார் ராஜீவ்.

ஜே.ஆரும் மிகத் தந்திரமாகப் பேசி ராஜீவின் அபிமானத்தைப் பெற்றுவிட்டார். புலிகள்தான் ஒப்பந்த அமுலாக்கத்துக்கு குறுக்கே நிற்கிறார்கள் என்பதுபோல ஜே.ஆர். தன்னை ஒரு நல்ல பிள்ளையாகக் காட்டிக் கொண்டார்.

வடக்கு-கிழக்கில் சிங்கள மக்கள்மீதான தாக்குதல்களை புலிகள் நடத்தத் தொடங்கியது அக்டோபர் 5ம் திகதி இரவில் இருந்துதான்.

ஆனால் அந்தச் சம்பவங்களுக்கு முன்னரே இந்தியத் தளபதி சுந்தர்ஜியின் விஜயமும், இந்திய பாதுகாப்பு அமைச்சரின் விஜயமும் முடிவு செய்யப்பட்டிருந்தது.

சுந்தர்ஜியின் விஜயத்தின் நோக்கம்- நிலமையை நேரில் கண்டறிந்து, இந்தியப் படை அதிகாரிகளுடன் பேசி புலிகளுக்கு எதிரான நடவடிக்கையின் சாதக பாதகங்களைக் கண்டறிவதுதான்.

இந்தியப் பாதுகாப்பு அமைச்சரின் விஜயத்தின் நோக்கம்- ஜனாதிபதி ஜே.ஆருக்கு இந்தியா நியாயமாக நடந்து கொள்ளும். புலிகளை வழிக்குக் கொண்டுவரும். தேவைப்பட்டால் கடும் நடவடிக்கையில் இறங்கத் தயங்காது என்று உறுதி தெரிவிப்பதுதான்.

இவ்வாறான நோக்கத்துடன் அவர்களின் பயணத்திட்டம் வகுக்கப்பட்டபோதுதான் புலிகள் இயக்கத் தளபதிகள் உட்பட 12 பேரின் மரணமும், புலிகளின் பழிவாங்கும் நடவடிக்கைகளும் வடக்கு-கிழக்கில் நடந்து கொண்டிருந்தன.

## ராஜீவின் கோபம்

இடைக்கால நிர்வாக ஏற்பாடுகளுக்கு பிரபாகரன் இணங்கவில்லை என்பதுதான் அவர்மீது ராஜீவின் கோபத்துக்கு பிரதான காரணமாக இருந்தது.

எனினும் இடைக்கால நிர்வாகத்தில் கிழக்கு மாகாணத்தவர்கள் எவரையும் இடம்பெறச் செய்யாமல், அதனை வடக்கு நிர்வாகமாக காட்டுவதே ஜே.ஆரின் நோக்கமாக இருந்தது. அதன் மூலம் வடக்கு-கிழக்கு பிரிப்புக்கான ஆதரவான மனோநிலையை கிழக்கில் உருவாக்க ஜே.ஆர். பின்னிய சூழ்ச்சி வலையை ராஜீவ் காந்தி கண்டுகொள்ளவில்லை.

ஜே.ஆர் படித்தவர், பண்பாளர், சிறந்த அரசியல் தலைவர்; இயக்கங்களில் உள்ளவர்கள் படிக்காதவர்கள், சிறு பையன்கள் என்ற மனோநிலை இந்திய அதிகார மட்டத்தில் நிலவியதும் அவர்களது கண்களைக் கட்டிப் போட்டிருக்கலாம்.

புலிகள் இயக்கத்தினர்மீது கடும் நடவடிக்கை ஒன்றில் உடனடியாக ஈடுபடுவது உசிதமல்ல, என்பதே இந்திய அமைதிப்படை பொறுப்பதிகாரியான திபீந்தர் சிங்கின் கருத்தாக இருந்தது. தனது கருத்தை தளபதி ஜெனரல் சுந்தர்ஜியிடமும் திபீந்தர் சிங் எடுத்துக்கூறினார்.

பலாலியில் இருந்து கொழும்புக்குச் சென்ற சுந்தர்ஜி, அங்கு வந்திருந்த பாதுகாப்பு அமைச்சர் பந்த்துடன் இணைந்து கொண்டார். இருவரும் ஜே.அரைச் சந்தித்துப் பேசினார்கள்.

அக்டோபர் 7ம் திகதி கொழும்பிலிருந்து இந்திய இராணுவத் தளபதி சுந்தர்ஜியின் கட்டளை அமைதிப்படை தலைமையகத்துக்கு வந்து சேர்ந்தது.

"புலிகள் இயக்கத்தினர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும!. அந்த இயக்கத்தினரின் ஆயுதங்கள் களையப்படவேண்டும்!" என்று கட்டளை பிறப்பித்தார் சுந்தர்ஜி.

## மாத்தையா சொன்னது

நடவடிக்கையில் இறங்குவதற்கு முன்னர் பிரபாகரனுடன் பேசிப்பார்க்க நினைத்தார் திபீந்தர் சிங்.

திபீந்தர் சிங்கும், ஹரிகிரத் சிங்கும் பிரபாகரனை சந்தித்துப் பேசவிரும்புவதாக புலிகள் இயக்கத் தலைமையத்துக்கு தகவல் தரப்பட்டது.

"வாருங்கள், சந்திக்கலாம்" என்று தகவல் அனுப்பினார்கள். புலிகள் இயக்கத்தினர்.

அவர்களைச் சந்திக்க பிரபாகரன் விரும்பவில்லை; மாத்தையா சந்திக்கட்டும் என்று கூறிவிட்டார் பிரபாகரன்.

பலாலியிலிருந்து ஹெலிக்கொப்டர் மூலமாக திபீந்தர் சிங்கும், ஹரிகிரத் சிங்கும் யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் வந்திறங்கினார்கள்.

யாழ் பல்கலைக்கழக வளாகம் எங்கும் ஆயுதம் தாங்கிய புலிகள் இயக்க உறுப்பினர்கள் நிற்பதை இருவரும் கண்டனர்.

"பிரபாகரனைச் சந்திக்க வேண்டும்!" என்று கேட்டார் திபீந்தர் சிங்.

"அவர் தற்போது இங்கே இல்லை." என்று சொன்னார் மாத்தையா.

"மோதல் நிலை ஏற்படக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டாம்; அதனால் பொதுமக்கள்தான் துன்பப்படுவார்கள். ஏன் இவ்வாறான ஒரு சூழலைத்தெரிவு செய்கிறீர்கள்?" என்று கேட்டார் திபீந்தர் சிங்.

அதற்கு மாத்தையா சொன்னபதில் இதுதான்:

"அவமானத்துடன் வாழ்வதைவிட தன்மானத்துடன் சாவதற்கு ஆயத்தமாகிவிட்டோம்!"

மாத்தையாவின் பதிலால் துணுக்குற்றார் திபீந்தர் சிங்.

வடக்கு-கிழக்கில் உள்ள இலங்கைப் படையினரின் முகாம்களை புலிகள் தாக்க முடிவு செய்துவிட்டனர் என்பதுதான் மாத்தையாவின் கூற்றுக்கு அர்த்தம் என்று நினைத்தார்.

"வடக்கு-கிழக்கில் உள்ள இலங்கைப் படையினரின் முகாம்களுக்கு இந்தியப் படைதான் பொறுப்பு. அந்த முகாம்களைத் தாக்க முற்படவேண்டாம்!" என்று கண்டிப்பான கட்டளைபோலவே கூறினார் திபீந்தர் சிங்.

மாத்தையா பதில் எதுவும் சொல்லவில்லை. மூவரும் கைகுலுக்கி விடைபெற்றனர்.

பிரபாகரன் சந்திக்க மறுத்ததும், மாத்தையாவின் பதில்களும், புலிகள் இயக்கத்தினர் தமது வழிக்கு வரப்போவதில்லை என்பதை திபீந்தர் சிங்குக்கு உணர்த்திவிட்டன.

## பண்ருட்டியாரின் மாற்றம்

சென்னை சென்ற திபீந்தர் சிங் அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரனை சந்தித்தார்.

இந்தியப் படை புலிகள்மீது நடவடிக்கையில் இறங்கினால் தமிழகத்தில் அதன் பிரதிபலிப்புக்கள் தோன்றும் என்றும் திபீந்தர் சிங் கவலைகொண்டிருந்தார்.

அப்போது எம்.ஜி.ஆர். சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றிருந்தார். எம்.ஜி.ஆரின் பிரதிநிதியாக பண்ருட்டி ராமச்சந்திரனே தமிழக அரச நிர்வாகங்களை கவனித்துக் கொண்டிருந்தார்.

"புலிகளை வழிக்குக் கொண்டுவர ஏதாவது செய்ய வேண்டும். நீங்கள் முயற்சித்துப் பார்க்கலாமே!" என்று கேட்டுக் கொண்டார் திபீந்தர் சிங்.

புதுடில்லியில் இலங்கைப் பிரச்சனை தொடர்பான ஒரு கூட்டத்துக்கு பண்ருட்டியும் அழைக்கப்பட்டிருந்தார்.

அக்கூட்டத்தில் கலந்துகொண்டு திரும்பிய பண்ருட்டி ராமச்சந்திரன் திபீந்தர் சிங்கிடம் சொன்னார்:

"புலிகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பது அவசியம்தான்!"

இந்திய மத்திய அரசின் அதிகார மட்டத்தினர் பண்ருட்டியாரின் மனதையும் மாற்றிவிட்டனர்.

## திட்டம் தயார்

புலிகளுக்கு எதிரான நடவடிக்கைக்கான திட்டம் அமைதிப்படை தலைமையகத்தால் மிக இரகசியமாகத் தீட்டப்பட்டது.

இந்திய உளவுப்பிரிவுகளின் தகவல்கள், மற்றும் களநிலவரங்களை கவனத்தில் கொண்டு திட்டம் தீட்டப்பட்டது.

யாழ் குடாநாட்டை கைப்பற்றினால் போதும்: புலிகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிடலாம் என்பதுதான் மூல உபாயமாக இருந்தது.

அதற்கேற்ப அமைதிப்படை தலைமையகத்தால் வகுக்கப்பட்ட திட்டத்தை திபீந்தர் சிங் பரிசீலித்து அங்கீகரித்தார்.

அந்தத்திட்டம் இதுதான்:

1. ஆகாய மார்க்கம், கடல் மார்க்கம் உட்பட பலமார்க்கங்களால் விரைவாக யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவது.
2. முன்னேறிச் செல்லும் படையணிகளுக்கு தொடர்ந்து விநியோகங்களை உறுதிப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் ஒரு விநியோக மையத்தைத் திறப்பது.
3. தரைப்பாதை மூலமான விநியோகம் தொடங்கும்வரை வான்மூலமான விநியோகத்தில் படைகள் தங்கியிருத்தல்.
4. விமானப்படை, கடற்படை மற்றும் பீரங்கிப்படை உதவியுடன் தெரிவு செய்யப்பட்ட இலக்குகளை மட்டும் தாக்குதல்.
5. கடற்கண்காணிப்பை மேற்கொள்ளல்.

பிரதான நடவடிக்கை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படும். திருமலை, மட்டக்களப்பு போன்ற பகுதிகளில் இந்தியப் படையினர் ரோந்தில் ஈடுபடுவர்.



# புலிகளைத் தாக்க இந்தியா வகுத்த திட்டம்!

தலைமையக உத்தரவு கிடைத்தால் மட்டும் அங்கு இலக்குகளை தாக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது.

பாரிய தாக்குதலுக்கு முன்னர் புலிகளுக்கு ஓர் அதிர்ச்சி வைத்தியம் கொடுக்கத் தீர்மானித்தனர் இந்தியப் படையினர்.

அக்டோபர் 9ம் திகதி புலிகள் இயக்க முகாம்கள் சில இந்தியப் படையினரால் முற்றுகையிடப்பட்டன. புலிகள்மீது மட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று காண்பிப்பதற்காக ஏனைய இயக்க முகாம்கள் சிலவற்றிலும் தேடுதல் நடத்தப்பட்டது.

இந்த நடவடிக்கையின்போது 131 போராளிகள் கைது செய்யப்பட்டதாகவும், 27 ஆயுதங்களும், வெடிமருந்துகளும் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தியப்படையின் நட்வடிக்கை பிரபாகரனுக்குத் தெரிவிக்கப்பட்டது.

'இந்தியப் படையோடு போரிட வேண்டியதுதான்' என்ற முடிவுக்கு வந்தார் பிரபாகரன்.

போர் தவிர்க்க முடியாதது என்பதை உறுதிப்படுத்துவதுபோல அக்டோபர் 10ம் திகதி விபரீதங்கள் ஆரம்பமாகின.

அக்டோபர் 10- அது ஒரு [illegible] முடியாத நாள்.

(தொடர்ந்து [illegible]

www.padippakam.com

## அலசுவது- இராஜதந்திரி

# 96இல் தோல்வி கண்ட இராணுவ -அரசியல் முனைப்புக்கள்!

**1996 ம்** ஆண்டு அநர்த்தங்களும், அழிவுகளும் நிறைந்த ஆண்டாகவே விளங்கியிருந்தது.

ஆட்சியாளர்களுக்கும்,எல்.ரி.ரி.ஈ.யினருக்கும் இடையேயான பலப்பரீட்சையில் இரு தரப்புக்கும் வெற்றிகளும், தோல்விகளும் கிடைத்திருக்கின்றன.

இராணுவ பலத்தில் மேலோங்கும் எண்ணமே இரு தரப்பினரிடமும் கடந்த ஆண்டு முழுவதும் காணப்பட்டதை உற்று நோக்கக் கூடியதாகவிருந்தது.

**பேச்சுவார்த்தைக் கதவுகளை மூடிவிடவில்லை என்று இரு தரப்புமே சொல்லிக் கொண்டிருந்தபோதும், மேலும் மேலும் போருக்கான புதிய உபாயங்களையே இருதரப்புகளும் தேடிக்கொண்டிருந்ததையே அவதானிக்க முடிந்தது.**

அரசியல் தீர்வுக்கான யோசனைகளை தயாரித்து பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடம் ஆட்சியாளர்கள் கொடுத்திருந்தனர்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடம் அரசியல் தீர்வு யோசனையை தள்ளிவிட்டு, இராணுவ ரீதியான நடவடிக்கைகளுக்கு ஆட்சியாளர்கள் தாமாகவே திட்டங்களைத் தீட்டினர்.

இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணும் நடைமுறைக்கு சகல அரசியல் கட்சிகளின் சம்மதமும் பெறவேண்டும் என்பதே ஆட்சியாளரின் நிலைப்பாடாக இருந்துவருகிறது.

வடக்கு-கிழக்கில் யுத்தத்தை நடத்திச் செல்வதற்கு யாருடைய ஆலோசனையும் தேவையில்லை என்ற ரீதியில்தான் ஆட்சியாளர்களின் அணுகுமுறைகள் அமைந்திருக்கக் காணப்படுகின்றன.

'யுத்தம் மூலம் சமாதானம்' என்னும் கோஷத்தையே ஆட்சியாளர்கள் முன்வைத்துள்ளனர். அரசியல் தீர்வு மூலம் சமாதானம் என்ற கோஷத்தை முன்வைத்து, இனப்பிரச்சனைக்கு தம்மால் வழங்கக்கூடிய உயர்ந்த பட்சமான தீர்வு என்ன என்பதை ஆட்சியாளர்கள் வெளிப்படுத்தத் தவறியிருந்தனர்.

அரசியல் தீர்வு யோசனைகளில் முன்வைக்கப்பட்ட விடயங்கள் இறுதியானவையல்ல என்பதால், அதுதான் அரசின் உறுதியான தீர்வு என்று முடிவுக்கு வரமுடியாது.

அரசியல் ரீதியாக ஒரு திட்டவட்டமான முடிவுக்கு வரமுடியாத ஆட்சியாளர்கள் வடக்கு-கிழக்கில் யுத்தத்தை நடத்திச் செல்கின்றனர்.

**இந்நிலையில் எல்.ரி.ரி.ஈ.யினரின் பலம் வீழ்ச்சியுறுமானால் தற்போதைய அரசியல் தீர்வு யோசனைகளில் கூறப்பட்ட விடயங்களில் எவையெவை கழிக்கப்படும், புதிதாக எவையெல்லாம் சேர்க்கப்படும் என்ற கேள்வி எழவே செய்கிறது.**

எல்.ரி.ரி.ஈ.யினர் தவிர்ந்த ஏனைய தமிழ் கட்சிகளை ஆட்சியாளர்கள் எவ்வாறு நோக்குகின்றனர் என்பதையும் கடந்த ஆண்டில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

வடக்கு-கிழக்கில் ஒருங்கிணைப்புக் குழு, வடக்கில் உள்ளூராட்சித் தேர்தல்கள் போன்ற அரசியல் ரீதியான முடிவுகளை மேற்கொள்ளும்போதும்கூட தமிழ் கட்சிகளின் கருத்தை அறிய ஆட்சியாளர்கள் முன்வரவில்லை.

எல்.ரி.ரி.ஈ.யினரிடம் இருந்து படையினரால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் உள்ள மக்களுடன் ஏனைய தமிழ் கட்சிகள் தொடர்பு கொள்ளக்கூட முதலில் ஆட்சியாளர்கள் அனுமதித்திருக்கவில்லை.

எல்.ரி.ரி.ஈ.யினரை வெற்றிகொண்டால் அதன்பின்னர் அரசியல், இராணுவரீதியில் வடக்கு-கிழக்கு மக்களை தமது நேரடிக் கட்டுப்பாட்டில் வைத்திருந்து நிர்வாகம் செய்யலாம், என்றே ஆட்சியாளர்கள் எண்ணியிருந்தனர். வடக்கு-கிழக்கு விவகாரத்தில் 96ம் ஆண்டு முழுவதும் ஆட்சியாளரின் அணுகுமுறை அவ்வாறானதாகவே அமைந்திருந்தது.

வடக்கு-கிழக்கில் எல்.ரி.ரி.ஈ.யினரின் வீழ்ச்சியின் பின்னர் வேறு அரசியல் சக்திகள்கூட தலையெடுக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதே ஆட்சியாளரின் நோக்கமாக இருக்கக் காணப்பட்டது.

தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாடுகள் பலவீனமானவையாக



சந்திரிக்கா

மாறுமானால் அதற்கேற்ப ஒரு தீர்வை வழங்குவது ஆட்சியாளர்களுக்கு சிரமமான ஒன்றாக இருக்காது.

அரசுக்கு சார்பான சில தனி நபர்களையும், புத்திஜீவிகளையும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக முன்னிறுத்துவது மூலம், தம்மால் வழங்கக்கூடிய தீர்வுக்கு அவர்களின் ஆதரவைப் பெற்று உலகுக்குக் காட்டவும் ஆட்சியாளர்களால் முடியுமானதாக இருக்கும்.

கடந்து செல்லும் ஆண்டில் அத்தகைய முயற்சிகள் பல ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்டதை நன்கு அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

பிரேமதாசா அரசாங்கம், தமிழ் கட்சிகளுக்கும் எல்.ரி.ரி.ஈ.யினருக்கும் இடையில் நிலவும் பகை முரண்பாடுகளைப் பயன்படுத்துவதில் கணிசமான பலன் பெற்றிருந்தது.

**தமிழ் மக்கள் மத்தியில் தம் சொற்படி கேட்கக்கூடிய சக்திகளை உருவாக்குவதைவிட, எல்.ரி.ரி.ஈக்கு எதிரான தமிழ் கட்சிகளையே ஊக்குவிக்கலாம் என்பதுதான் பிரேமதாசாவின் அணுகுமுறையாக அமைந்திருந்தது.**

யுத்தத்தில் வெற்றிபெறுவதற்கு எல்.ரி.ரி.ஈ.யினருக்கும் தமிழ் கட்சிகளுக்கும் இடையேயான பிணக்குகளை பாவிப்பதும், இனப்பிரச்சனை தீர்வு காண்பதை இழுத்தடிக்க தமிழ் கட்சிகளுக்கும் முஸ்லிம் கட்சிகளுக்கும் இடையேயான முரண்பாட்டை சாதுரியமாகக் கையாள்வதுமே பிரேமதாசாவின் அணுகுமுறையாக விளங்கியிருந்தது.

தமிழ் கட்சிகளையும், முஸ்லிம் காங்கிரசையும் தனது இரு பக்கத்திலும் வைத்துக்கொண்டு சிறுபான்மை மக்களின் நம்பிக்கைக்குரிய ஒருவராகவும் பிரேமதாசா தன்னை வெளிப்படுத்திக் கொண்டார்.

இந்தியப் படையினர் நாட்டைவிட்டு வெளியேறியபோது எல்.ரி.ரி.ஈ.யினர் பிரேமதாசாவுடன் இருந்தனர். இந்தியப் படையினரை எதிர்த்துப் போராடியவர்கள் என்னும் மரியாதையும், அபிமானமும் எல்.ரி.ரி.ஈ.யினர் தொடர்பாக சிங்கள மக்களிடம் அப்போது நிலவியிருந்தது.

பிரேமதாசா அப்போது நினைத்திருந்தால் சிறந்த ஒரு தீர்வை வழங்க முன்வந்திருக்கலாம். சிங்கள மக்களும் அதனை எதிர்த்திருக்க மாட்டார்கள்.

தனக்குக் கிடைத்த ஒரு அருமையான சந்தர்ப்பத்தை பிரேமதாசா தவறவிட்டிருந்தார்.

பிரேமதாசா மட்டுமல்லாமல் காலம் காலமாக ஆட்சியில் இருந்த தலைவர்கள் யாவரும் இனப்பிரச்சனையைத் தீர்க்க தமக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை தவறவிட்டவர்களாகவே இருந்துள்ளனர்.

சந்தர்ப்பத்தைத் தவறவிடுகிறவர்களாகவும் பின்னர் சாதுரியமாக தமது பொறுப்பை எதிர்த்தரப்பின் தோளுக்கு மாற்றிவிடுகிறவர்களாகவுமே இருந்து வந்திருக்கின்றனர்.

தற்போதைய ஆட்சியாளர்களும் தமது முன்னைய ஆட்சியாளர்களின் அடியொற்றியே தமது அணுகு முறைகளை அமைத்துக் கொண்டுள்ளனர்.

இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணும் பொறுப்பை பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடம் சுமத்தியிருக்கின்றனர். தெற்கில் தமது செல்வாக்கை நிலைநிறுத்தும் யுத்த முஸ்தீபுகளை மட்டும் தமது கையில் துணிச்சலாக எடுத்துக் கொண்டுள்ளனர்.

ஆயினும் வடக்கு-கிழக்கில் இராணுவ அணுகுமுறைகள் மூலமாக தமது அரசியல் நோக்கங்களையும் நிறைவுசெய்ய தற்போதைய ஆட்சியாளர்கள் மேற்கொண்ட முயற்சிகள் தோல்விகண்டுள்ளதையே அவதானிக்க முடிகிறது.

**அதனால், எல்.ரி.ரி.ஈயினருக்கும் தமிழ் கட்சிகளுக்கும் இடையேயான முரண்பாடுகளை தாமும் பயன்படுத்திக் கொள்வது அவசியம் என்ற நிலைக்கே தற்போதைய ஆட்சியாளர்களும் வந்துள்ளதையே காணக்கூடியதாகவுள்ளது.**

இதற்குக் காரணம் ஆட்சியாளரின் மனமாற்றம் என்று சொல்லிவிடமுடியாது. எல்.ரி.ரி.ஈ.யினரின் இராணுவ பலம் பலவீனமாக மாற்றம் அடையவில்லை என்பதை ஆட்சியாளர்கள் புரிந்துகொண்டதன் அடையாளமாகவே நோக்க வேண்டியுள்ளது.

'95ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் யாழ் குடாநாட்டை படையினர் அபரிமிதமான படைபலம் மூலமாக கைப்பற்றினார்கள். '96 ம் ஆண்டு கிளிநொச்சி நகரையும் படையினர் மூன்று கட்டமான பலத்த சண்டையூடாகக் கைப்பற்றினார்கள்.

எனினும் '96 இல் கிளிநொச்சி நகரை படையினர் கைப்பற்றிக் கொண்டமை இராணுவ ரீதியான ஒரு தற்காப்பு உத்தியாக மட்டுமே அமைந்திருந்தது.

ஆனையிறவு இராணுவத் தளத்தை பாதுகாக்க பரந்தனில் இருந்து கிளிநொச்சி நகரம்வரை முன்னரங்க காவல் அரணாக மாற்றப்பட்டிருக்கிறது. அங்குள்ள மக்கள் அனைவரும் வெளியேறிவிட்டனர்.

யாழ் குடாநாட்டுக்குள் மீண்டும் கணிசமான மக்கள் திரும்பிச் சென்றபோது, அரசியல் ரீதியில் தமக்கு கிடைத்த வெற்றியாகவே அதனை ஆட்சியாளர்கள் கருதியிருந்தனர்.

யாழ்ப்பாணத்தை சமாதான நகராக்கப் போவதாக ஜனாதிபதியும் அறிவித்திருந்தார். அமைச்சர்களும், ஆளும் கட்சி எம்.பி.களும் யாழ்ப்பாணத்தை நோக்கி திக் விஜயங்களையும் நடத்தியிருந்தனர்.

யாழ் குடாநாட்டு மக்களை தாங்கள் தத்தெடுத்துக் கொண்டதுபோலவே ஆட்சியாளர்கள் நடந்துகொண்டனர். இனிமேல் அவர்களைக் கவனிக்க வேண்டிய பொறுப்பும், வளர்க்க வேண்டிய கடமையும் எல்.ரி.ரி.ஈ.யினருக்கோ, வேறு தமிழ் கட்சிகளுக்கோ கிடையாது என்பதுபோன்றே அணுகுமுறைகள் அமைந்திருந்தன.

'96 இன் மத்தியில் யாழ்ப்பாண நகரில்



பிரபா

ஸ்டான்லி வீதியில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவை நோக்கி நடைபெற்ற தற்கொலைத் தாக்குதலுடன், தமது புதிய 'வளர்ப்புப் பிள்ளைகளை' அமைச்சர்களும், ஆளும் கட்சி எம்.பி.களும் மறந்துவிட்டதையே நோக்க முடிகிறது.

எல்.ரி.ரி.ஈ. கெரில்லாக்களும், கரும்புலிகளும் யாழ் குடாநாட்டில் இருக்கின்றனர் என்பது உறுதியானதும், ஆட்சியாளர்கள் கண்டுபிடித்திருந்த 'தமிழ் புத்திஜீவிகளும்' யாழ் செல்ல மறுத்துவிட்டனர்.

**அதேபோல உள்ளூராட்சித் தேர்தலில் வேட்பாளர்களைத் தயாரிக்க படையினர் மேற்கொண்ட முயற்சிகளும் தோல்வியில்தான் முடிந்திருந்தன. இதன் பின்னரே தமிழ் கட்சிகளின் கருத்துக்கு ஆட்சியாளர்கள் செவிசாய்த்து, தேர்தல் திகதியை பின்போட்டிருந்தனர். தமிழ்க்கட்சிகளை யாழ் செல்லுமாறும் கேட்டுள்ளனர்.**

எனவே,இராணுவரீதியில் மேலோங்குவது மூலமாக அரசியல் ரீதியிலும் வடக்கு-கிழக்கில் தமது பலத்தை மேலோங்கச் செய்ய ஆட்சியாளர்கள் கடந்த ஆண்டு மேற்கொண்ட முயற்சிகள் தோல்வி கண்டுள்ளன.

முல்லைத்தீவு முகாம் தாக்குதல் மூலமாகவும், புலுக்குணாவை முகாம் தாக்குதல் மூலமாகவும் வடக்கு, கிழக்கில் தமது இராணுவ பலம் வீழ்ச்சியுறவில்லை என்பதை எல்.ரி.ரி.ஈயினர் நிரூபித்துள்ளனர்.

**'96ம் ஆண்டில், இராணுவரீதியில் நோக்கும்போது படையினர் தரப்பில் ஏற்பட்ட உயிரிழப்புக்களும், ஆயுத இழப்புக்களும் எல்.ரி.ரி.ஈயினரைவிட பலமடங்கு அதிகமாகவே காணப்படுகிறது.**

பாலியல் பலாத்காரங்களும், மனித உரிமை மீறல்களும் '96ல் யாழ் குடாநாட்டில் வெகுவாக மலிந்திருக்கக் காணப்பட்டன.

கிழக்கிலும் ஷெல் வீச்சுக்களும், விமானக் குண்டுவீச்சுக்களும், கைதுகளும் '96ல் தான் மறுபடி அதிகரித்தன. இதனால் அங்குள்ள மக்களின் நம்பிக்கையீனங்களையே ஆட்சியாளர்கள் சம்பாதிக்க முடிந்திருக்கிறது. அதே வேளை மேற்கண்ட சம்பவங்கள் எல்.ரி.ரி.ஈ.யினருக்கு அரசியல் ரீதியில் சாதகமாக அமைந்திருக்கக் காணப்படுகின்றன.

'96ல், தமது இராணுவ பலத்தை எல்.ரி.ரி.ஈ.யினர் வெளிப்படுத்தியதோடு, படையினரின் அணுகுமுறைகள் காரணமாக, அரசியல் ரீதியிலும் எல்.ரி.ரி.ஈ.யினரின் பலம் உயர்ந்திருக்கிறது.

இதேவேளை '96ன் ஆரம்பத்தில் தெற்கில் தனது யுத்த வெற்றிகளை ஆட்சியாளர்கள் பிரசாரப்படுத்தி செல்வாக்குத் தேட முடிந்திருந்தது. ஆயினும் முல்லைத்தீவு முகாம் தாக்குதலும் வடக்கு-கிழக்கில் எல்.ரி.ரி.ஈ. கெரில்லாக்களின் தொடர்ச்சியான நடவடிக்கைகளும் அரசின் பிரசாரத்துக்கு தெற்கிலும் முன்னர்போன்ற வரவேற்பு இல்லாமல் செய்திருக்கின்றன.

**தமது யுத்த வெற்றிப் பிரசாரத்தில் ஏற்பட்ட பலவீனம் காரணமாகவே தென்பகுதியில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தவும் ஆட்சியாளர்கள் பின் நிற்கின்றனர்.**

அரசியல் தீர்வு முயற்சிகளில் ஏற்பட்ட பின்னடைவுகளும், வடக்கு-கிழக்கில் இராணுவ அணுகுமுறைகளும் தமிழ் மக்களிடம் ஆட்சியாளர் மீதான நம்பிக்கையீனங்களை ஏற்படுத்தி இருக்கின்றன.

தாம் கூறும் காலவரையறைகளுக்குள் போரில் வெற்றி பெற முடியாமையும், எல்.ரி.ரி.ஈ.யினரின் தொடர் தாக்குதல்களும் தென்பகுதியிலும் ஆட்சியாளரின் அரசியல் செல்வாக்குக்கு சவாலாக மாறியிருக்கின்றன.

**மொத்தத்தில் இனப்பிரச்சனைக்கு தீர்வாக யுத்த உபாயங்களை முதன்மைப்படுத்தும் அணுகுமுறை பயன்தராது என்பதையே '96ம் ஆண்டும் உணர்த்திச் செல்கிறது.**

'97ல் உண்மையான சமாதானத்தைக் கொண்டுவர விரும்பினால், அரசியல் பேச்சுக்களுக்கே ஆட்சியாளர்கள் முன்னுரிமை கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

இரு தரப்புமே சம பலத்தில் இருப்பதால் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஊடாக அரசியல் பேச்சுக்களை ஆரம்பிப்பதே சாலச் சிறந்ததாக இருக்கும்.

# சிவில் நிர்வாக மாயை

சிவில் நிர்வாகம் பற்றித் தற்காலத்தில் மிகுதியும் பேசப்படுகிறது. சிவில் நிர்வாகம் என்றால் என்ன? அத்துடன் தொடர்புடைய வேறுவிடயங்கள் எப்படி அமையும் என்பதை நாம் அறிந்துகொள்வது மிக முக்கியமாக இருக்கிறது.

### இருவகை நிர்வாகங்கள்

உலக நாடுகளுள் பல ஜனநாயக முறையிலான நிர்வாக அமைப்பைக் கொண்டுள்ளன. வேறு சில நாடுகளிலோ 'மிலிற்றரி' அரசாங்கம் அமைந்துள்ளது. ஜனநாயக நாடுகளில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் நாட்டுக்குத் தேவையான சட்டங்களை இயற்றிச் சாதாரண 'சிவிலியன்'களாகிய- பொருத்தமான தகுதிகளையும் தகைமைகளையும் கொண்ட அதிகாரிகளின் மூலம் பாராளுமன்றத்தில் ஆக்கப்பட்ட சட்டங்களை நடைமுறைப் படுத்துகின்றனர்.

இந்த செயற்பாட்டில் ஆயுதப் படையினருக்கோ அதன் தலைவர்களுக்கோ ஆணையிடும் அதிகாரம் எச்சந்தர்ப்பத்திலும் இருப்பதில்லை. பொலிஸ் அதிகாரிகளும் சாதாரண பொலிசாரும் சில இடங்களில் நிலை கொண்டிருப்பாராயினும் அவர்களுடைய செயற்பாடுகள் அவ்வப் பகுதிக்குப் [illegible]ப்பாக உள்ள சிவில் நிர்வாகத் தலை[illegible] ஆணையைப் பெற்றே நடை[illegible]

[illegible] 'இராணுவ ஆட்சி'யின் கீழ் சிவில் சேவையைச் சேர்ந்த அதிகாரிகள் நிர்வாகக் கடமையைச் செய்த போதிலும் ஆயுதப்படைத் தலைவர்களே சட்டங்களை இயற்றுவர். அவர்களின் ஆணையின்படிதான் சிவில் நிர்வாகிகள் நடப்பர்.

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் எப்போதும் இராணுவ ஆட்சி அமைய வில்லையாயினும் துரதிஷ்டவசமாக கடந்த சில ஆண்டுகளாக வடக்கிலும் கிழக்கிலும்



அமுலில் இருப்பது ஆயுதப்படையினரின் ஆட்சியே. இங்குள்ள சிவில் நிர்வாகத் தலைவர்களுக்கே ஆணையிடும் அதிகாரம், அந்தந்தப் பகுதிகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள ஆயுதப் படைத் தளபதிக் குண்டு. அவர்கள் தீர்மானித்தால் பாடசாலைகளை மூடலாம், பஸ்கள் ஓடாதபடி செய்யலாம், புகையிரதத்தைக் குறிப்பிட்ட இடத்துக்கே திருப்பிவிடலாம்; ஜே.ஆர். ஜயவர்த்தன கூறியதுபோல்- ஆணைப் பெண்ணாக்கவும் பெண்ணை ஆணாக்கவும் முடியாதேதவிர, மற்றெல்லாம் வல்லவர்கள் இங்குள்ள ஆயுதப்படையினர்.

### சிவில் நிர்வாகிகள் யார்?

முன்னர் முதல் நிலையில் மாகாணங்களுக்கு பொறுப்பாக இருந்த அரசாங்க அதிபர்கள் தற்போது மாவட்ட அரசாங்க அதிபர்கள், அவர்களுக்கு அடுத்த நிலையில் இருந்தவர்கள் டீ.ஆர்.ஓ.என அழைக்கப்பட்ட பிரிவுக்காரியாதிபர்கள், தற்போது அவர்கள் டி.எஸ். என்றழைக்கப்படும் பிரிவுச் செயலாளர்கள். அதற்கடுத்த படியில் இருந்தவர்கள் கிராம அதிகாரிகள் அல்லது விதானைமார். தற்போது அவர்கள் ஜீ.எஸ்.ஓ. அல்லது கிராமசேவக உத்தியோகத்தர்கள். மாகாண அரச அதிபர்கள் பல்வேறு திணைக்களத் தலைவர்களிடமிருந்து அறிவுறுத்தல்களைப் பெற்றுத் தத்தமது எல்லைக்குட்பட்ட பகுதிகளுள் அவற்றை நடைமுறைப் படுத்தி உதவினர்.

### மக்களின் பாதுகாப்பு

குறிப்பிட்ட பகுதியில் வாழும் மக்களின் பாதுகாப்பிற்கு அவ்வப்பகுதியில் நிலை கொண்டிருக்கும் பொலிஸ் படையினரே முற்று முழுதான பொறுப்புவாய்ந்தவர்களாக இருந்தனர். அடக்க முடியாத பெருங் கலவரங்களை அடக்குவதற்கு மட்டுமே ஆயுதப்படையினர் தருவிக்கப்படுவது மரபு. இதுதவிர பூகம்பம், சூறாவளி, பெரு வெள்ளம் போன்ற அநர்த்தங்கள் நிகழுங்காலும், மக்களையும், மக்களினதும், அரசாங்கத்தினதும் உடைமைகளையும் பாதுகாப்பதற்குமே (கொல்வதற்கும், அழிப்பதற்குமல்ல) ஆயுதப் படையினர் அழைக்கப்படுவர். இவையே சாதாரணமான சிவில் நிர்வாகத்தின் சில கூறுகள் என்பதைச் சுதந்திரத்துக்கு முன்னரும் பின்னரும் வாழ்கின்ற அறிவார்ந்த மக்கள் ஒத்துக் கொள்வர். இப்படியான தன்மைகளைக் கொண்ட 'சிவில் நிர்வாகம்' இலங்கையின் வடகிழக்குப் பகுதியில் எந்த வொரு மூலையிலாவது நடைமுறையில் இருக்கிறதா? இல்லவேயில்லை.

பாதைகள் செப்பனிடப்படலாம்; அதன் மேல் பிரயாணிகள், வாகனங்கள் பிறவும் செல்லலாம்; பாடசாலைகள் நடைபெறலாம், வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்கலாம்; கடைகள் சந்தைகளில் கொள்ளல்- கொடுத்தல் நடைபெறலாம்; காரியாலயங்கள் சகலதும் கருமங்கள் செய்யலாம்; வங்கிகள் பணக் கொடுக்கல் வாங்கல் செய்யலாம்; தபால் நிலையங்களில் வேலைகள் தடையின்றி நடைபெறலாம்; இவையெல்லாம் ஒன்று சேர்வதைச் சிவில் நிர்வாகத்தின் உருவம் எனக் கொள்ளலாமா? 'இராணுவ' நிர்வாகத்திலும் இவையெல்லாம் நடை பெறுகின்றனவே. ஆகவே, இவை சிவில் நிர்வாகத்துக்கான எடுத்துக்காட்டாகக் கொள்ள முடியாதவை. ஆனால், இவையெல்லாம் நடைபெறுவது யாருடைய பணிப்பின் கீழ்; யாருடைய ஆணையின் கீழ், என்பதுதான் சிவில் நிர்வாகமா? 'இராணுவ' நிர்வாகமா? என்பதை நிர்ணயிக்கும் அளவு கோலாகும்.

வடக்கு-கிழக்கில் உள்ளூராட்சி சபைகளுக்குத் தேர்தல்களை நடத்தி, அச்சபைகள் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளால் நடத்தப்பட்டாலும்கூட ஆணையிடும் அதிகாரம் படையினரிடமே இருக்கும். குறிப்பிட்ட பிரதிநிதிகளும், சபைகளும் பொம்மைகளாக இருக்க வேண்டியதுதான். அதனை சிவில் நிர்வாகம் என்றழைப்பது பொருத்தமுடையதாக இருக்காது.

செ.க.



படிப்பகம்

www.padippakam.com

தருவது 24 ரசிகன்

# கொள்ளை ராணி

## பூலான்தேவி

கரையில் நின்ற வள்ளங்களுக்குள் யாராவது மறைந்திருக்கிறார்களா என்று பார்த்து வருமாறு விக்கிரம் மல்லாவை அனுப்பி வைத்தான் பாபுசிங் குஜார்.

தனது துப்பாக்கியை வள்ளங்களை நோக்கி நீட்டிக்கொண்டு கவனமாக அடியெடுத்து வைத்து முன்னேறினான் விக்கிரம் மல்லா.

அப்போதுதான் பாபுசிங் குஜார் தனது துப்பாக்கியை விக்கிரம் மல்லாவின் முதுகைக் குறிபார்த்து நீட்டினான்.

'இந்தப் பாவி விக்கிரம் மல்லாவை கொல்லப்போகிறானா?' எனக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

கத்திக் குரல் கொடுத்து விக்கிரம் மல்லாவை எச்சரிக்கலாமா, தப்பிக் கொள்ளச் செய்யலாமா என்று நினைத்தேன்.

அதற்கிடையே விக்கிரம் மல்லா வள்ளங்களுக்கு அருகில் சென்று உள்ளே எட்டிப்பார்த்துவிட்டு எங்களை நோக்கித் திரும்பினான்.

அப்போதும் பாபுசிங் குஜார் தனது துப்பாக்கியால் அவனைக் குறிபார்த்துக் கொண்டிருந்தான்.

விக்கிரம் மல்லா பயந்ததாகத் தெரியவில்லை. 'எல்லோரும் வரலாம்' என்பது போல சைகை செய்தான்.

பாபுசிங் குஜார் உரத்துச் சிரித்தான்.

**கடந்த வாரம்**

**பூலான் தேவியை கொள்ளைக் கோஷ்டியினர் கடத்திச் செல்கின்றனர். பாபுசிங் குஜார் என்பவனே அக் கோஷ்டியின் தலைவன். அவனுக்கு அடுத்த நிலையில் இருப்பவன் விக்கிரம் மல்லா. அவன்தான் முன்னர் ஒருமுறை, பூலானுடன் வம்பு செய்த கொள்ளைக் கோஷ்டியில் ஒருவனை கன்னத்தில் அறைந்தவன். அவனை அடையாளம் கண்டு கொண்டதும் பூலான் மகிழ்கிறாள்.**

**இனி...**

பாறைகள் உருண்டுவிழும் சப்தம் போல இருந்தது அந்தச் சிரிப்பு.

"மல்லா, விக்கிரம் மல்லா, நான் உன்னைச் சுடப்போகிறேன். சுடட்டுமா?" என்று தன் சிரிப்பின் இடையே கேட்டான் பாபுசிங் குஜார்.

"தக்குர் சாஹறாப்! விளையாட்டு வேண்டாம். இப்போதே நாம் புறப்பட்டால்தான் அக் கரைக்குப் போய்ச்சேர முடியும். வாருங்கள்," என்று மிக நிதானமாகச் சொன்னான் விக்கிரம் மல்லா.

'தக்குர்' என்பது நிலம்படைத்த பண்ணையார்களை குறிப்பிடும் வார்த்தை. கிராமத்தில் அவர்கள் உயர்ந்த சாதியாகக் கருதப்படுவார்கள்.

விக்கிரம் மல்லாவின் பயமில்லாத நிதானமும், ஒல்லியான உடல்வாகு என்றாலும், உயரமான- திடகாத்திரமான அவன் தோற்றமும் எனக்குப் பிடித்திருந்தது. இந்தக் கொள்ளைக் கோஷ்டிக்கு அவன் தலைவனாக இல்லாமல், இந்தப் பரட்டைத்தலைக் கரடி தலைவனாக இருக்கிறானே என்று நினைத்தேன்.

பாபுசிங் குஜார் தனது துப்பாக்கியை தூக்கிக்கொண்டு முன்னால் போக, நானும் அவன் ஆட்களும் பின்னால் சென்றோம்.

பாபுசிங் குஜாரும், விக்கிரம் மல்லாவும் முதலில் வள்ளத்தில் ஏறிக்கொண்டார்கள்.

என்னையும், எனக்குப் பின்னால் துப்பாக்கியோடு வந்தவனையும் தாங்கள் இருந்த வள்ளத்திற்குள் ஏறுமாறு சொன்னான் பாபுசிங் குஜார்.

மற்றவர்கள் இன்னொரு வள்ளத்தில் ஏறிக்கொண்டனர்.

விக்கிரம் மல்லாவும் அந்த வள்ளத்தில் இருப்பதால் எனக்கு ஒருபுறம் மகிழ்ச்சியாகவும் இருந்தது. அந்தக் கரடி பாபுசிங் குஜாரும் இருப்பதால் வெறுப்பாகவும் இருந்தது.

வள்ளத்துக்குள் கெட்ட நாற்றம் வீசியது. எனக்கு வயிற்றைக் குமட்டிக் கொண்டு வந்தது.

இந்த வள்ளங்களில்தான் ராஜஸ்தானிலிருந்து உத்தரப்பிரதேசம் ஊடாக மத்தியப் பிரதேசம் செல்லும் பயணிகள் செல்வார்கள். பொதிகளைச் சுமந்து செல்லும் ஒட்டகங்களும் இந்த வள்ளங்களில் தான் ஏற்றிச் செல்லப்படும்.

அந்த ஒட்டகங்களின் மலம் சலமெல்லாம் கழுவப்படாமல் கிடந்தன. பார்க்கவே அருவருப்பாக இருந்தது.

பாபுசிங் குஜார் என்னை வள்ளத்தின் தரையில் குப்புறப்படுத்துக்கொள்ளுமாறு கட்டளையிட்டான்.

ஒட்டகங்கள் கழித்த மலமும், சலமும் காய்ந்தும் காயாமலும் கிடந்தன. அந்த நரகலின் மீது எப்படிப் படுப்பது என்று தயங்கினேன்.

விக்கிரம் மல்லாவைப் பார்த்தேன். அவனும் என்னையேதான் பார்த்துக் கொண்டிருந்தான். நான் பார்த்ததும் அவன் முகத்தைத் திருப்பிக்கொண்டு வேறெங்கோ பார்த்தான்.

அவன் கண்களில் தெரிந்தது பரிவா, அல்லது அலட்சியமா என்று என்னால் உடனே புரிந்துகொள்ள முடியவில்லை.

"என்னடி யோசனை? படு என்றால் உடனே படுத்துவிடவேண்டும்! எப்படி படுக்கச் சொன்னாலும், எங்கே படுக்கச் சொன்னாலும் படுக்கத்தான் வேண்டும்! அட..படு, படடி!" கத்தினான் கரடி பாபுசிங் குஜார்.

இனியும் தாமதித்தால் அடிப்பான். அல்லது ஏதாவது வம்பு செய்வான். அதனால் கைக்கட்டோடு மண்டியிட்டு அமர்ந்து அப்படியே குப்புறப்படுத்துக் கொண்டேன்.



பூலான்

என் முகத்துக்கு அருகே ஒரே நரகல். நான் கண்களை மூடிக்கொண்டு கிடந்தேன். கைகள் பின்புறமாகக் கட்டப்பட்டிருந்தமையால் தோள் மூட்டில் மரணவலியாக இருந்தது. நீண்ட தூரம் நடந்து வந்ததால் உடல் அசதியாக இருந்தது.

என்னையறியாமலேயே தூங்கிப் போனேன். என் பின்புறத்தில் பூட்ஸ் காலால் உதைத்து எழுப்பினார்கள்.

கரை வந்துவிட்டது. எல்லோரும் இறங்கிக்கொண்டார்கள்.

படகுச் சொந்தக்காரனுக்கு ஒரு கட்டாக இருந்த நோட்டுக்களை எடுத்து நீட்டினான் பாபுசிங் குஜார்.

படகுச் சொந்தக்காரன் முகமெல்லாம் பல்லாக இளித்துக்கொண்டே, பாபுசிங் குஜாரின் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

யாரோ என் பின்புறமாக நின்று கைக் கட்டுக்களை அறுத்துவிட்டார்கள். அதுவே பெரிய ஆறுதலாக இருந்தது. மெல்லத் திரும்பிப் பார்த்தேன்.

கட்டை அறுத்துவிட்ட கத்தியுடன் நின்று கொண்டிருந்தான் விக்கிரம் மல்லா.

முதலில் அவன் கண்களைத்தான் பார்த்தேன். அந்தக் கண்களுக்குள் ஏதோ ஒரு காந்தசக்தி இருப்பது போலத் தெரிந்தது.

இது என்ன; அவனும் என் கண்களைத் தான் பார்க்கிறானா? அப்போதுதான் எனக்குள் அந்த மாற்றத்தை உணர்ந்தேன். நன்றாக குளிர்ந்து சில்லிட்ட நீரை யாரோ என் நெஞ்சுக்குள் கொட்டியதுபோல இருந்தது.

முதன் முதலாக எனக்கு வெட்கமாக இருந்தது. சட்டென்று அவன் கண்களில் இருந்து என் பார்வையை விலக்கிக்கொண்டு தலையைக்குனிந்து கொண்டேன்.

நன்றி சொல்லலாமா என்று நினைத்தாலும் பேச்சு வரவில்லை. எனக்கே வியப்பாக இருந்தது. என்ன இது என்றுமே இல்லாத வெட்கமும், நா அடக்கமும்? எத்தனை நேரம் அப்படியே நின்றிருப்பேன் என்று தெரியவில்லை.

"ம்.. முன்னாலே போ" என்று குரல் கேட்டதும் வேறு ஏதோ உலகில் இருந்து மீண்டதுபோல் இருந்தது. நிமிர்ந்து பார்த்தேன்.

அங்கே விக்கிரம் மல்லாவைக் காணவில்லை. துப்பாக்கியுடன் ஒரு கழுதை நின்றுகொண்டிருந்தான். விக்கிரம் மல்லா முன்னாலே போய்க் கொண்டிருந்தான்.

இருபுறமும் புற்கள் உயரமாக அடர்ந்து வளர்ந்திருந்த பாதை வழியாக நாங்கள் போய்க்கொண்டிருந்தோம்.

நான் விக்கிரம் மல்லாவின் முதுகையே பார்த்துக்கொண்டு நடந்தேன். 'விக்கிரம் மல்லா, நீ நல்லவன். இவர்களைவிட வல்லவன்' என்று அவனிடம் தனியாகச் சொல்ல வேண்டும்.

வழியில் ஒரே ஒரு முறை மட்டும் விக்கிரம் மல்லா திரும்பிப் பார்த்தான். சட்டென்று நான் தலையைக் குனிந்து கொண்டேன். பின்னர்தான் நினைத்தேன்; அவனை நோக்கி நன்றி கலந்து மெல்லச் சிரித்திருக்கலாம்.

ஒரு பாழடைந்த கட்டிடத்தில் எல்லோரும் தங்கினார்கள். தனது ஆட்களில் சிலரை பக்கத்துக் கிராமத்துக்கு அனுப்பிவைத்தான் பாபுசிங் குஜார்.

அவர்கள் சென்று உணவு சேர்த்துக் கொண்டு வந்தார்கள். ஒரு தட்டில் எனக்கும் உணவு தந்தார்கள்.

நான் மறுக்கவில்லை. பசியென்றால் அப்படியொரு பசி. நடப்பது நடக்கட்டும்; உடலைக் காயப்போடுவானேன்? மூக்கு முட்ட ஒரு பிடி பிடித்தேன்.

விக்கிரம் மல்லாவைத் தேடினேன். என் பார்வையில் அவன் படவில்லை. என் அருகே துப்பாக்கியுடன் ஒருவன் எப்போதும் காவலிருந்தான்.

அந்தப் பாழடைந்த கட்டிடத்தின் உள்ளே தான் பாபுசிங் குஜார் தங்கியிருந்தான். வெளியே மரநிழலில் நானும், அவனது ஆட்களும் இருந்தோம்.

கட்டிடத்தின் முன்பாக இரண்டு மூன்று பேர் எந்நேரமும் துப்பாக்கியுடன் விழிப்பாக காவல் இருந்தார்கள்.

கிராமத்திலிருந்து சிலர் வந்து பாபுசிங் குஜாரை சந்தித்துவிட்டுச் சென்றார்கள். வரும்போது மூட்டைகளோடு வந்தார்கள். வெறுங்கையுடன் திரும்பிச் சென்றார்கள்.

இருளாகிக் கொண்டிருந்தபோது பாபுசிங் குஜார் என்னை அழைப்பதாகக் கூறி அவனிடம் கூட்டிச் சென்றார்கள்.

அவன் கண்கள் சிவந்திருந்தன. அவன் முன்பாக மதுப்புட்டிகளும், நெருப்பில் வாட்டிய இறைச்சித் துண்டுகளும் பரவிக் கிடந்தன.

என்னைக் கண்டதும் விழிகளை அகட்டிப் பார்த்தான். துப்பாக்கியை கையில் எடுத்து என் மார்பின் நடுவே முனையை வைத்து அழுத்திக் கொண்டே "சுட்டு விடட்டுமா கண்ணு! சுட்டு விடட்டுமா?" என்று கேட்டான். நிறைவெறியில் அவன் பேச்சுத் தெளிவில்லாமல் இருந்தது.

நான் மௌனமாக நின்றேன். துப்பாக்கி முனையை நெஞ்சில் இருந்து விலக்கி, என் கால்கள் இடையே செருகினான். கண்களைச் சிமிட்டி இளித்தான்.

நான் அப்படியே அசையாமல் நின்றேன். என்ன நினைத்தானோ தெரியாது, துப்பாக்கியை ஒரு ஓரமாக வைத்துவிட்டு, என் அருகே வந்தான்.

என்னை முறைத்துப் பார்த்துவிட்டு, "அடியே பூலான் நீ பெரிய அழகியாடி?" என்று கேட்டான்.

"இல்லை!" என்றேன்.

"நீ அழகிதான்! நீ...நீ அழகிதானடி! சொல்லடி நீ அழகிதானே?"

"இல்லை!"

"பொய்! பொய் சொல்கிறாய் நீ!"

"இல்லை, உண்மைதான்!"

"இல்லை பொய்தான், பொய்...ஆ.... இப்படிச் செய்தால் என்ன? நீ பொய் சொல்கிறாயா இல்லையா என்று நான் கண்டுபிடிக்கப்போகிறேன்! மூக்கு, இது தானே மூக்கு! வெட்டிவிடலாமா? சொல்லு வெட்டிவிடவா?"

நான் கண் இமைக்காமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தேன். இவனுடன் சண்டை போடுவதால் பயன் இல்லை. என்னதான் செய்யப்போகிறான் என்று பார்த்துவிடலாமே என்று முடிவு செய்து விட்டேன்.

என் மூக்கை தனது விரல்களால் வருடிப் பார்த்தான். பின் என் உதடுகளை தன் கட்டை விரலால் மெல்ல மெல்ல வருடிப் பார்த்தான்.

"பரவாயில்லையே! பஞ்சு மிட்டாய் மாதிரி இருக்கிறதே! அந்தக் கிழவன் பூல்சிங்குக்கும் கொடுத்தாயா? கிழவன் சாப்பிட்டானா?"

எனக்கு எரிச்சலாக இருந்தது.

"பூல்சிங் எனக்கு அப்பாமாதிரி" என்றேன்.

"அப்படியானால் நான் உனக்கு புருஷன் மாதிரியா? மாதிரியென்ன, மாதிரி: புருஷனே தான்!"

வெறித்தனமாகச் சிரித்துக்கொண்டே என் சேலையை இழுத்து உருவினான்.

நான் சேலையைப் பிடித்திழுத்தபோது எட்டி என் வயிற்றில் உதைத்தான். மல்லாந்து விழுந்துபோனேன்.

சேலையை உருவி மூலையில் போட்டு விட்டு என்னை குனிந்து பார்த்துச் சிரித்தான்.

"அடங்காத குதிரை என்றால் இந்த பாபுசிங் குஜாருக்குப் பிடிக்கும். ரொம்ப ரொம்பப் பிடிக்கும்! சண்டிக்குதிரையும் பாபுசிங் குஜார் முன்னால் மண்டிபோடுமடி கண்ணு!" சொல்லிவிட்டுச் சிரித்தான். "நான் என்ன பண்ணுகிறேனோ அதே மாதிரியே நீயும் செய்யவேண்டும். மறுத்தால் உதைதான்!" தன் சட்டையைக் கழற்றி வீசினான்.

அதேநேரம்,

"தக்குர் சாஹறாப்!" என்று சற்று உரத்த குரலில் அழைத்தபடி யாரோ வந்தார்கள்.

அது விக்கிரம் மல்லா.

தாக்குண்ட சிங்கம்போல அவனை நோக்கித் திரும்பினான் பாபுசிங் குஜார்.

(தொடர்ந்து வரும்)

# குடியின் மடியில் முன்னாள் ஜேம்ஸ் பொண்ட்

ஜேம்ஸ் பொண்ட் படங்களில் அசத்தலான கதாநாயகனாக நடித்தவர் சீன் கொனரி. ஜேம்ஸ் பொண்ட்டாக அதிக படங்களில் நடித்தவரும் அவர்தான்.

ஜேம்ஸ் பொண்ட் படங்களில் ஜேம்ஸ் பொண்ட்மீது அழகிகள் பைத்தியமாக அலைவார்கள். நிஜ வாழ்க்கையிலும் சீன் கொனரி மீது பல பெண்கள் பைத்தியமாகத்தான் இருந்தார்கள். சீன் கொனரிக்கும் பெண்கள் என்றால் ஒரே குதூகலம்தான்.

'ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு ஒரு கோல மயில் என் துணையிருப்பு' என்ற கண்ணதாசன் பாடல் சீன் கொனரிக்கும் பொருத்தமாக இருந்தது.

ஆனால் இப்போது மது, மாது, இரண்டிலும் பின்னதை சுத்தமாக கைகழுவி விட்டார் சீன் கொனரி. எப்போதும் மதுவில் 'வீழ்ந்து கிடக்கிறாராம்.

அவரது 'குடி' முறையே தனிப்பாணி. பியர், ரம், ஜின், வோட்கா என்று எல்லாவற்றையும் கலந்து மசாலாவாகக் குடிக்கிறார்.

வசதி இருந்தும், கோடி கோடியாகப் பணம் இருந்தும், புகழ் இருந்தும் குடியால் கெட்டுக் குட்டிச் சுவராகிக் கொண்டிருக்கிறாரே என்று டாக்டர்களும், நண்பர்களும் கவலைப்படுகிறார்களாம்.



# இந்தியாவில் பெருகிவரும் அலசும் சஞ்சிகைகள்

இந்தியாவின் கலாசாரத்தை மேலை நாட்டு நாகரீக மோகம் கெடுத்துக் கொண்டிருப்பதாக கண்டனக் குரல்கள் எழுந்து கொண்டிருக்கின்றன.



கட்டுப்பெட்டித்தனமான இந்தியப் பெண்கள் அழகிப் போட்டிகள் என்றும், ஃபாஷன் ஷோக்கள் என்றும் அலையத் தொடங்கிவிட்டார்கள். போதாக் குறைக்கு பொப் இசை நிகழ்ச்சிகளுக்கு சென்று ஆட்டம்போடுமளவுக்கு போய்விட்டார்கள் என்றெல்லாம் விமர்சனங்கள் ஒரு புறம் தான் கிளப்பிக் கொண்டிருக்கின்றன.

மறுபுறம் தொலைக்காட்சி அலை வரிசைகளிலும், திரைப்படங்களிலும் 'செக்ஸ்' முக்கிய இடத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறது.

செக்ஸ் தொடர்பான விளக்கங்கள், விவாதங்கள் என்பவற்றை பெண்கள் சஞ்சிகைகள் துணிச்சலாக நடத்திக் கொண்டிருக்கின்றன.

அதுபோதாது என்று சர்வதேசப் பெண்கள் சஞ்சிகையான 'காஸ்மாபாலிடன்' என்னும் சஞ்சிகையும் இந்தியாவில் மறு பிரசுரமாக வெளியிடப்படுகிறது. 'இந்திய ருடே' பத்திரிகை நிறுவனம் அதை பிரசுரம் செய்கிறது.

பெண்களின் மனதைக் குடையும் பல்வேறு பிரச்சனைகளை அக்குவேறு ஆணிவேறாக துணிச்சலாக அலசுகிறது அப்பத்திரிகை.

உதாரணத்திற்கு அதில் வெளியான கட்டுரையில் ஒரு துளி:

"...... இன்னுமொரு பெரிய தவறு என்னவெனில் பெரும்பாலான பெண்கள் படுக்கையறையில்தான் நிறையப் பேசுகிறார்கள். கட்டளையிடுகிறார்கள். இதைச் செய், இப்படிச் செய்யாதே, இன்னும் வேகமாக, கொஞ்சம் குறைவாக என்றெல்லாம் ஒரு இராணுவ அதிகாரி போல அவள் கட்டளையிடும் போது, அவைகளைக் கேட்பதில்தான் கவனம் செல்கிறதே தவிர, உண்மையில் ஆணின் கவனம் சிதறிவிடுகிறது.."

# அழகியின் கண்ணீர்

முன்னாள் உலக அழகி சுஷ்மிதா சென் கண்ணீர்விட்டுக் கொண்டிருக்கிறார். தினம் தோறும் அவரைப்பற்றி கிசு கிசுக்கள் வருகிறதாம்.

சுஷ்மிதா சென் அடிக்கடி அமெரிக்காவுக்கு பறக்கிறார். அங்கு பெரும் புள்ளிகளுடன் சேர்ந்து கும்மாளமடிக்கிறார் என்றெல்லாம் செய்திகள் வருகின்றன. குடித்துவிட்டு கார் செலுத்தியதற்காக அமெரிக்காவில் தண்டப் பணமும் கட்டினாராம் சுஷ்மிதா.

அதற்கு சுஷ்மிதா என்ன சொல்கிறார் தெரியுமா? "விபத்து ஏற்பட்டது உண்மை. நான் குடித்துவிட்டு கார் ஓட்டியதால் விபத்து ஏற்பட்டது என்பதுதான் பொய்யான செய்தி. சாலை வழுவழுப்பாக இருந்தது. அதனால்தான் விபத்து ஏற்பட்டது. நான் என்ன செய்ய முடியும்?" என்கிறார் சுஷ்மிதா.

"திருமணமான ஒரு புள்ளியுடன் என்னை இணைத்துப் பேசுகிறார்கள். அது வேண்டுமென்றே கட்டிவிட்ட கற்பனை. நான் செயற்கை மார்பகம் பொருத்திக் கொண்டிருப்பது பற்றியும் பேசுகிறார்கள். அது என் சொந்த விஷயம். நான் பணத்திற்காகவோ, புகழுக்காவோ ஏங்குபவள் அல்ல. அது இரண்டும் என்னிடம் போதியளவு இருக்கிறது. பின்னர் எதற்காக நான் பெரும் புள்ளிகளைத் தேடிப் போக வேண்டும்?"



என்றும் கேட்கிறார் சுஷ்மிதா.

சுஷ்மிதா சென் சினிமாவுக்கு வந்துதான் பெயரைக் கெடுத்துக் கொண்டார். அவரது கவர்ச்சியான போசுகளும், சில சர்ச்சைக்குரிய பேட்டிகளுமே அவரைப் பற்றிய கிசு கிசுக்கள் பரவக் காரணமாக இருக்கின்றன. செய்வதையெல்லாம் செய்துவிட்டு இப்போது கண்ணீர்வடித்து என்ன பயன்?

கண்கெட்ட பின்னர் சூரிய நமஷ்காரம் தேவையா?

# விசித்திரமான திருமணம்

தாய்வான் அரசாங்கம் முடியைப் பிய்த்துக் கொண்டிருக்கிறது. அதற்கு காரணம் அங்கு நடைபெற்றுள்ள ஒரு திருமணம்.

திருமணம் நடந்தால் முடியைப் பிய்த்துக் கொள்வானேன்? என்று நீங்கள் நினைப்பது நியாயம்தான்.

ஆனால் இது சாதாரண திருமணம் அல்ல. விவகாரமான, விகாரமான திருமணம். அதாகப்பட்டது; திருமணம் செய்து கொண்ட இருவருமே ஆண்கள்.

ஒருத்தர் பெயர் சூயு ஷெங், இன்னொருவர் பெயர் ஹாரிமன். அமெரிக்காவில் உயர் கல்வி கற்றபோதுதான் இருவரும் காதல் வயப்பட்டார்களாம். சமீபத்தில் கல்யாணப் பத்திரிகையெல்லாம் அடித்து ஐநூறுபேர் மத்தியில் தடபுடலாக மோதிரம் மாற்றிக் கொண்டார்கள்.

தாய்வானில் புயலைக் கிளப்பிவிட்டுள்ள இத் திருமணத்தால் அரசாங... டிக் கொண்டிருக்கிறது. ... போக்கைப் பார்த்தீர்கள்...





படிப்பகம்

www.padippakam.com

# கண்ணால் காண்பதுபொய்



# வானமே எல்லை

## புதிய சாதனை

← இந்தக்கட்டிடத்தைப் பார்த்ததும் கிறிஸ்தவ தேவாலயம் போலத் தெரிகிறதல்லவா. கண்ணால் காண்பதும் பொய் என்பது சரிதான்! இது ஒரு நட்சத்திர ஹோட்டல். உலகிலேயே மிகப் பெரிய நட்சத்திர ஹோட்டலாகவும் இதுதான் புகழ் பெறப்போகிறது. இன்னமும் சில வேலைகள்தான் பாக்கியிருக்கிறது. அதுவும் முடிந்ததும் அமர்க்களமாக திறந்துவைக்கப் போகிறார்கள்.

இந்தக் ஹோட்டல் வடகொரியாவின் தலைநகரான 'பியாங் யாங்' வில் இருக்கிறது. 105 மாடிகள் இதில் இருக்கின்றன. இதுவரை உலகில் மிகப் பெரிய ஹோட்டலாக இருப்பது சிங்கப்பூரில் 'வெஸ்டின் ஸ்டாம் போர்ட்' ஹோட்டல். அதில் 75 மாடிகள் உள்ளன. அதன் உயரம் 741.9 அடி. அதனை முறியடிக்க வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது இந்தக் ஹோட்டல். 105 வது மாடியில் இருப்பவர் வானத்தை வருடிப்பார்க்கலாமாக்கும்!

↓ கோழியை வீட்டில் வளர்க்கலாம், கூட்டில் வளர்க்கலாம். கண்ணாடிக் குடுவையில் வளர்க்கலாமா? வளர்க்கலாம் என்று புதுமை படைத்திருக்கிறார் இந்த இளைஞர். இவரது பெயர் பில்லிபாவக். கிரீஸ் நாட்டைச் சேர்ந்தவர். குஞ்சாக இருந்தபோதே குடுவைக்குள் வைத்து வளர்க்க ஆரம்பித்தாராம். இப்போது குஞ்சு வளர்ந்து இப்படிக் காட்சியளிக்கிறது. கண்டவர்கள் எல்லாம் வியக்கின்றனர்.

# புதுமையான கோழி வளர்ப்பு

குடுவையோடு தருமாறு கேட்டு நிறையப் பணம் கொடுக்க பலர் முன் வந்தார்களாம். இவர் மறுத்துவிட்டார். வாங்கிச் செல்பவர்கள் சரியாகப் பராமரிக்காமல் விட்டால் கோழி செத்துவிடும் என்பதும் மறுப்புக்குக் காரணமாம்.

**தகவல் பெட்டி**





## துறைமுக அதிசயம்

தீப்பெட்டிகள் போல அடுக்கப்பட்டிருக்கும் அனைத்தும் கட்டிடங்கள்தான். உலகிலேயே மிக பிஸியான நகரம் அமெரிக்காவில் உள்ள நியூயோர்க். அங்குதான் கட்டிடங்களை இப்படி அடுக்கி வைத்ததுபோல கட்டியிருக்கிறார்கள். நகரை சூழவுள்ளது துறைமுகம். உலகில் மிகப் பாரிய துறைமுகமும் இதுதான். ஒரே தடவையில் 391 கப்பல்கள் தரித்து நிற்க முடியும்.

இந்தத் துறைமுகத்தின் நீர்ப்பரப்பு மட்டும் 1215 கிலோ மீட்டர் அளவுக்கு நீண்டுள்ளது. இங்கு 391 இறங்குதுறைகளும் இருக்கின்றன.

உலகம் எவ்வளவு முன்னேறி வருகிறது பார்த்தீர்களா? நம் நாட்டில் துறைமுகங்கள் என்றாலே பாதுகாப்பு கெடுபிடிகள்தான் நினைவுக்கு வருகின்றன. நம் நாட்டில் இயற்கைத் துறைமுகங்கள் இருந்தும் செயற்கை யுத்தத்தால் துறைமுகங்களும் யுத்த முகம் தரித்துள்ளன.



# அங்குமோர் ஆலயம்

↑ இந்தியாவில் பிரபலமான மாபெரும் இந்துக் கோயில்கள் இருப்பது தெரிந்ததுதான். இந்தியாவுக்கு வெளியே உள்ள மிகப் பெரிய இந்து ஆலயம் எங்கே இருக்கிறது தெரியுமா? நம்நாட்டில் என்று சொல்லி விடாதீர்கள்!

இந்தியாவிற்கு வெளியே உள்ள கல்லால் கட்டப்பட்ட மிகப் பெரிய இந்துக்கோயில் வட இலண்டனில் நீஸ்டென் என்னுமிடத்தில் இருக்கிறது. படத்தில் இருக்கிறது பாருங்கள் அதேதான்!

இதன் பெயர், 'சிறீ சுவாமி நாராயண் மந்திர்'. 1995 ஜூன் மாதம் இக் கோயில் கட்டி முடிக்கப்பட்டது. இதனைக் கட்டுவதற்காக 2 ஆயிரத்து 828 தொன் சுண்ணாம்புக் கல் பல்கேரியாவில் இருந்தும், 2 ஆயிரம் தொன் மாபிள் கற்கள் இத்தாலியில் இருந்தும் கொண்டு செல்லப்பட்டன. ஆயிரத்தி நூறு ஊழியர்கள் கட்டிடப் பணிகளில் ஈடுபட்டனர். அதுதவிர ஆயிரத்தி ஐநூறு சிற்பாஸ்திரிகளும் முக்கிய கட்டுமாணப் பணியில் பங்குகொண்டனர்.

கோயில் வளாகத்தின் உள்ளே சமையல் அறைக்கூடங்கள், விளையாட்டு மைதானம், தோட்டம், அலுவலகங்கள், ஐந்து மதகுருமார்கள் தங்கியிருப்பதற்கான வீடுகள் என்பவையும் இருக்கின்றன.

இக் கோயிலின் கட்டுமானப் பணிகளுக்கு பக்தர்கள் தாராளமாக அள்ளிக்கொடுத்தார்கள். அன்பளிப்பாக கிடைத்த தொகை, 5 மில்லியன் பவுன்ஸ் நம்மூர் பெறுமதிப்படி கிட்டத்தட்ட 46 1/2 கோடி ரூபாய்கள்!




# அதிஷ்ட மச்சம்

குறிப்பிட்ட துறைகளில் கில்லாடிகளாக இருப்பவர்களைப் பற்றிப்பேசும் போது, "அவனுக்கு மச்சமடா" என்பார்கள். காதல் மன்னர்களையும் அப்படி அழைப்பதுண்டு. புகழுக்கும், அதிஷ்டத்துக்கும் காரணமான மச்சம் சிலரது உடலில் இருப்பதாக கருதித்தான் அப்படிக் கூறுவது வழக்கம்.

மனிதர்களிடம் மட்டுமல்ல விலங்குகளின் உடம்பிலும் மச்சம் இருக்கிறது. படத்தில் இருக்கும் குதிரையின் உடம்பிலும், மாட்டின் நெற்றியிலும் பாருங்கள், அசத்தலான மச்சங்கள் இருக்கின்றன. அந்த மச்சங்களின் அதிஷ்டத்தால் உலக அதிசயப் பட்டியலிலும் இடம் பெற்றுவிட்டன.

மாட்டின் நெற்றியில் இருக்கும் மச்சம் எண் 7 போல அமைந்திருக்கிறது. 7 அதிஷ்டமான எண் என்பார்கள். ஆகவே இது லக்கி 7 மாடு. மெக்சிக்கோ நாட்டில் 1936ல் இந்த மாடு புகழோடு வாழ்ந்தது. மச்சம் பார்க்கவே கூட்டம் திரண்டதாம்.

குதிரையின் உடலில் இருப்பது சுவாரசியமான மச்சம். காதல் சின்னமல்லவா! 1939ல் இந்தக் காதல் குதிரை அமெரிக்காவில் வாழ்ந்திருக்கிறது. காதலர்கள் ஜோடியாக வந்து இதில் சவாரி செய்து களிப்புறுவார்களாம். அதனால் குதிரை உரிமையாளருக்கு செமர்த்தியான வருமானம். குதிரையின் மச்சத்தால் உரிமையாளருக்கு அதிஷ்டம். ஆனாலும் இந்த மச்சங்கள் மட்டும் இல்லையென்றால் இத்தனை காலம் கழித்தும் இவற்றை யார் நினைவில் வைத்திருப்பார்கள்? ஆக, மச்சத்தில் விஷயம் இருக்கத்தான் செய்கிறதோ?





படிப்பகம்

www.padippakam.com

## மழையில் நனைந்த உலக அழகி

கொட்டும் மழையில் நடிகைகளை நனையவைத்து பாடல் காட்சி எடுப்பது கிளு கிளுப்புக் காட்சி என்று அழைக்கப்படும்.

பிரசாந்த்-ஐஸ்வர்யா இணைந்து நடிக்கும் 'ஜீன்ஸ்' படத் தொடக்கவிழாவுக்குச் சென்றவர்களுக்கு அந்தக் காட்சியை இயற்கையாகவே தரிசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

பிரமாண்டமான படம் என்பதால் திறந்தவெளியில் விழாவை வைத்தார்கள். திடீரென்று மழை கொட்டத் தொடங்கிவிட்டது. கமல், ரஜினி உட்பட விழாவுக்கு வந்த அனைவரும் இயற்கை மழையில் நனைந்தனர்.

நடிகைகள் பாடுதான் திண்டாட்டம். கொட்டிய மழையில் கட்டிய சேலை உடலோடு ஒட்டிக்கொள்ள, அக் காட்சியைக் கண்டவர்கள் ஜொள் மழை பொழிந்தார்கள்.

முன்னாள் அழகி ஐஸ்வர்யா உடலோடு ஒட்டிய ரீசேட் போட்டு வந்திருந்தார். மழையில் நனைந்து ரீசேட் ஒட்டிக்கொள்ள, அந்த கண் கொள்ளாக் காட்சியை படமெடுக்க கமராவை உருவினார்கள் நிருபர்கள். "பிளீஸ் வேண்டாமே!" என்று உலக அழகி உருக்கமான குரலில் சொன்னதால் மனமிரங்கி விட்டுவிட்டார்களாம்.

## ரசனையான ரசிகா

முரசின் முகப்பில் சிகப்புச் சட்டையுடன் ஒயிலாகப் போஸ் கொடுப்பவர் ரசிகா. கங்கை அமரனின் 'பூஞ்சோலை' படத்தில் அறிமுகமானவர். 'பூஞ்சோலை' படம் வெளியாக முன்னரே 'சின்னராமசாமி பெரியராமசாமி', 'பகவத்சிங்' ஆகிய படங்களிலும் நடித்துவருகிறார்.

ரசிகா தமிழ்நாட்டுப் பெண். ஜெயலலிதா சசிகலா கூட்டாக நடத்திய ஜெ.ஜெ டி.வியில் நடந்த அழகிப் போட்டியில் கலந்துகொண்டு 'மிஸ் ஜெ.ஜெ' பட்டம் வென்றவர். நீச்சலில் இவர் ஒரு மீன். கார் ஓட்டவும் தெரியும். இந்தத் தகுதிகளுக்கும் மேலாக இயக்குநர்களின் இதயத்துடிப்பை அறிந்து நடந்துகொள்ளவும் தயங்காதவர்.

'பூஞ்சோலை' படப்பிடிப்பு இல்லாத நேரங்களில் இசைஞானியின் இளவலுடன் தாராளமாகப் பழகினராம். இளவலுடன் மட்டும் நின்றுவிடாமல் இளவலின் மகனான நாயகனுடனும் அனுசரித்துப் போனாராம்.

ரசிகாவின் ரசிக்கத்தக்க ஒத்துழைப்பைப் பற்றி அறிந்த இயக்குநர் ஆர்.வி.உதயகுமார் தனது படத்திலும் நடிக்கவைத்ததுடன், தனது ஜோடியாகவே பாத்திரம் வழங்கியுள்ளார். ரசிகா பிழைத்துக் கொள்வார்.

## தேவயானியின் மறுப்பு

குடும்பப் பாங்கான நடிகை என்று பெயரெடுத்துவிட்டார் தேவயானி. அதனால் முன்னர் போல கவர்ச்சி காட்டுவதில்லை என்ற முடிவில் இருக்கிறார்.

ஆனால் இயக்குநர்கள் விடுவதாக இல்லை. ஜெயராம் ஜோடியாக தேவயாணி, மந்த்ரா இருவரும் நடித்துவரும் படம் 'பெரிய இடத்து மாப்பிள்ளை'

அந்தப் படத்துக்காக பழனிபாரதி எழுதியுள்ள பாடல், 'ஆந்திரா கோங்குரா போல இவ பார்க்கிறா, அம்மாடி கண்ணாலே ஆளைக் கொஞ்சம் சாய்க்கிறா.' என்று ஆரம்பிக்கிறது.

இப்பாடலுக்காக செயற்கை மழையில் நனைந்தபடி ஜெயராமை கட்டியணைத்தபடி தேவயாணி ஆடவேண்டும் என்றார் இயக்குநர்.

முதலில் மறுத்துப்பார்த்தாராம் தேவயாணி. கதாநாயகன் ஜெயராமும், இயக்குநரும் பல முறை எடுத்துச் சொல்லி அவரை இணங்கவைத்தார்களாம். முதலில் மறுத்தாலும் காட்சியில் நடிக்கும் போது ஜெயராமை ஒரு வழிபண்ணிவிட்டாராம் தேவயாணி.

'அனுசரித்துப் போகாவிட்டால் சினிமாவில் நிலைக்க முடியாது' என்று புரிந்துகொண்டார் தேவயாணி.

## அங்கே பாடுகிறார் நிரோஷ...

நவனீத் என்னும் புதுமுகம் கதாநாயகன். திரைப்ப... கல்லூரி மாணவியான வர்ணாவும் புதுமுகமாக அறிமு... இருவரும் ஜோடிசேர வளருகிறது. 'மார்கழிப் பூ... என்னும் படம்.

இலங்கையில் சின்னத் திரைகளில் பாடிக்கொண்டிரு... நிரோஷா இப்படத்தில் பாடியிருக்கிறார். உன்னிமேனனு... இணைந்து நிரோஷா பாடியுள்ள பாடலின் சில வரி... இவை;

"இன்னிசை மழைதனில் நனைகிறேன்
குடை தேடாதே
இயற்கையின் அழகினில் இணைகிறேன்
தடை போடாதே..." என்று தொடர்கிறது பாட...

பாடலை எழுதியவர் மு. மேத்தா இசை அமைத்திருப்பவர் புதிய இசையமைப்பாளர்.

## "அழைத்தால் வருவேன்"

கவுதமி இப்போது புதிய பயிற்சியில் இறங்கியிருக்கிறாராம். புதிய கணவரிடம் வெட்கப்படுவது எப்படி, சிணுங்குவது எப்படி என்று பயிற்சி செய்து கொண்டிருக்கிறார். இதையெல்லாம் நடிகைகளுக்கு சொல்லியா தர வேண்டும்? என்று நினைக்காதீர்கள். சினிமாத்தனம் இல்லாமல் சிணுங்கியும், வெட்கப்பட்டும் கணவரைக் கைக்குள் போடத்தான் பயிற்சி.

'இருவர்' படத்தில் நடிக்கும் அனைவரும் கவுதமிக்கு அட்வான்ஸ் வாழ்த்துக்கள் தெரிவித்துவிட்டார்கள். திருமணத்தின் பின்னரும் மணிரத்னம், கமல் போன்ற அபூர்வமானவர்கள் கூப்பிட்டால் ஓடிவந்துவிடுவேன் நடிக்க" என்று சொல்லியிருக்கிறார் கவுதமி.

## கன்னடத்தில்

வள்ளியில் அறிமுகமாகிய பிரியாராம... மலையாளத்தில் திறமை காட்டிக்கொண்டிருந்தார். இப்போது கன்னட படவுலகுக்கு தாவியிருக்கிறார். 'மங்கள சூத்ரா' என்னும் கன்னடப் படத்தில் நடிக்கப் போகிறார்.

## தமிழில் சீமா

'பண்டிட் குயின்' படத்தில் பூலான்தேவியாக நடித்த் சீமாபிஸ்வாஸ் தமிழுக்கு வர... போகிறார். கராத்தே வீரர் ஹுசைனியுடன் ஒரு படத்தில் நடிக்க... போகிறார்.

பண்டிட் குயினில் நடித்தது போல தமிழ்ப் படத்திலு... புரட்சி செய்வாரோ தெரியவில்லை.

## 'காதலிசம்' கொடி பறந்தது

சோசலிசம், கம்யூனிசம் போல உலகெங்கும் உள்ள இனிமையான கொள்கை என்ன தெரியுமா? 'காதலிசம்' என்கிறார் இயக்குநர் கே. சுபாஷ். சொல்வதோடு நிறுத்தவில்லை, தனது அடுத்த படத்திற்கு 'காதலிசம்' என்று பெயர் சூட்டிவிட்டார்.

தற்போது அஜித்குமார், மகேஸ்வரி நடிக்கும் 'நேசம்' படத்தை சுபாஸ் இயக்கிவருகிறார். அந்தப் படம் முடிவதற்கிடையில் 'காதலிசம்' படத்திற்கு பூஜை போட்டுவிட்டார். படத் தொடக்க விழாவில் 'காதலிசம்' என்று பெயர் பொறித்த கொடியை சத்யராஜ் ஏற்றிவைத்தார்.

'காதலிசம்' படத்தின் கதாநாயகன் அஜித்குமார். அவரது ஜோடி மகேஸ்வரி. கவுண்டமணி, செந்தில் ஆகியோரும் நடிக்கின்றனர்.

## தெரிந்துகொள்வதில் ஆர்வம்

'காலமெல்லாம் காத்திருப்பேன்' படத்தில் கதாநாயகியாக நடிப்பவர் டிம்பிள். பெயரில் வெளிநாட்டு வாசனை அடிக்கிறதல்லவா. டிம்பிளின் சொந்த இடம் லண்டன் (படத்தைப் பாருங்கள் முகத்திலும் வெளிநாட்டு சாயல் அடிக்கிறதா?)

மும்பாயிலிருந்து கதாநாயகிகளை இறக்குமதி செய்து சலித்துவிட்டதால் இவரை இலண்டனிலிருந்து தூக்கி வந்துவிட்டார்கள். தமிழ் பேசக் கற்றுக்கொள்கிறார். "எதனையும் உடனே கற்றுக் கொள்வதில் டிம்பிளுக்கு வேகம் அதிகம்" என்று பாராட்டுகிறார் டிம்பிளுடன் ஜோடி சேரும் விஜய். அவரே பாராட்டும்போது விஷயம் இல்லாமல் போகுமா?

அருண்குமாருடன் 'காத்திருந்த காதல்' படத்திலும் ஜோடியாக நடித்துவருகிறார் டிம்பிள்.



குஷ்பு
படம்: கோபாலா கோபாலா



கார்த்திக்-ரோஷினி
படம்: சிஷ்யா

படத்தொடக்க விழாக்களில் ஏதாவது புதுமை செய்து பரபரப்பை ஏற்படுத்துவது பார்த்திபனின் விளம்பரத் தந்திரம். 'காங்கேயம்காளை' படத்தின் அழைப்பிதழில் 'ஒரு சீமைப் பசு' தேவை என்று விளம்பரம் செய்தார். கதாநாயகியை சீமைப்பசு என்று சொல்வதா என கதாநாயகிகள் வட்டாரம் முகம் சுளித்தது. அது பழைய செய்தி.

## திருமணம் நடத்திய பார்த்திபன்

பார்த்திபன் நடிக்கும் மற்றொரு படம் 'கல்யாண சுந்தரம்'. இப்படத்தின் தொடக்கவிழா சமீபத்தில் நடந்தது. இதிலும் பார்த்திபன் ஒரு புதுமை செய்து விட்டார். ஐந்து ஏழை ஜோடிகளுக்கு தனது சொந்தச் செலவில் படுஜோராக திருமணம் செய்து வைத்தார் பார்த்திபன்.

படத்திலும் கல்யாணத்தரகராகத்தான் நடிக்கிறார் பார்த்திபன். அவரது ஜோடியாக முன்னணி நடிகை ஒருவர் நடிக்க இருக்கிறார். மணிவண்ணன், செந்தில், வடிவேலு, மூர்த்தி, ஜோதிமீனா, ராணி ஆகியோரும் நடிக்கின்றனர். இயக்கம், ஏ.என்.பரத். இசை, சிற்பி.

## படம் ...

கமல் நடித்த... வீரா, பாட்ஷா, போன்ற படங்க... இப்போது புது... கப்போகிறார்.

பெங்களூரை... னாக அறிமுகம... தேடிப் பிடிக்கப்... பெயரும் வித்திய... பெயர் சூட்டியுள்...

விஜயகுமார், ... நடிக்கவுள்ளனர். ஹா ஹா, ஒரே... வைத்துத் தொ...

## தர்ம...

'கல்கி' பட நாயக்... நடித்து கன்னடத்தில்... 'தர்மரட்சகன்' என்... படுகிறது. அர்ஜுனின்... யுள்ளார்.

ஏற்கனவே 'ரட்சக... படம் தயாராகிவரு... சுஷ்மிதாசென் ஜோடி... கின்றனர். அந்தப் பட... யில் 'தர்மரட்சகன்' வ... ஒரே பெயர்க் குழப்ப...

## ரஜினிக்குத் தங்கக்காப்பு

'அருணாச்சலம்' படத்தில் வலதுகையில் தங்கக்காப்பு, காதுகளில் தங்கவளையம் போட்டு ரஜினி நடிக்கிறார். இவ்வாறான காட்சிகளில் 'கவரிங்' நகைகள்தான் வழக்கமாகப் பாவிக்கப்படும்.

சூப்பர் ஸ்டாருக்கு கவரிங் நகை போட முடியுமா? அதனால் ஒரிஜினல் நகையாகவே செய்துவிட்டனர். 21 பவுணில் தங்கக் காப்பு செய்து போட்டிருக்கிறார்கள். காது வளையல்களும் சுத்தத் தங்கம்.

## குஷ்புவின் கவர்ச்சி

'கோபாலா, கோபாலா' படம் திரைக்கு வந்துவிட்டது. பாண்டியராஜனின் ஜோடியாக நடிக்கிறார் குஷ்பு. ஜோடிப் பொருத்தம் நேர்மாறாக இருந்தாலும் அதுவும் சிரிக்க வைக்கிறது.

குஷ்பு நீண்ட நாட்களின் பின் தன் எடுப்பான அழகு காட்டி நடித்துள்ள படமும் இதுதான். தனது காதலரான சி.சுந்தரின் அனுமதியுடன்தான் கவர்ச்சியான உடைகளில் நடிக்கச் சம்மதித்தார் குஷ்பு. ஆனாலும் படத்தை பார்த்த சி.சுந்தர் "கொஞ்சம் அதிகமாகத்தான் கவர்ச்சி காட்ட வைத்துவிட்டார்கள். இனிமேல் கவனமாக இருக்க வேண்டும்" என்று வருத்தப்பட்டாராம்.



அப்பால்-அஞ்சு அரவிந்த்
படம்: ஆசைத்தம்பி

முகப்பில்

ஜெயராம்–தேவயாணி
படம்:–பெரிய இடத்து மாப்பிள்ளை

ரசிகா
படம்:– பூஞ்சோலை



அப்பால்-அஞ்ச...
படம்: ஆசை...



படிப்பகம்

www.padippakam.com

## ரசிகையர் மன்றம்

நம்மவர் படத்தில் கமலுடன் வில்லனாகத் தோன்றியவர் கரண். 'காதல் கோட்டை' படத்தில் காதலை விளையாட்டாகக் கருதும் பாத்திரம். 'கோகுலத்தில் சீதை' படத்தில் தன் பெற்றோரின் எதிர்ப்புக்குப் பயந்து காதலியைக் கைகழுவும் பாத்திரம் என்று பலதரப்பட்ட பாத்திரங்களில் நடித்திருக்கிறார் கரண்.

பிரபல நடிகர்களுக்கு 'ரசிகர் மன்றம்' இருப்பது தெரிந்த விடயம். ஆனால் கரணுக்கு ரசிகையர் மன்றம் ஆரம்பிக்க விரும்புகிறார்களாம் ரசிகைகள். அன்போடு மறுத்துவிட்டதாகச் சொல்கிறார் கரண்.

## ஜெயராமுக்கு கல்தா

'அருணாச்சலம்' படத்தில் ஜெயராம் நடிப்பதாக இருந்தது ரஜினி ஒரு படம் எடுப்பதாகவும் அதில் ஜெயராம் நடிப்பதாகவும் காட்சி வைக்க தீர்மானித்திருந்தார்கள்.

ரஜினி என்ன நினைத்தாரோ தெரியாது. அந்தக் காட்சி வேண்டாம் என்றுவிட்டாராம். அதனால் ஜெயராமும் படத்தில் இல்லை.

சூப்பர் ஸ்டாருடன் நடிக்கப்போகிறேன் என்று குசியாகச் சொல்லிக்கொண்டிருந்த ஜெயராம் இப்போது வருத்தத்தோடு இருக்கிறார்.

'அருணாச்சலம்' படத்தில் தனது பாத்திரம் பற்றிய இரகசியத்தை ஜெயராம் சொன்னதால் தான் அவரைத் தூக்கிவிட்டார்கள் என்பது மற்றொரு தகவல். எது உண்மையோ!

## சினி விசிட்

## மினி சினி

* பிரபுவின் 100வது படமான 'ராஜகுமாரனு'க்குப் பின்னர் சிவாஜி புரொடக்ஷன்ஸ் நிறுவனம் தயாரிக்கும் படத்திற்கு 'வாய்ச் சவடால்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இதில் ஹீரோ யார் தெரியுமா? பிரபுதான்.

* 'ஏழைஜாதி', 'கட்டளை' போன்ற படங்களை இயக்கியவரும், 'அரசியல்' 'அரவிந்தன்' போன்ற படங்களுக்கு வசனம் எழுதி வருபவருமான லியாகத் அலிகான் பிரகாஷ்ராஜ் கதாநாயகனாக நடிக்க 'ரசிகசிகாமணி' என்ற படத்தை இயக்கவுள்ளார்.

* ஸ்ரீதேவி, மீனா, மந்த்ரா வரிசையில் குழந்தை நட்சத்திரமாக இருந்து கதாநாயகியாக நடிக்கவுள்ளார் சோனா. 'அஞ்சலி' உட்பட பல படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்திருக்கும் சோனா, 'மல்லிகைக்கு மருதாணி' படம் மூலம் கதாநாயகியாகிறார்.

* சல்மான்கான்-மாதுரி டிக்ஷித் இணைந்து நடித்து இந்தியில் பெருவெற்றி 'ஹம் ஆப்கே ஹைன் கோன்' படம் தமிழில் 'அன்பாலயம்' என்ற பெயரில் மொழி மாற்றப்பட்டு வருகிறது.

* கே.டி.குஞ்சுமோனின் 'சக்தி' படத்திற்கு இசையமைத்துள்ள ஆர்.ஆனந்த், தற்போது பாரதிராஜாவின் 'சிறகுகள் முறிவதில்லை' படத்திற்கு இசையமைத்து வருகிறார். இவர் முதன் முறையாக இந்திப்படம் ஒன்றுக்கு இசையமைக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

* தெலுங்கில் சக்கரவர்த்தி-ரம்பா நடித்த 'பம்பாய் பிரியடு' தமிழில் 'பம்பாய் காதலி' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வருகிறது. இப்படத்தின் படப்பிடிப்புக்களில் பெரும்பகுதி செசல்ஸ் தீவில் படமாக்கப்பட்டிருக்கின்றன.

* ஏ.ஆர்.ரகுமான் இந்தியில் முதன்முறையாக இசையமைத்த படம் 'ரங்கீலா! இப்போது 'ரங்கீலா' படத்தில் இடம்பெற்ற இந்திப் பாடல்களை தமிழ்படுத்தியுள்ளார்கள். இந்தப் பாடல்களை வைரமுத்து எழுதியுள்ளார்.

* தமிழில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமான அஞ்சு தமிழில் இரண்டு படங்களிலும், கன்னடத்தில் மூன்று படங்களிலும் நடித்து வருகிறார். கன்னடத்தில் இவர் ரோஷ்னா என்ற பெயரில் நடித்து வருகிறார்.


* பவித்ரன் தற்போது இயக்கி வரும் 'மூக்குத்தி காசி' படத்தில் கதாநாயகனாக நடிப்பவர் பாஸ்கர்ராஜ். இவர் 'ஜெய்ஹிந்த்', 'டெல்லி டைரி', 'நேதாஜி' ஆகிய படங்களில் விமல்ராஜ் என்ற பெயரில் வில்லனாக நடித்தவர்.

* தமிழில் முன்னணி நடிகரான பின்னர் அர்ஜுன் 'மாவூரி மாராஜு' என்ற தெலுங்குப் படத்தில் மட்டும் நடித்தார். நீண்ட இடைவெளிக்குப் பிறகு அர்ஜுன் தெலுங்குப் படமொன்றில் நடிக்கவுள்ளார்.

## ரோஷினிக்கு சான்ஸ்

'புலி பொறந்த மண்ணு' படத்தில் நெப்போலியன் ஜோடியாக நடிக்கிறார் நக்மாவின் சகோதரி ரோஷினி. முதலில் நெப்போலியன் ஜோடியாக அபூர்வா என்றொரு புதுமுகம் நடிப்பதாக இருந்தது. சில காட்சிகளை எடுத்துவிட்டுப் போட்டுப் பார்த்தார்களாம். நெப்போலியனுக்கு தங்கை மாதிரி தெரிந்தாராம் அபூர்வா.

அதனால் வேறு யாரை நடிக்க வைக்கலாம் என்று யோசித்தபோது, நக்மாவிடம் இருந்து நெப்போலியனுக்கு போனில் வந்தது அன்பான சிபாரிசு. தட்டுவாரா நெப்போலியன். ரோஷினியை தன்னுடன் ஜோடியாக்குமாறு கூறிவிட்டார்.



நெப்போலியன்-குஷ்பு
படம்: எட்டுப்பட்டி ராசா



கரண்-டிம்பிள்
படம்: காலமெல்லாம் காத்திருப்பேன்

## இயக்குநர் கமல்

'மருத நாயகம்' படம் தனது இலட்சியப் படம் என்று கமல் கூறி வருகிறார். அதனால் கமல் முதன் முதலாக இயக்கும் படம் அதுவாக இருக்கலாம் என்ற ஊகங்கள் சொல்லப்பட்டன.

ஆனால் கமல் உடனடியாக 'மருதநாயகம்' படத்தைத் தொடத் தயங்குகிறார். கமல் முதலில் இயக்கப்போகும் படத்தின் பெயர் 'அமரகாவியம்' என்று தகவல் வெளியாகியுள்ளது. பெப்ரவரி மாதம் பட வேலைகள் ஆரம்பமாகும் என்று தகவல்.

தனது பிறந்தநாள் விழாவிலும் கமல் தனது முடிவை அறிவித்துள்ளார். "தமிழை முழுக்கப் பயன்படுத்தி ஒரு படம் எடுக்க வேண்டும் என்பது என் ஆசை. நல்ல தமிழ் பேசவேண்டும் என்ற ஆசை எனக்கே வந்துவிட்டது. தமிழைப் பயன்படுத்தி ஒரு படம் எடுக்கப் போகிறேன். அதை நானே இயக்கப் போகிறேன். படத்தின் பெயரை விரைவில் அறிவிப்பேன்." என்று கூறியிருக்கிறார் கமல்.

## ...புதிது–பெயர் புதிது

'சத்யா', ரஜினியின் அண்ணாமலை, ... சத்யராஜ்-பிரபு நடித்த சிவசக்தி ...ளை இயக்கியவர் சுரேஸ் கிருஷ்ணா. ...கங்களை வைத்து ஒரு படம் இயக்...

...ச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கதாநாயக...கிறார். கதாநாயகியை மும்பாயில் ...பாகிறார்கள். படத்திற்கு சூட்டியுள்ள ...ரசமாக இருக்கிறது. 'ஆஹா' என்று ...ளனர். இசை: தேவா.

...ரகுவரன், பானுப்பிரியா ஆகியோரும் ... இப்படம் மட்டும் ஹிட்டானால், அடுத்து ...றா. ஹி ஹி என்றெல்லாம் பெயர் ...லக்கப்போகிறார்கள்.

## "இது என் படமல்ல!"

நான் நடித்த படத்தைப் பார்க்க வேண்டாம் என்று எந்த ஹீரோவாவது சொல்லுவார்களா? ஆனால் ஹுசைனி சொல்கிறார். 'மை இந்தியா' படத்தில் ஹீரோவாக நடித்திருப்பவர் கராத்தேவீரர் ஹுசைனி.

முதலில் சொன்னது போல் கதை இல்லை. ஒரு சண்டை கூட கிடையாது. ஒரு கராத்தே சண்டைகூட நான் போடாவிட்டால் எப்படி? அது மட்டுமல்ல என் குரல் கூட இல்லாமல் வேறு ஒருவரை வைத்து குரல் கொடுத்து டப்பிங்கை முடித்துவிட்டார்கள். அதனால் இப் படத்தை நம்பிப் பார்க்க வேண்டாம். ரசிகர்களின் எதிர்பார்ப்பை எனது அடுத்த படமான 'சிற்பி'யில் நிறைவேற்றி வைக்கிறேன்" என்கிறார் ஹுசைனி. வித்தியாசமான ஹீரோ.

## ரட்சகன்

...சுருதியுடன் இணைந்து அர்ஜுன் ...வெளியான படம் தமிழுக்கு வருகிறது. ...ற பெயரில் தமிழில் மொழிமாற்றப் ... சகோதரர் கிஷோர் இயக்கி...

...ன்' என்ற பெயரில் ஒரு ...கிறது. நாகார்ஜுன்-...யாக நடித்து வரு...ம் வருவதற்கிடை...ரப்போகிறது. ...ம்தான்!



... அரவிந்த்
...சைத்தம்பி

## "நான் ஒரு காதல் ஹீரோ"
### இளம் நாயகன் அப்பாஸ் பேட்டி

'காதல் தேசம்' படத்தின் பின்னர் 25 படங்களில் நடிக்க அப்பாசுக்கு வாய்ப்பு வந்ததாம். அதில் 10 படங்களை மட்டும் ஒப்புக்கொண்டு நடித்துவருகிறார். இந்திப்படம் ஒன்றிலும் நடிக்கிறார்.

நடிகைகளில் நக்மா இடதுகைப் பழக்கம் உள்ளவர். சாப்பிடுவது, எழுதுவது எல்லாம் இடது கையால்தான். நடிகர்களில் அப்பாசும் இடதுகைப் பழக்கம் உள்ளவர். ரசிகைகளின் அமோக ஆதரவுடன் காதல் ஹீரோவாக கொடிகட்டிப் பறக்கத் தொடங்கியுள்ளார் அப்பாஸ். அவரது பேட்டியிலிருந்து சில பகுதிகள்:

**கே. அரவிந்தசாமி, அஜித்குமார் ஆகியோருடன் உங்களை எப்படி ஒப்பிடுகிறீர்கள்?**

ப: யாருடனும் என்னை ஒப்பிடாதீர்கள். என்னைப் பொறுத்தவரை என் மிதமான தோற்றம் எனக்கு உதவுகிறது. மென்மையான சிரிப்பும், கூர்மையான மூக்கும் எனக்கு பிளஸ்பொயின்ட். சிலர் எனது நடனத்தை ரசிக்கிறார்கள். ஆனால் நான் நடன வகுப்புக்குச் சென்றதில்லை. டிஸ்கோவுக்கு சென்றதுண்டு.

**கே: உங்களது ஜோடிகளை நீங்களே தெரிவு செய்கிறீர்களா?**

ப: காதல் தேசம் படத்தில் நடித்தபோது தபு என்னைவிட மூத்தவர் என்ற பேச்சு எழுந்தது. அதனால் தற்போது எனது படங்களில் இளம் நடிகைகளை ஜோடியாகப் போடுமாறு கூறுகிறேன்.

**கே: உங்களுக்கு எந்த மாதிரியான ரசிகர் கடிதங்கள் வரும்?**

ப: அவை வேடிக்கையான கடிதங்கள். நீங்கள் திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்று சிலர் எழுதுகிறார்கள். உடல் எடையைக் குறையுங்கள், மூன்றாம்தர நடிகைகளுடன் நடிக்காதீர்கள் என்று வேறு சிலர் எழுதுகிறார்கள். நான் உங்களைத் திருமணம் செய்ய விரும்புகிறேன் என்றும் கடிதங்கள் வருகின்றன. புகை பிடிக்காதீர்கள் என்றும் அட்வைஸ் செய்கிறார்கள்.

**கே: உங்களுக்கு எந்தமாதிரியான இமேஜ் இருக்கிறது?**

ப: நான் ஒரு காதல் ஹீரோ! காதல் எல்லோராலும் விரும்பப்படும் விஷயம். காதல் கதைகளில் நான் அதிகமாக நடிப்பதால் ரசிகைகள் என்னை மிகவும் விரும்புகிறார்கள் என்று நினைக்கிறேன். அந்த இமேஜை கெடுத்துக் கொள்ளாமல் கவனமாக இருப்பேன்.

**கே: யாரையாவது காதலிக்கிறீர்களா?**

ப: சஸ்பென்ஸ்.

**கே: இளம் நடிகைகளில் உங்களைக் கவர்ந்தவர் யார்?**

ப: அஞ்சு அரவிந்த். ஏனெனில் இப்போது அவருடன்தான் 'ஆசைத்தம்பி' படம் பண்ணிக்கொண்டிருக்கிறேன். அவரது பெயரை சொல்லாவிட்டால் முகத்தைத் திருப்பி வைத்துக்கொள்வார். (சிரிக்கிறார்)

**கே: உங்களைவிட வயது கூடிய நடிகைகளுடன் நடிக்கும்போது எப்படி உணர்கிறீர்கள்?**

ப: என்னோடு நடிப்பதால் அவர்களுக்கும் வயது குறைந்து விடுகிறது என்று. அதுபோல என்னைவிட வயதில் குறைந்த நடிகைகளுடன் ஆடிப்பாடும்போது எனக்கும் வயது இறங்கிவிடுகிறது.

## சுகாசினியின் 'நந்தினி'

இயக்குநர் மணிரத்னத்தை திருமணம் செய்த பின்னர் நடிப்பதைக் குறைத்துக் கொண்டவர் சுகாசினி. இரட்டை ரோஜா போன்ற படங்களில் கௌரவ வேடத்தில் நடித்தார். 'இந்திரா' படத்தின் மூலம் இயக்குநராகவும் மாறினார்.

இப்போது மீண்டும் கதாநாயகியாக நடிக்கப் போகிறார். மனோபாலா இயக்கத்தில் 'நந்தினி' என்னும் படத்தில்தான் கதாநாயகியாக நடிக்கப் போகிறார் சுகாசினி.

பிரகாஷ்ராஜ், எஸ்.பி.பாலசுப்பிரமணியம், மணிவண்ணன், சார்லி ஆகியோரும் நடிக்கவுள்ளனர். இசை; சிற்பி, பாடல்கள்: பழனி பாரதி.

கதாநாயகிக்கு முக்கியத்துவம் உள்ள பாத்திரம் என்பதால் நடிக்கச் சம்மதித்தாராம் சுகாசினி.


படிப்பகம்

www.padippakam.com

# இது சமையலறைச் சமாச்சாரம்



**கரிபிடிக்காமல் இருக்க:**

அடுப்பில் வைத்துச் சமைக்கும் பாத்திரத்தின் அடியில் கொஞ்சம் அரிசிமாவை நீர்விட்டுக் குழைத்துப் பூசி வைப்பது நல்லது. பாத்திரத்தில் ஏறும் கரியைச் சுலபமாகச் சுரண்டி விட இது உதவும்.

**உப்பைக் குறைக்க:**

கை தவறுதலாகச் சாம்பாரில் உப்பை அதிகமாகப் போட்டுவிட்டால், உப்பைக் குறைக்க, உருளைக்கிழங்கை வேகவைத்து, துண்டுகளாக்கிப் போட்டால், அதிகப்படியான உப்பை கிழங்கு உறிஞ்சி எடுத்துவிடும்.

**கறுக்காமல் இருக்க:**

வாழைக்காயையும், கத்தரிக்காயையும் நறுக்கித் தட்டில் வைத்தால் அவை கறுத்துப் போய்விடும். நறுக்கியவுடன் நீருள்ள பாத்திரத்தில் போட்டு வைத்து, தேவையான போது எடுத்துக்கொள்ளவேண்டும்.

**உணவில் கவர்ச்சி:**

சமைத்த பதார்த்தங்கள் மணத்துடனும், பார்வைக்குப் பளிச்சென்றும் இருக்க வேண்டும். அப்போதுதான் விருப்புடன் சாப்பிடத் தோன்றும்.

**வாழைப்பூ கறுக்காமல் இருக்க:**

வாழைப்பூ, வாழைத்தண்டு நறுக்கியதும் மோர் கலந்த நீரில் போட்டு விட வேண்டும். இல்லாவிட்டால் கறுத்துவிடும்.

**கை எரிச்சல் போக:**

அம்மியில் மிளகாய் அரைக்கும்போது கையில் எரிச்சல் ஏற்படும். மிளகாய் அரைத்து முடிந்ததும் கையில் நல்லெண்ணெய் தடவிச் சோப்புப் போட்டு குளிர்ந்த நீரில் கையைக் கழுவினால் எரிச்சல் போய்விடும்.

**கை அரிப்புப் போக:**

கருணைக்கிழங்கை நறுக்கும்போது கை அரிக்கும். புளிநீரைக் கையில் தடவிக் கழுவினால் அரிப்புப் போய்விடும்.

**கசந்து போகாமல் இருக்க:**

எலுமிச்சம்பழச் சாற்றை சூட்டுடன் இருக்கும் பதார்த்தத்துடன் சேர்க்கக் கூடாது. அதனால் சாறு கசந்து போய் விடும். சூடு ஆறிய பின்னரே சாற்றைச் சேர்க்க வேண்டும்.

**கசப்பு நீங்க:**

கசப்புள்ள காய்களின் கசப்பைப் போக்க அவற்றை நறுக்கி அரிசிகளைந்த நீரில் சற்று நேரம் போட்டு வைத்திருந்தால் கசப்பு நீங்கிவிடும்.

**சத்த சமிக்ஞை:**

எண்ணெயில் ஏதையாவது போட்டுப் பொரிக்கும்போது சளசளவென்று சத்தம் கேட்கும். சத்தமில்லாமல் அவை பொரிபட்டுக் கொண்டிருந்தால், நன்றாகப் பொரிந்து விட்டது என்று அர்த்தம்.

**அளவுகோல்:**

குழம்பு, ரசம் போன்றவை போதிய அளவு கொதித்துவிட்டன என்பதற்கு அறிகுறி மிளகாய்த்தூள் நெடி அடங்கி மேலே நுரைத்துக்கொண்டு வருவதுதான்.

**காறல் அகல:**

எண்ணெயில் பட்சணங்களைப் பொரிக்கும்போது முதலில் எண்ணெயில் சிறு உருண்டை புளியைப் போட்டு பொரித்து அது கருகியபின் எடுத்து எறிந்துவிட வேண்டும். பின்னரே பொரிக்க வேண்டியதைப் போடவேண்டும். இப்படிச் செய்வதால் எண்ணெய்க்காறல் அகலும்.

**வாடை வராமல் இருக்க:**

அடுப்பு எப்போதும் ஒரே நிதானமாக எரிய வேண்டும். புகைந்து புழுங்கிக் கொண்டிருந்தால் பதார்த்தங்களில் புகை வாடை அடிக்கும். அதிகமாக எரிந்தால் பதார்த்தங்கள் தீய்ந்து விடும்.

**மசிவது சிரமம்:**

மிளகாய் வற்றல் சேர்த்து எதையும் அம்மியிலோ, கல்லுரலிலோ அரைக்கும் போது முதலில் மிளகாய் வற்றலை மசித்துக் கொண்டே மற்றப் பொருட்களை வைத்து அரைக்க வேண்டும். ஏனெனில் மிளகாய் மசிவது சற்றுச் சிரமம்.

**நெய்மணம்:**

தாளிப்பதற்கு நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் உபயோகிப்பதுதான் பெரும்பாலோருடைய வழக்கம். ஆனால் ரசத்திற்கு மட்டும் நெய்விட்டுத் தாளித்தால் மணமாக இருக்கும்.

# கண் இமை வீக்கமா?



அதிக உஷ்ணத்தாலும், அதிகக் குளிரினாலும் கண் இமை வீக்கம் உண்டாகி அவதியைத் தரும். கண் சற்று சிவந்து வீங்கி இருக்கும். கண் கூசும். கண்ணில் எரிச்சல் ஏற்படும். கண்ணிலிருந்து நீர் வடிந்து கொண்டே இருக்கும்.

இலையான், நுளம்பு போன்றவை கண்ணில் வந்து உட்கார்ந்து கிருமிகளைத் தொற்றச் செய்வதாலும் கண்ணிமை வீங்கும். இதை ஆங்கிலத்தில் ஒப்தல்மியா சிம்பிளெக்ஸ் (OPTHALMIA SIMPLEX) என்று கூறுவார்கள்.

தூசி, மண் முதலியவை கண்களில் விழுவதனாலும் கண்ணிமை வீக்கம் உண்டாகலாம்.

**சிகிச்சை:**

1. பசும்பாலைக் காய்ச்சி, சிறிது சூட்டுடன் வெள்ளைத் துணியில் நனைத்து இதமாக ஒத்தடம் போடக் குணமாகும்.

2. பன்னீரில் இரண்டு துளி கண்ணில் விடவும் குணமாகும்.

3. கற்கண்டைத் தூளாக்கி வெள்ளைத் துணியில் முடிந்து, புளிப்பு மாதுளம் பழச்சாற்றில் ஊறவைத்து இரண்டு துளி கண்ணில் விட குணமாகும்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** AW

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

கையொப்பம்:..............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 04-01-1997**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# உங்கள் வருங்காலக் கணவரை தேர்ந்தெடுப்பது எப்படி?

## மிக முக்கியமான பத்துக் கேள்விகள்!

திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது என்பது சரியல்ல. ஆணும், பெண்ணும் தங்கள் துணையைத் தெரிவு செய்வதில் தெளிவாகவும், பக்குவமாகவும் இருந்தால் போதும், வாழ்க்கை வசப்படும். கண்டதும் காதல் கொண்டுவிட்டு அவதிப்படுவதும் கூடாது. குணம், தரம் அறியாமல் மணம் செய்துவிட்டு கவலைப்படவும் கூடாது.



பெண்கள் சுலபமாக உணர்ச்சி வசப்பட்டு விடுவார்கள். அதனால் வசதியாக ஏமாற்றப்பட்டு விடுகிறார்கள் என்று சொல்லப்படுவதுண்டு.

பெண்களாலும் சிந்தித்து, ஆராய்ந்து தம் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்க முடியும். காலம் மாறிவிட்டது. 'கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்' என்று வதைபட்டு வாழ்வது நரகம் என்பதை பெண் புரிந்து கொண்டிருக்கிறாள். உணர்ச்சிக்கு இடம் தராமல் உணர்வு பூர்வமாகச் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள் பெண்கள்.

பெண்களின் சிந்தனையும், புத்தி சாலித்தனமும் வளர்ந்துவிட்ட இன்றைய சூழலில், நீங்கள் எங்கே நிற்கிறீர்கள்? உங்கள் வருங்காலக் கணவரைத் தெரிவு செய்வதில் உங்களுக்கும் தீர்மானங்கள், விருப்பங்கள் இருக்கலாமல்லவா?

அவை சரியானவைதானா என்பதை ஒப்பிட்டுப் பார்க்க பத்துக்கேள்விகளும், விடைகளும் தரப்படுகின்றன.

### கேள்விகள்

1. அவர் உங்களையே விரும்புகிறார் என்பதனால் தான் நீங்கள் அவரை விரும்புகிறீர்கள்? (ஆம்/இல்லை)
2. உங்களுடைய உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியவர் என்பதனால் தான் நீங்கள் அவரைக் கல்யாணம் செய்ய விரும்புகிறீர்களா? (ஆம்/இல்லை)
3. உங்களிடம் எப்போதுமே இல்லாத-நீங்கள் மெச்சும் குணாதிசயங்கள் அவரிடம் இருப்பதனால்தான் நீங்கள் அவரை மணக்க நாட்டம் கொண்டீர்களா? (ஆம்/இல்லை)
4. அவரிடமுள்ள வசீகரம், மெல்லிய உடல் வாகு, திரண்ட சொத்து, உயர்ந்த அந்தஸ்து மற்றும் செல்வாக்கு ஆகியவற்றுக்காகத் தான் அவரை மணக்க எண்ணுகிறீர்களா? (ஆம்/இல்லை)
5. உங்களை தனது வாழ்க்கைத் துணையாக ஏற்க அவர் சம்மதித்துவிட்டமையினால் தான் அவரை நீங்கள் ஏற்க முன் வந்தீர்களா? (ஆம்/இல்லை)
6. அவர் வெளிநாட்டில் தொழில் புரிகிறார் என்ற காரணத்துக்காகவே அவரை மணக்கச் சம்மதித்தீர்களா? (ஆம்/இல்லை)
7. உங்கள் தெரிவு நிச்சயமானதுதானா? (ஆம்/இல்லை)
8. உங்கள் குழந்தைகளுக்கு அவர்தான் தந்தையாக வேண்டும் என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டீர்களா? (ஆம்/இல்லை)
9. அவரை முழுமையாக நம்பலாம் என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டீர்களா? (ஆம்/இல்லை)
10. அவருடைய மருத்துவப் பரிசோதனை அறிக்கையைப் பார்த்துத் திருப்தியடைந்து விட்டீர்களா? (ஆம்/இல்லை)

**எவ்வாறான விடையை தெரிவு செய்திருந்தால் உங்கள் முடிவு சரியாக இருந்திருக்கும் என்பதைப் பார்ப்போமா?**

முதலாவது வினாவுக்கான சரியான விடை 'இல்லை' என்றிருக்க வேண்டும். கணவன் மனைவியில் மேலதிகமாகத் தங்கியிருப்பானானால் அவன் வழிதவறிப்போக மாட்டான் என்பது உண்மைதான். இருப்பினும் இது நீடித்து நிற்கப்போவதில்லை. அளவுக்கு அதிகமாக மனைவியில் தங்கியிருக்க நேர்ந்தால் நாளடைவில் மனைவிக்கு அதிகம் பளுவாகமாறி அதனால் வெறுப்புத்தான் இறுதியில் மிஞ்சும்.

2 வது வினாவுக்கும் சரியான விடை 'இல்லை' என்பதுதான். உங்களுடைய உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் நாட்டம் கொண்டவரைத் தேர்ந்தெடுத்தலாகாது, அவரால் தொடர்ந்து உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலாத நிலை இருப்பதை நீங்கள் உணர்ந்ததும் அதற்காக அவரைக் குறைகூற ஆரம்பித்துவிடுவீர்கள். திருமணமானதுமே இக்குறைபாட்டைக் கண்டு கொள்ள நேரிடக்கூடும்.

3. உங்களிடமில்லாத-நீங்கள் மெச்சும் குணாதிசயங்கள் மற்றவரிடம் இருப்பதாக நீங்கள் கருதுவது தவறாகும். இது உங்களை நீங்களே தவறாக எடைபோடுவதற்கு ஒப்பாகும். இதனால் ஏனையோரும் உங்கள் ஆற்றல்களைக் குறைவாகவே மதிப்பிட நேரும் என்பதனால் இதற்கும் 'இல்லை' என்பதே பதிலாகும்.

4. ஒருமனிதரிடம் அந்தஸ்து, செல்வாக்கு, அழகான தோற்றம், சிறப்பான தொழில் மற்றும் பெரும் பணம் ஆகியவை சற்றுக் கூடுதலாகவே இருக்கிறது என்பதனால் அவனையே கணவனாகத் தேர்ந்தெடுப்பது நல்லதல்ல, ஆகவே இதற்கும் பதில் 'இல்லை' என்று தான் அமையும், மேற்படி சிறப்புகள் எல்லாம் நிலையானவையல்ல. வயதாக ஆக அழகுத் தோற்றம் மறைந்துவிடும். நோய்கூட பெருமாற்றங்களையும் ஏற்படுத்தலாம். தவறான அணுகுமுறைகளினால் பொருளாதாரமும் சிதைவுறலாம். ஆகவே சற்று நிதானித்து உணர்ந்து முடிவெடுக்க வேண்டும்.

உணர்வுகளுக்கு மட்டும் இடம் தரலாகாது. ஏனெனில் உணர்வுகள் மாற்றம்பெறுவதுண்டு. ஆகவே, உங்கள் எதிர்கால நல்வாழ்வுக்கான தீர்மானத்தை எடுக்கும் போது உணர்வுகளுக்கு இடமளிக்கலாகாது. ஒருவருடைய நன்னடத்தை, நாணயம் மற்றும் நல்ல சிறப்பம்சங்களுக்கே முன்னுரிமை தரப்படவேண்டும்.

5. இவ்வினாவுக்கு நீங்கள் 'இல்லை' என்று பதிலிறுத்திருந்தால் அது சரியான முடிவே! சிலர் 'அவர் என்னை விரும்புகிறார்' என்பதை மட்டுமே கருத்தில் கொண்டு விடுகின்றனர். இம்முடிவினால் இறுதியில் தடுமாற்றமே மிஞ்சும்.

6. இந்நாட்களில், எமது சமூகத்தில், வெளிநாடுகளில் வேலை பார்ப்போருக்கு மவுசு அதிகமிருப்பது உண்மைதான். அவருடன் கைகோர்த்துக்கொண்டு பிற நாடுகளில் சுற்றித் திரிவதை நினைக்கும் போது மனதளவில் சுவைக்கவே செய்யும். அவருடைய வாழ்க்கை முறை வெளிநாட்டில் எவ்வாறு அமைந்திருக்கும் என்பதை யார் அறிவார்? ஆகவே இதற்கும் உங்கள் பதில் 'இல்லை' என்றே இருக்க வேண்டும்.

7. திருமணத்தில் நாட்டமுடையவர்கள் தங்கள் வருங்காலத்துணையைத் தேர்ந்தெடுக்கும் வேளையில் தூர நோக்குடன் செயற்படவேண்டும். தன்னுடைய வாழ்க்கைத்துணை எவ்வாறிருக்க வேண்டும் என்று முழுமையான விபரங்களைப் பெற்ற பின்னர் ஒரு முடிவுக்கு வரவேண்டும். தனக்குரியவர் இவர்தான் என்ற முடிவுக்கு வந்ததும் தாங்களே முடிவெடுக்கும் தகைமை பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்பதால் இவ்வினாவுக்கு விடை 'ஆம்' என்பது தான்.

**8. வாழ்க்கை ஒப்பந்தம் என்பது களியாட்டமோ கேளிக்கையோ அல்ல. திருமணத்தின் அடிப்படைத் தத்துவத்தினை உணர்ந்தவர்கள் இவ்வினாவுக்கு 'ஆம்' என்ற பதிலையே தருவார்கள். சரியான தேர்வினை நிச்சயிக்கும்போது, உங்கள் வருங்காலம், உங்கள் குடும்பத்தின் எதிர்காலம் பற்றியெல்லாம் சிந்தித்துப்பார்க்க வேண்டியது அவசியம்.**

"எனது குழந்தைகள் பின்பற்றிக் கடைப்பிடிக்கக்கூடிய ஒழுக்க நெறிகள் இவரிடம் இருக்கின்றனவா? எனது குழந்தைகளுக்குத் தேவைப்படாத- அவர்கள் வெறுத்து ஒதுக்கக் கூடிய-குணங்களும் நடத்தைகளும் இவரிடம் இருக்கின்றனவா? அவருடைய நடத்தைகளைக்கண்டு எனது வாரிசுகள் வெட்கித்தலை குனிய வேண்டிய நிலை ஏற்படுமா?" என்பதையெல்லாம், திருமணத்துக்கு முன்னர் தீர்க்கமாக ஆலோசித்த பின்னர் முடிவு எடுக்க வேண்டும்.

9. எத்தடையுமில்லாமல் 'ஆம்' என்ற பதில் வரவேண்டும். வெற்றிகரமான திருமணத்துக்கு பரஸ்பர அன்பு, ஒற்றுமை மற்றும் ஒருவர்மீது மற்றவர் வைக்கும் நம்பிக்கை ஆகியன அடித்தளமாகும். ஒருவர் மீது நம்பிக்கைவைக்காத நிலையில் அவருடன் வாழ்க்கையை எவ்வாறு பகிர்ந்து கொள்ள முடியும்? உங்களை அடித்துத் துன்புறுத்துவார் அல்லது உங்களுக்கு மனவேதனையைத் தொடர்ந்து தருவார் என்பன போன்ற சிறு சந்தேகம் ஏற்பட்டாலும் அத்தகைய ஒரு மனிதரை ஒதுக்கிவிடுவதே உத்தமம்.

10. மருத்துவத் துறையில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ள இக்காலத்தில், வாழ்க்கையில் இணையும் நோக்கமுடைய இருபாலாரும் தங்கள் உடலை பூரணமான மருத்துவ பரிசோதனைக்குட்படுத்துவது நன்மை பயக்கும். தங்கள் வருங்கால சந்ததியினர் நல்ல தேகாரோக்கியத்துடன் தோன்றுவதற்கேற்ற உடற்கூற்று அம்சங்கள் தங்களிடம் உள்ளனவா என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள மருத்துவ பரிசோதனை உதவும். **'எயிட்ஸ்' நோய்க்குக் காரணமான எச்.ஐ.வி.தொற்று உள்ளதா என்பதனையும் நிர்ணயித்துக் கொள்ளலாம். ஆகவே இவ்வினாவுக்கு 'ஆம்' என்பதுதான் விடை.**

லேடீஸ் ஸ்பெஷல்

# பொட்டும் புத்துணர்ச்சியும்!

தற்போதைய பெண்கள் பெரும்பாலும் ஸ்டிக்கர் பொட்டுக்களையே பயன்படுத்துகிறார்கள். இதில் உள்ள பசையும், பிளாஸ்டிக் போன்ற பகுதியும் ஒவ்வாமை (அலர்ஜி) உள்ளவர்களுக்கு அரிப்பை ஏற்படுத்திப் புண்ணை உண்டாக்குகின்றன.

மேலும் பொட்டு வைப்பது என்பது, மூளை நரம்பைத் தூண்டி விட்டு மூளைக்குப் புத்துணர்ச்சி தருவதற்காகத்தான். மூளை நரம்பின் முடிச்சுக்களை இரு புருவங்களுக்கும் நடுவில் அழுத்தி விடலாம். அழுத்திப் பொட்டு வைப்பதன்மூலம் அந்த நரம்பு முடிச்சை மசாஜ் செய்து அதன் உணர்வைத் தூண்டி மூளையின் செயற்பாட்டை அதிகரிக்கலாம். இம்முறையைக் கொண்டு சில நோய்களைக் குணப்படுத்தலாம்.

வர்மக்கலையில் தொடுவர்ம முறையில் சிகிச்சை செய்து (நெற்றியில் அழுத்திவிட்டு) ஒருசிலர் நோய்களைக் குணப்படுத்துகின்றனர்.

எனவே குங்குமப் பொட்டைக் கையில் எடுத்து நெற்றியில் வைத்து நன்கு அழுத்தி விடுங்கள், அல்லது ஸ்டிக்கர் பொட்டு வைப்பதாக இருந்தால் காலை, மாலை இருவேளையும், வெறும் நெற்றியையாவது சிறிது நேரம் அழுத்திவிடுங்கள்.


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? முந்தல் வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான். | சாந்தி நடராஜா<br>கருத்தான்வில், கூஹத மாவத்தை, முந்தல். |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக-வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது **சுகந்தினி**

## பட்டர் கேக்

| | |
|---|---|
| மாவு | - 500 கிராம் |
| பட்டர் | - 500 கிராம் |
| சீனி (தூளாக்கியது) | - 500 கிராம் |
| முட்டை | - 10 |
| பேக்கிங் பவுடர் | - 2 மேசைக்கரண்டி |
| வெனிலா எசென்ஸ் | - 2 மேசைக்கரண்டி. |

**செய்முறை:**

மாவையும், பேக்கிங் பவுடரையும் சலித்துக் கொண்டு, பட்டரில் சீனித்தூளையும் தூவி நன்றாக கிறீம் போல அடித்துக் கொண்டு வெனிலா எசென்சைச் சேர்க்க வேண்டும். முட்டையை நுரைக்க அடித்து, பட்டர்க் கலவையுடன் சேர்த்து அடிக்க வேண்டும்.

பின் மாவுக் கலவையைத் தூவி நன்றாக அடித்துக் கலக்க வேண்டும்.

பின்னர் ட்ரேயில் மாஜரின் தடவி, கலவையை ஊற்றி அவனில் வைக்கவும். கேக் வெந்து, ஆறியபின் பட்டர் ஐஸிங் அலங்காரம் செய்யலாம்.



படிப்பகம்

www.padippakam.com

## இனிவரும் காலம் இனிதாக....

உன்னையே
நினைத்திருந்ததால்தான்
எனக்கு நானே
பெருமதியற்றுப் போனேன்!
–0–
மாறுபட்டதும்
மாசுபட்டதும்
மனதை ஏமாற்றியதும்
நானல்ல; நீ தான்!
–0–
உண்மையாய் நேசித்து,
உறுதியாய் இருந்து,
உயரிய நிலையில்
உள்ளத்தை வைத்து
உனக்காகக் காத்திருந்தது
நான் தான்!
–0–
சலனங்கள்,
துரோகங்கள்,
அற்பத்தனங்கள்
அனைத்தையும்
ஒருங்கே கொண்ட நீ.....
என்னை விடவும்
எப்படி உயர்வாக முடியும்....?
–0–
உலகிலிருந்து
உரிமை மறுக்கப்பட்டதாய்
உருகிச் செத்தது
ஒரு முட்டாளின்
பிரிவுக்காக வெனில்...
நான் தானே குற்றவாளி?
–0–
தவறுகளையெல்லாம்
தனதாக்கிக் கொண்டவனாக
நீ இருக்க,
தண்டனைகளையெல்லாம்
தத்தெடுத்துத்
துன்பப்பட்டது நானன்றோ?
–0–
எங்கோ,
எப்பொழுதோ, யாரிடமோ
எனக்கான துரோகங்கள்
எல்லாவற்றுக்குமான
தண்டனைகளைப்
பெற்றுக் கொள்வாய்–நீ!
–0–
இப்போது,
நீ பிரிந்து போய்விட்ட
எனது உலகம்
ஆயிரம் மடங்கு
அர்த்தமுள்ளதானது;
நீ மறைந்து போன
என் உலகு
ஓராயிரம்
ஒளி விளக்குகளால்
அலங்கரிக்கப்பட்டுள்ளது!
–0–
உனை மறப்பதென
நான் கொண்ட முடிவு–
உயிரை வதைத்தாலும்
எனது
நாளைகளெல்லாம்
நிச்சயம் அதனால்
நிம்மதிகாணப்போகின்றன!
–0–

செல்வி பஹீமா ஜஹான்–
தெமடகொல்ல, மெல்சிரிபுர.

## இயல்பு

புலி
உறுமும்,
நாய் கடிக்கும்.
○•○
காக்கை
பிணந் தின்னும்;
குரங்கு
பேன் தின்னும்.
○•○
நரி விரும்புவது
ஆம்புத்துண்டு;
சுறா ஏக்கோ
மனித வெறியுண்டு!
○•○
ஞாம்புக்கு
கண்ணில்லை;
பாம்புக்கு
காதில்லை!
○•○
ஏதோ
இன்னொரு
பிராணிக்கு
இதயமேயில்லை!
○•○
இப்படி...
எல்லா
அங்கிகளுக்கும்
ஒவ்வோர்
இயல்புகளுண்டாம்
ஆனாலும்...?
○•○
மேற்சொன்ன
எல்லா
இயல்புகளுமே
கொண்ட
இன்னொரு
பிராணியிருக்கிறதாம்...
○•○
அதன் பெயர்
'மனிதன்'....!!!

எஸ்.பிரபா

## '96

தொண்ணூற்றாறின்
தொல்லைகளில்
தொலைந்து போனது–பல
கிருஷாந்தி....உயிர்கள்...!
0–0
தோண்டியெடுக்கப்
படாமலே மறைந்துபோகும் பல
சூரிய கந்தைகளும்
யாழ் கைதடி மயானங்களும்....!
0–0
கதவு திறக்கப்பட்டு
உள் நுழைய விரும்பாது,
ஒவ்வொரு வருடமும்
வாசல் வரை வந்து திரும்பும்....
சமாதானம்..!
0–0
நிகழ்வுகளுக்கும்
காலங்களுக்கும்
சம்பவங்கள் திகதியிட்டு
நடந்தவைகளால் நிரம்பி...
தினக்குறிப்புக்கள்...!
0–0
ஆங்காங்கே
சிறு சிறு அசம்பாவிதங்கள்....!
இடையில் சிக்கி
மத்தாளமாக்கப்படும்
அப்பாவிகள்...!
0–0
ஆயுதங்களுக்கும்
யுத்தச் செலவுகளுக்கும்
குறை நிரப்ப
அரங்கேற்றப்படும்
பிரேரணைகள்...!
0–0
அவசர காலச்சட்ட
நீடிப்புக்களுக்காக
நாட் கணக்கில்
நடை பெற்றிடும்
விவாதங்கள்....!
0–0
சம்பவங்களை குறித்திட
தினக் குறிப்புக்களும்
வருடத்தை தொடங்கிவைக்க
கலண்டர்களும் எடுத்திடும்
புது அவதாரம்....!
0–0
பழையன கழிதலும்
புதியன புகுதலும்
புத்தாண்டுக்கு
புதிது புதிதாக பிறக்கும்
விளக்கங்கள்.....!

இந்துநிலா- பொத்துவில்

என்.சஹாப்தீன்- ஓட்டமாவடி.

## கண்ணீர்ப் புள்ளி

என் தேசத்திற்குள்
நீ–
திரி!
அங்கு
சன்னலுமில்லை;
கதவுமில்லை;
ஆனால்
காற்று வரும்
உன் முகவரி சுமந்து!
••
எங்கிருந்தாவது
அழு–!
நனைந்திடுவேன்
உனது
கண்ணீரில்...!
••
ஒரு பானை
மௌனம் குடித்து
பிறந்தவளே!
என் நெஞ்சில்
தலை போட்டு
அழு!
••
கண்ணீரில் சுவையும்
அழுவதில்
சுகமும் இருக்கலாம்..!
••
ஒரு சுமைக்கு
ஆறுதல் கூற
தவித்தும்;
ஒரு சுகத்திற்கு
நன்றி கூற
துடித்தும் பார்!
வாழ்க்கையில்
ஈரம் ஊறும்....!
••
அங்கு
சன்னலுமில்லை;
கதவுமில்லை;
ஆனால்
காற்று வரும்
உன் முகவரி சுமந்து..!
••
சிரி
அழுகிற வரை!
அழு
சிரிக்கிறவரை!
••
மௌனி
நான்–
காத்திருக்கும் வரை
பேசு
நான்
சாகும்வரை!
••

பைசல்
(பௌர்ணமிநிலா)

# தேன் கிண்ணம்

## ஆயிரம் பௌர்ணமிகள்

என்
பழைய நினைவுகளில்
பொட்டுப் பூச்சி
வலை பின்னுகிறது.
நீ
நீயாகத்தான்
இருக்கின்றாய்!
**
உடுத்துக்
கிழியும் வரை....
உன்னில் துணியாக
இருந்தால்,
எவ்வளவு சந்தோசம் தெரியுமா?
**
காதலி!
உன் நிழல்களை சேமித்து
இரவாக்கிக் கொண்டேன்,
நினைவுகளை மீட்டிக்
கொள்ள....!
**
முடிவு தா!
நான்,
நானாக இருக்க...!
**
என்
கண்ணீர்த்துளிகளை
வடிக்க,
ஒரு கண்ணையாவது
தருவாயா?
**
உன்
பார்தாச் சிரிப்புக்கள்
என்
இரவில்
ஆயிரம் பௌர்ணமிகள்!
**
நீ
நீயாகத்தான்
இருக்கிறாய்!
**
நான் தான்
நானாக
இல்லை...!

## விடிவு தோன்றுமா?

சண்டைகள் சாய்ந்து சச்சர வோய்ந்து
சமத்துவம் என்றுவரும்?–வெடிக்
குண்டுகள் ஓசை, கொலை வெறிப் பேச்சு
கேளா நாள்வருமா?
***
சிரிப்பினை மறந்து இருந்திடும் சனங்கள்
சிரித்திட வழிவருமா?–உடல்
தெருநடு வீதி தனில்விழும் அந்த
ஒருநிலை மாறிடுமா?
***
மக்களை மக்கள் மதித்திடும் நிலைதான்
மண்ணில் வந்திடுமா?–மொழிச்
சிக்கல்கள் ஓய்ந்து செம்மைகள் காணச்
செகத்தில் நாள் வருமா?
***
அடக்கு முறையும் அசுரத் தனமும்
அடியோ(டு) ஓடிடுமா?–இனி
நடக்கும் காலம் தனிலே தானும்
நன்மை கூடிடுமா?
***
அடிமை விலங்கு அனைத்தும் தகர்ந்து
அகிம்சை நிலை பெறுமா?–புவி
விடிவு என்று புலரும் பொழுதை
விரைவில் ஏற்றிடுமா?
***
பண்டைச் சரிதம் பலதும் மீண்டும்
பசுமை பெற்றிடுமா?–இரு
கண்கள் மீண்டும் கலவரம் ஓய்ந்த
காட்சி கண்டிடுமா?
***

அ.கௌரிதாசன்–
ஆலங்கேணி கிழக்கு.

## அந்த நாள் ஞாபகம்





இந்தச் சுட்டிப் பையன் யார் என்று தெரிகிறதா? நடிகர் திலகத்தின் புத்திரரான இளைய திலகம் பிரபுவின் அசத்தலான தோற்றங்கள்தான் இது. டிசம்பர் 31 பிரபுவின் பிறந்தநாள்.





இந்தியன் 'தாத்தா', 'அவ்வை சண்முகி' என்று தூள் கிளப்பி வரும் கமலுக்கு இப்போது வயது 42. கமலின் அந்தநாள் தோற்றம் தான் இது. கமலுடன் குட்டி பத்மினி.

## இந்த வாரம் உங்கள் பலன்

(29.12.96 தொடக்கம் 04.01.1997 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

தனு - சூரியன், புதன், வெள்ளி.
மகரம் - வியாழன்.
மீனம் - கேது, சனி.
சிம்மம் - செவ்வாய்.
கன்னி - இராகு.

★ சந்திரன்- கற்கடகம், சிங்கம், கன்னி ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, தொழில் சிறப்பு. | காலை 7 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| புதன்- பெரியோர் உதவி, கௌரவம். | பகல் 11 மணி |
| வியாழன்- கடன் தொல்லை, மனக் குறைநீங்கும். | பி.ப. 3 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, செலவு அதிகம். | பி.ப. 1 மணி |
| சனி- தொழில் உயர்ச்சி, பொருள் பேறு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மகிழ்ச்சி நிலை, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- உறவினர் உதவி, பலவித பேறு. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- அந்நியர் சகவாசம், மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| புதன்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | மு.ப. 9 மணி |
| வியாழன்- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பி.ப. 4 மணி |
| வெள்ளி- பணக் கஷ்டம், பெரியோர் உதவி. | பகல் 11 மணி |
| சனி- மனக்குறை நீங்கும், பொருள் வரவு. | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-2

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பணச் செலவு, உறவினர் பகை. | பி.ப. 1 மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| செவ்வாய்- மன மகிழ்ச்சி, தொழில் சிறப்பு. | பகல் 12 மணி |
| புதன்- பலவித பேறு, கஷ்டநிலை நீங்கும். | மு.ப. 10 மணி |
| வியாழன்- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- இனசன நன்மை, கௌரவம். | பகல் 11 மணி |
| சனி- பெரியோர் நன்மை, செலவு மிகுதி. | மு.ப. 9 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- வீண் குறை கேட்டல், அந்நியர் உதவி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பி.ப. 3 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- இனசன நன்மை, பயனுள்ள செயல். | பி.ப. 3 மணி |
| சனி- அந்நியர் பகை, மனக் கலக்கம். | மு.ப. 9 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் இழப்பு, மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- வீண் முயற்சி, அந்நியர் பகை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. 2 மணி |
| புதன்- முயற்சி பலிதம், தொழில் கஷ்டம். | பகல் 12 மணி |
| வியாழன்- வீண் கலக்கம், காரியத்தடை. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், பண முடங்கல். | பி.ப. 2 மணி |
| சனி- பொருள் கஷ்டம், மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-3

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும். | பி.ப. 3 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பண வரவு. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- அந்நியர் சகவாசம், கடன் தொல்லை. | பி.ப. 2 மணி |
| புதன்- வீண் முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- பெரியோர் பகை, மனக் கலக்கம். | மு.ப. 9 மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| சனி- உயர்ச்சி தடை, கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| திங்கள்- கௌரவம், அந்நியர் உதவி. | பி.ப. 3 மணி |
| செவ்வாய்- கடன் தொல்லை, மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| புதன் - வீண் குறை கேட்டல், பெரியோர் பகை. | பி.ப. 4 மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, புதிய முயற்சி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- பொருள் வரவு, மன மகிழ்ச்சி. | பி.ப. 4 மணி |
| சனி- தொழில் கஷ்டம், இனசன மகிழ்ச்சி. | மு.ப. 9 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-7

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், அந்நியர் உதவி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, பண வரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| புதன்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- காரிய சித்தி, பொருள் வரவு. | பி.ப. 3 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், தொழில் மந்தம். | பி.ப. 2 மணி |
| சனி- இனசன நன்மை, முயற்சி பலிதம். | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் பகை, மனக் கலக்கம். | பி.ப. 3 மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், பண இழப்பு. | பகல் 11 மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| புதன்- புதிய முயற்சி, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| வியாழன்- மனக் கலக்கம், உறவினர் இழப்பு. | பி.ப. 3 மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, பண வரவு. | பி.ப. 4 மணி |
| சனி- செலவு மிகுதி, கடன் படல். | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் சகவாசம், கௌரவம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பகல் 11 மணி |
| செவ்வாய்- இனசன மகிழ்ச்சி, ஆடம்பரச் செலவு. | பி.ப. 2 மணி |
| புதன்- துயர் நீங்கும், பண வரவு. | பகல் 12 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | மு.ப. 10 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பயனுள்ள செயல். | பி.ப. 1 மணி |
| சனி- உயர்ந்த நிலை, வெளியிட வாழ்க்கை. | பி.ப. 4 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | மு.ப. 10 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. 3 மணி |
| புதன்- உறவினர் பகை, மனக் கலக்கம். | மு.ப. 9 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், பயனுள்ள செயல். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், கடன் தொல்லை. | மு.ப. 10 மணி |
| சனி- இனசன நன்மை, மனக்குறை நீங்கும். | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பி.ப. 4 மணி |
| திங்கள்- முயற்சி மேன்மை, இனசன நன்மை. | பகல் 11 மணி |
| செவ்வாய்- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. 3 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, கௌரவம். | பகல் 12 மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், தொழில் உயர்ச்சி. | மு.ப. 10 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| சனி- பயனுள்ள செயல், பலவித பேறு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5



படிப்பகம்





## சொக்கத் தங்கம் ஆகிடுவோம்!

பள்ளி செல்வோம் வாருங்கள்!
பாடம் படிப்போம் வாருங்கள்!
துள்ளித் துள்ளி வாருங்கள்!
தோழா தோழி வாருங்கள்!

நேர ஒழுங்கை நிலையாக
நெஞ்சில் கொண்டே ஒழுகிடுவோம்!
நேரமெல்லாம் தொலைக்காட்சியில்
நீண்ட கவனம் தவிர்த்திடுவோம்!

பாடம் கூர்ந்து கவனிப்போம்!
பாட்டும் பாடி மகிழ்ந்திடுவோம்!
ஓடம் போலே மனதினிலே
ஒட்டையின்றிப் பயணிப்போம்!

மாதம் ஒன்றே படங்காண
மனதில் உறுதி கொண்டிடுவோம்!
சூதும் வாதும் தள்ளிடுவோம்!
சொக்கத் தங்கம் ஆகிடுவோம்!

இளந்தமிழ்த் தேவி.

உடன்பிறந் தவர்களைப் போலே- இவ்
வுலகினில் மனிதரெல் லோரும்
திடங்கொண் டவர் மெலிந் தோரை-இங்கு
தின்று பிழைத்திட லாமோ?
-சுப்பிரமணிய பாரதியார்.

### பாப்பா முரசு சிறுகதை



# 1 வழிப்போக்கனும் 2 எத்தர்களும்

ஓர் ஊரில் இரண்டு எத்தர்கள் இருந்தார்கள். அவர்கள் இருவரும் எவ்வித வேலையும் செய்யாமல் சோம்பேறிகளாகக் காலத்தைக் கழித்து வந்தனர்.

ஒருநாள் ஒரு வழிப்போக்கன் அந்த ஊருக்கு வந்தான். அவன் நல்ல ஆடைகளை அணிந்திருந்தான். அதனைப் பார்த்த அந்த இரண்டு எத்தர்களும் அவனிடமிருந்து அந்த ஆடைகளை அபகரிக்கத் திட்டமிட்டார்கள்.

அவர்கள் இருவரும் அந்த வழிப்போக்கனை அணுகி ஒரு பந்தயத்திற்கு அழைத்தனர். அவனும் அதற்கு உடன்பட்டான்.

ஒவ்வொருவரும் ஒரு கதை சொல்ல வேண்டும். கதையை நம்பாமல் மறுப்பவர் கதை சொல்லியவருக்கு அடிமையாக வேண்டும். இதுதான் பந்தயம்.

அந்த ஊர்த்தலைவரின் முன்னிலையில் பந்தயம் ஆரம்பித்தது. முதலில் எத்தர்களில் ஒருவன் கதை சொல்ல ஆரம்பித்தான்.

"என் அம்மா, வீட்டின் எதிரே இருந்த மாமரத்தில் இருந்து மாம்பழங்களைப் பறித்துத் தருமாறு அப்பாவைக் கேட்டாள். அவர் மரம் உயரம் என்று கூறி மறுத்துவிட்டார். உடனே அம்மாவின் வயிற்றுள் இருந்த நான் மரத்தில் ஏறி மாம்பழங்களை அம்மாவுக்குப் பறித்துக் கொடுத்தேன்."

இவ்வாறு சொன்ன எத்தன், வழிப்போக்கன் நம்பாமல் மறுப்பான் என்று எதிர்பார்த்தான். ஆனால் வழிப்போக்கன் நம்புவதாகத் தலையை ஆட்டினான்.

உடனே இரண்டாவது எத்தன் கதையைச் சொல்லத் தொடங்கினான்.

"எனக்கு ஒரு வயதாக இருக்கும்போது ஒரு முயலைத் துரத்திச் சென்றேன். பிறகு பார்த்தேன் முயல் புலியாக மாறி என்னை விழுங்கப் பார்த்தது. உடனே நான் எனது இரு கைகளாலும் புலியின் வாயைக் கிழித்துக் கொன்று விட்டேன்."

இந்தக் கதையையும் நம்புவதாகச் சொன்னான் வழிப்போக்கன். இப்போது வழிப்போக்கன் கதை சொல்லும் முறை. வழிப்போக்கன் தனது கதையைத் தொடங்கினான்.

"பல வருடங்களுக்கு முன் எனக்கு ஒரு தோட்டம் இருந்தது. அந்தத் தோட்டத்தில் ஒரு வித்தியாசமான மரம் வளர்ந்திருந்தது. மரத்தில் இலைகள் ஒன்றும் இருக்கவில்லை. இரண்டு கிளைகள் மட்டும் இருந்தன. அந்தக் கிளைகளில் இரண்டு பழங்கள் பழுத்திருந்தன. அந்தப் பழங்களைப் பறித்து அவற்றை நான் வெட்டும் போது அதிலிருந்து இரண்டு மனிதர்கள் குதித்தார்கள். நான் அவர்களை எனது அடிமைகளாக்கி வேலை வாங்கினேன். அந்த இரண்டு பேரும் சோம்பேறிகளாக இருந்தார்கள். சில நாட்களில் அவர்கள் ஓடி விட்டார்கள். அவர்களைத் தேடித்தான் இந்த ஊருக்கு வந்தேன். இப்போது அந்த ஓடிப்போன அடிமைகளைக் கண்டுபிடித்துவிட்டேன். அவர்கள் நீங்கள் இருவரும் தான்," என்று சொல்லி அந்த இரண்டு எத்தர்களையும் நோக்கிக் கூறினான் வழிப்போக்கன்.

அந்த எத்தர்கள் இருவரும் திருதிருவென்று முழித்தார்கள். அவர்களால் ஒன்றும் பேசமுடியவில்லை.

அவர்கள் அந்தக்கதையை ஒப்புக்கொண்டாலும் அடிமையாக வேண்டும். ஒப்புக்கொள்ளாவிட்டாலும் அடிமையாக வேண்டும். அவர்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

ஊர்த் தலைவர் வழிப்போக்கனை நோக்கி,

"அவர்கள், நீ சொன்ன கதையை மறுத்தாலும் சரி, மறுக்காவிட்டாலும் சரி அவர்கள் உன் அடிமைகள்," என்று தீர்ப்பு வழங்கினார்.

## வாரம் ஒரு நாடு

### சூடான்



**தலைநகர்**–கார்டோம்
**பரப்பு**–25,05,813 சதுர கிலோமீட்டர்
**மக்கள் தொகை**–2.81 கோடி
**மொழி**–அரபி, ஆங்கிலம், டிங்கா
**எழுத்தறிவு**–27%
**சமயம்**– இஸ்லாம், கிறிஸ்தவம், பழங்குடி
**நாணயம்**– டினார்
**தனிநபர் வருமானம்**– 450 டொலர்

**அமைவிடம்:**

சூடான் குடியரசு வடகிழக்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ளது.

**வரலாறு:**

அராபியர், நீக்ரோக்கள், நூபியர்கள் (அரபு- நீக்ரோ கலப்பு) ஆகிய இனத்தவர்களைக் கொண்டது இந்நாடு. எகிப்து 1820ல் சூடானைக் கைப்பற்றியது. பிரிட்டனுடன், சூடான் இணைத்திருந்த ஒப்பந்தத்தை 1951ல் எகிப்து இரத்துச் செய்தது. பொதுத் தேர்தல் வழி ஜனநாயகப் பாராளுமன்றம் வேண்டும் என 1956ல் சூடான் கோரிக்கை விடுத்தது. 1958, 1964 மற்றும் 1985ல் இராணுவக் கலவரங்கள் நடைபெற்றன. பின்பு 1986ல் பொதுத்தேர்தல் நடைபெற்றது.

**பொருளாதாரம்:**

துணி, உணவுப் பொருட்கள் என்பன முக்கிய உற்பத்திப் பொருட்கள். பருத்தி முக்கிய ஏற்றுமதிப் பொருள். செம்பு, தங்கம், மங்கனீஸ் போன்ற கனிமங்களும் இங்கு கிடைக்கின்றன.

## அரிஸ்டோட்டில்



கிரேக்க தத்துவஞானிகளில் ஒருவர் அரிஸ்டோட்டில். கிரேக்க நாட்டில் ஸ்ட்டோகிரோ என்னும் ஊரில் கி.மு.384ல் பிறந்தார் இவர்.

இவர் தனது 17வது வயதில் ஏதென்ஸ் நகருக்குச் சென்றார். அங்கு அப்போது பிளேட்டோ என்னும் பெரிய அறிஞர் ஒருவர் வாழ்ந்துவந்தார்.

அரிஸ்டோட்டில் அவருடைய மாணவரானார். இருபது ஆண்டுகள் அவரிடம் தத்துவம், அரசியல், விஞ்ஞானம் ஆகியவற்றைப் பயின்றார். அத்துடன் பல விஞ்ஞான ஆராய்ச்சிகளையும் செய்தார். சிறந்த கட்டுரைகளையும் எழுதினார்.

பின்னர் மாஸிடோனியா நாட்டு மன்னர் ஃபிலிப் என்பவர் தம் மகனுக்கு ஆசிரியராக இருக்கும்படி அரிஸ்டோட்டிலைக் கேட்டுக் கொண்டார். அரிஸ்டோட்டிலும் அதற்குச் சம்மதித்தார். அந்த இளவரசர் தான் உலகப் புகழ்பெற்ற மகா அலெக்ஸாண்டர்.

அரிஸ்டோட்டில் சில ஆண்டுகள் கழித்து ஏதென்ஸ் நகருக்குச் சென்று ஒரு பள்ளிக்கூடத்தைத் தொடங்கினார். அங்கு விஞ்ஞானம், அரசியல், தத்துவம் முதலியவற்றைப் போதித்தார்.

விஞ்ஞானம், தத்துவம் முதலான துறைகளில் பல நூல்களை எழுதியுள்ள அரிஸ்டோட்டில் கி.மு.322ம் ஆண்டு தனது 62வயதில் காலமானார்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 04.01.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 173
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 171

பரிசுக்குரியவர்:
செல்வி வே. நர்மதா,
ஆஸ்பத்திரி வீதி, மட்டக்களப்பு.

பாராட்டுக்குரியவர்கள்:


| | |
|---|---|
| ஷிரோமி பாலசிங்கம், இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு-04 | ஏ.ஓ. அஸ்மியா, பாத்திமா பாலிகா மகா வித்தியாலயம், புத்தளம். |
| செல்வி ஃபாத்திமா ஃபய்ஹா ஃபாரீஸ், கேம்பிரிட்ஜ் ஆங்கிலப் பாடசாலை, மாத்தளை. | குணசீலன் ஜயந்தன், கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலை, கல்முனை. |
| எஸ். வீணாதேவி, சென் மேரிஸ் மத்திய கல்லூரி, பொகவந்தலாவ. | பாத்திமா றமீஸா அலி, அவ்வல் ஸாவியா வீதி, கிராண்ட்பாஸ், கொழும்பு-14. |
| செல்வன் ஐ. இப்திகார், மடவளை பஸார், மடவளை. | சூ. செந்தூரன், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா. |
| ரா. நிரோஷா, ஸ்ரீ சன்முகா இந்து மகளிர் கல்லூரி, திருகோணமலை. | மதிவதனி பரமசிவம், தமிழ் மகாவித்தியாலயம், டிக்கோயா. |

## செங்கழுத்து நாரை!



செங்கழுத்து நாரைகள் மிகவும் பெரியவை. அழகான வர்ணங்களுடன் கூடியவை. நீண்ட குச்சியைப்போன்ற கால்களை உடையவை. இவை மூன்று அடி முதல் ஆறு அடி வரை வளரும். இவற்றிற்கு இளஞ்சிவப்பு, கறுப்பு, கருஞ்சிவப்பு இறகுகள் இருக்கும். இவற்றின் அலகுகள் சற்று கீழ்நோக்கி வளைந்திருக்கும்.

இவை கூட்டம் கூட்டமாக வசிக்கும். ஒன்றாகச் சாப்பிடும். சில கூட்டத்தில் ஆயிரம் பறவைகள் வரை இருக்கும். இவைகள் கூம்பு வடிவக் கூடுகளைக் கட்டும்.



அது அரை அடி உயரம் வரை இருக்கும். மேற்பகுதியில் வெற்றிடம் இருக்கும். இவைகள் ஒரே நேரத்தில் முட்டைகளை இடும். ஆணும், பெண்ணும் மாறி மாறி அடைகாக்கும். 28 நாட்களில் குஞ்சு பொரிக்கும்.

குஞ்சுப் பறவைகள் சாம்பல் நிறத்தில் இருக்கும். அவற்றின் அலகுகள் நேராக இருக்கும். முதல் சில நாட்கள் குஞ்சுப் பறவைகள் கூட்டிலேயே சாப்பிடும். அதன் கால்கள் வலிமையானவுடன் மற்றப் பறவைகளுடன் பறந்து செல்லும்.

இரண்டு மாதத்திற்குப் பின்னர் குஞ்சுப் பறவைகளுக்கு இறகுகள் முளைத்து விடும். அதன் அலகுகள் வளைந்து விடும். மீன்கள், நத்தைகள் மற்றும் கடல்வாழ் உயிரினங்கள்தான் இவற்றின் உணவு.

குட்டிபோட்டுப் பால் கொடுக்கும், மாமிச உண்ணிகள் தான் செங்கழுத்து நாரையின் எதிரிகள். இவற்றின் பலவீனமான கால்களும், மெல்லிய எலும்புகளும் இந்தப் பறவையை மற்றப்பிராணிகளுடன் எதிர்த்துப் போராட முடியாததாக மாற்றிவிட்டன. எதிரியைப் பார்த்தவுடன் செங்கழுத்து நாரைகள் எல்லாம் ஒரே நேரத்தில் பறந்துவிடும்.

செங்கழுத்து நாரைகள், வெப்பமான, வறட்சியான பகுதிகளில் வசிக்கின்றன. உப்பு ஏரிகள், சதுப்பு நிலங்கள், கடற்கரைப் பகுதிகளில் இவை அதிகம் காணப்படுகின்றன.

## மோனோலிஸா ஓவியம்



புன்னகை ஓவியம் என்று கூறப்படும் மோனோலிஸா ஓவியம் கிட்டத்தட்ட 400 ஆண்டுகளுக்கு முன் வரையப்பட்டது.

இந்த ஓவியத்தின் உயரம் 30 அங்குலம். அகலம் 21 அங்குலமாகும்.

உலகப் புகழ்பெற்ற ஓவியரான லியோனார்டோ டாவின்ஸி இந்த ஓவியத்தை வரைந்தார்.

இயேசுகிறிஸ்துவின் இராப்போசன விருந்தை வரைந்த டாவின்ஸி இந்த ஓவியத்தை வரைய நான்கு வருடங்கள் பிடித்தன.

இத்தாலி நாட்டின் ஃபுளோரன்ஸ் நகரில் ஓவியர்களுக்கு வடிவ மாதிரிப் பெண்ணாக் (மொடல்) வாழ்க்கையைத் தொடங்கிய பெண்தான் மோனோலிஸா.

இளமையில் மிகவும் வறுமையில் வாழ்ந்த மோனோலிஸாவை ஃபிரான்ஸிகே-லா-கியோ கொண்டா என்ற வியாபாரி மூன்றாவது தாரமாக மணந்தார். அப்போது மோனோலிஸாவுக்கு வயது 20.

தனது மனைவியின் படத்தை வரைய அக்காலத்தில் பிரபல ஓவியராக இருந்த டாவின்ஸியைக் கேட்டார் ஃபிரான்ஸிகே-லா-கியோ.

டாவின்ஸி இந்த ஓவியத்தை மோனோலிஸாவை 'மொடல்'லாக நிற்க வைத்து 1503ம் ஆண்டு வரையத் தொடங்கினார். 1507ல் இந்த ஓவியத்தை வரைந்து முடித்தார்.

www.padippakam.com

# அனிதா இளம் மனைவி

## இதுவரை

அவர்கள் இளம் காதலர்கள்- ஆனந்த்-மல்லிகா.

இருவரும் சந்தோஷமாக இருக்க தனியான மலைப்பகுதிக்குச் சென்றனர்.

அங்கே புதர் ஒன்றுக்குள் ஒரு பிணம் கிடக்கிறது. ஆனந்த் பொலிசாருக்கு அறிவிக்கிறான். பொலிசார் வருகின்றனர். அது ஓர் ஆண் பிணம். கொல்லப்பட்டவர் ஷர்மா என்று கண்டறிந்து அவரது வீட்டுக்குச்சென்று அவர் மனைவியிடம் விசாரிக்கிறார்கள். மனைவி பெயர் அனிதா. ஷர்மாவின் இரண்டாவது மனைவி. கொலையான ஷர்மாவின் முதல் மனைவியின் மகள் மோனிக்கா. சட்டத்தரணி கணேஷின் உதவியை நாடுகிறாள் மோனிக்கா.


அனிதாதான் தன் அப்பாவை சொத்துக்காக கொலைசெய்திருக்கிறாள் என்று சந்தேகிக்கிறாள் மோனிக்கா.

கணேஷ் அனிதாவிடம் விசாரணை நடத்துகிறான். அனிதாவின் இளமையும், அழகும் கணேஷையும் கலவரப்படுத்துகின்றன. விசாரணையை முடித்துவிட்டுச் சென்ற கணேசுக்கு அவசரமாக போன் செய்கிறாள் அனிதா. உடனே அனிதாவிடம் செல்கின்றான் கணேஷ். தன்னை யாரோ கொல்ல முயற்சித்ததாகக் கூறும் அனிதா அவனைத் தன்னுடன் தங்குமாறு வேண்டுகிறாள். அங்கே இரவு அந்த மர்ம மனிதனின் தாக்குதலுக்கு ஆளாகின்றான்.

மறுநாள் இன்ஸ்பெக்டர் ராஜேஸைச் சந்திக்கும் கணேஷ் மீண்டும் அனிதாவின் வீட்டுக்குச் செல்கிறான். பாஸ்கர் நொண்டியபடி நடப்பதை அவதானிக்கிறான்.

இனி.....

**07**



நாவல் உலகின் நவீன எழுத்து வேந்தன் -சுஜாதா-

மூன்றாம் தரம் தட்டியதும் "யார் அது?" என்று பயம் கலந்த கேள்வி வந்தது.

"கணேஷ்" என்றான்.

சற்று நேரத்தில் கதவு திறந்தது. அனிதா நைட் கவுனில் இருந்தாள்.

"அனிதா, உங்களுக்கு ஒன்றும் ஆபத்து ஏற்படவில்லையே?"

"ஒன்றுமில்லை. நான் எல்லாக் கதவுகளையும் உள்ளே மூடிக்....மைகாட்! நெற்றியில் என்ன ரத்தம்?"

"என்னை ஒருவன் தாக்க முயன்றான். நாங்கள் சண்டையிட்டோம். பெரும்பாலும் அவன் ரத்தம்!"

அனிதா ஒரு விளக்கைப்போட்டு, "அந்தக் கண்ணாடியில் பார்த்துக்கொள்ளுங்கள்," என்றாள்.

நெற்றியில் அவன் எதிர்பார்த்ததை விடப் பெரிதாகக் காயம் பட்டிருந்தது.

அனிதா மருந்து கொண்டு வந்தாள். அவனை உட்காரவைத்து அந்தக் காயத்தைச் சுத்தப்படுத்திக் கட்டினாள்.

"கணேஷ், ஆர் யூ ஆல்ரைட்?"

"அனிதா தாங்ஸ்!" என்று அப்படியே தலையைப் பின்புறம் சாய்த்து அவளைப் பார்த்தான். அவள் மெல்லிய கவுனின் ஊடே அவள் மார்பு தெரிந்தது. அவன் முகத்தை மறைத்தது.

"மன்னிக்கவும். உங்களைக் காப்பாற்றுவதற்குப் பதில் உங்களிடமே சிகிச்சை பெறுகிறேன். ஆனால்..."

"ஆனால்?"

"இந்தச் சிகிச்சைக்காக எவ்வளவு வேண்டுமானாலும் சண்டையிடலாம்."

அனிதா, "ஐம் ஸாரி! சரியான அடி!" என்றாள்.

கணேஷ் மறுபடி கண்ணாடியில் பார்த்துக்கொண்டான். சற்றுப் பெரிதாகவே கட்டிட்டிருந்தாள்.

"தூக்க மாத்திரை வேண்டுமா?"

"வேண்டாம், நான் காவல் காக்க வேண்டியவன். ஞாபகமில்லையா?"

"இன்று காவல் போதும்," என்றாள்.

"இல்லை. நான் இன்று விழித்திருக்க வேண்டும். எனக்குத் தூக்கம் இனி வராது."

"அப்படியானால் இங்கேயே இருங்கள். எனக்குத் துணையாக."

"இருக்கிறேன் அனிதா. உங்களுக்கு- உனக்குத் துணையாக. எப்பொழுதும் துணையாக எப்பொழுதும்."

அவன் நிமிர்ந்து அவளைப் பற்றி திரும்பினான்.

☠ ⚔ ☠

"ம்ஹூம்" என்றார் இன்ஸ்பெக்டர் ராஜேஷ், "கோவிந்த் இன்னுமா அகப்படவில்லை?" என்ற கணேஷின் கேள்விக்கு.

"நீங்கள் யார்?"

"ஆம். அந்த குடும்பத்தின் லாயர்."

"அவர்கள் அந்த கோவிந்த் என்பவனைப் பற்றிக் கொடுத்த வர்ணனை போதாது. நடுத்தர உயரம். கோதுமை நிறம், காக்கிச் சட்டை இதெல்லாம் என்ன வர்ணனை?"

"போட்டோ?"

"போட்டோவுக்காக மிகவும் முயன்றேன். கிடைக்கவில்லை."

"நெற்றியில் என்ன காயம்?"

"இடித்துக் கொண்டு விட்டேன்."

"எங்கே?"

கணேஷ் பதில் சொல்லவில்லை.

"அந்தக் கோவிந்த் எப்படிப்பட்டவன், என்று தெரிந்துகொண்டீர்களா?"

"அந்த விவரமும் கொஞ்சம் தான் கிடைத்தது. மற்ற வேலைக்காரர்கள் போலீசுடன் பேசவே பயப்படுகிறார்கள். தங்களை அந்தக் கொலையுடன் சம்பந்தபடுத்திவிடுவார்களோ என்ற அச்சம். ஆனால் கொலை செய்ததென்னவோ அந்த கோவிந்த்தான். அதில் சந்தேகமில்லை என்று எல்லோரும் நம்புகிறார்கள். அவன் அவருடன் போயிருக்கிறான். அவரிடமிருந்த பணம் காணோம். அவர் கொலையுண்டிருக்கிறார். அவனைக் காணோம். ஆனால்....."

"ஆனால்?"

"அந்தக் கேஸில் சில விஷயங்கள் உறுத்துகின்றன. சிகரெட் பிடிப்பீர்களா?"

"தாங்ஸ்."

10.15லிருந்து 10.16 வரை சிகரெட் பற்றவைக்கும் சம்பிரதாயத்தில் கலைந்தது.

"சொல்லுங்கள்," என்றான் கணேஷ்.

"முதலில் உங்கள் இண்டரெஸ்ட் இதில் என்ன?"

"அந்தக் குடும்பத்தின் லாயர் என்கிற முறையில் போலீசுக்கு முடிந்தவரை உதவுவது."

"உங்களுக்கு ஏதாவது புதிதாகத் தகவல்கள் தெரியுமா? மிஸ்டர் கணேஷ்."

"உங்கள் விசாரணை எவ்வளவு தூரம்சென்றிருக்கிறது என்பதைப் பொறுத்தது!"

ராஜேஷ் சாம்பலைத்தட்டினார்.

"அதிகமில்லை. கோவிந்தனின் வர்ணனை உள்ள ஒருவன் அகப்பட்டான். அது அவனில்லை என்று தெரிந்தது. மேலும் இந்த மாதிரி திடுக்கிடும் கொலை செய்பவன் ஒருவித பாட்டர்னில் செய்வான். சில தினங்கள் தலைமறைவாக் இருப்பான். தன் சொந்த ஊருக்குச் செல்வான்; அல்லது பெரும்பாலும் அதிக ஜனத்தொகை கொண்ட ஒரு நகரத்தில் மறைவான். திருடிய பணத்தைச் செலவழிக்க அவன் தன் மட்டத்துக்கு வரும்போதுதான் அவன் அகப்பட வாய்ப்பு இருக்கிறது. கன்னாபின்னா என்று சம்பந்தமில்லாமல் வாங்கித் தீர்ப்பான். அதிகப் பணம் அகப்பட்டால் அதைச் செலவழிக்கவும் ஒரு திறமை வேண்டுமே?"

கணேஷ், "இந்தக் கேஸில் சில விஷயங்கள் உறுத்துகின்றன என்கிறீர்களே?" என்றான்.

"ஆம், முதலில் ஒரு முழு நாள். ஷர்மாவும் கோவிந்தும் புறப்பட்டுச் சென்றது புதன். பாடி கிடைத்தது வெள்ளி மாலை. டாக்டர்கள் கணக்கிட்டபடி அவர் இறந்தது வெள்ளி காலை அல்லது வியாழன் சாயந்திரம். ஒரு முழுதினம் நடுவில் உதைக்கிறது. இன்னொன்று ஷர்மா உடல் கிடைத்த ரிட்ஜ் ரோடுக்கும் அவர் தன் வீட்டிலிருந்து ஹிஸ்ஸார் போகும் பாதைக்கும் சம்பந்தமும் இல்லை. இரண்டாவது ஷர்மாவின் உடலில் நாங்கள் பார்த்த சாட்டையடி காயங்கள்! சாதாரணத் திருட்டாக இருந்தால், சாட்டையடி எதற்கு?"

"சாட்டை அடியா?"

"ஆம், உடம்பு முழுவதும். ஆனால் நாங்கள் விசாரித்தவரையில் அந்த வேலைக்காரன் கோவிந்த் நல்லவன். அடக்கமானவன். குடும்பத்துடன் இருபது வருஷமாக இருப்பவன்."

"அப்படியானால் அந்தக் கோவிந்தைத் தேடுவதை விட்டு விடுங்கள். இந்தக் கொலையின் விடை, ஷர்மாவின் அந்தரங்க வாழ்க்கையில் இருக்கலாமல்லவா? அதைத் துருவுங்கள்."

"அவர் பிஸினஸ் வாழ்க்கையில் அவருக்கு எதிரிகள் இருப்பதாகத் தென்படவில்லை. அவர் எவரையும் ஏமாற்றவில்லை. கடும் உழைப்பால் சம்பாதிக்கிறார். அவர் குடும்ப வாழ்க்கை இங்கும் பொதுவாக நேராகத்தான் இருக்கிறது. இளவயதிலேயே மனைவியை இழந்திருக்கிறார். பிறகு மறுமணம். அதுவும் அழகான இளம் பெண்ணுடன்- சரி, நீங்கள் வந்தது?"

"ஷர்மாவின் உயிலில் ஒரு சிறிய சிக்கல் இருக்கிறது. எனக்கு ஒரு டெத் சர்டிபிகேட் வேண்டும். அதற்காகத்தான் வந்தேன். சவுக்கடி என்றா சொன்னீர்கள்?"

"ஆம் தழும்புகள்! வீறல்கள்.... ஏன்?"

"ஏன்?"

"யாரோ தண்டனை கொடுத்திருக்கிறார்கள் ஷர்மாவுக்கு."

"ஏன்?"

சற்று யோசித்து விட்டுக் கணேஷ் சொன்னான்: "நன்றி இன்ஸ்பெக்டர்! எனக்கு ஏதாவது யோசனை தெரிந்தால் நிச்சயம் உங்களுக்குச் சொல்கிறேன்."

"எனக்கு அந்தக் கோவிந்தின் புகைப் படம் எப்படியாவது வேண்டும்."

"முயற்சிக்கிறேன், வருகிறேன்."

கணேஷ் அனிதாவுக்குப் போன் செய்த போது பாஸ்கர் டெலிபோனில் வந்தான். அனிதா தூங்குவதாகச் சொன்னான். பாஸ்கர் டெலிபோனை வைக்குமுன், "ஒரு நிமிஷம் மிஸ்டர் பாஸ்கர்," என்றான் கணேஷ்.

"எஸ்."

"நேற்று இரவு நீங்கள் எங்கே போயிருந்தீர்கள்?"

"வீட்டில் இருந்தேன். ஏன்?"

"நான் உங்களை வந்து பார்க்கலாமா? கொஞ்சம் பேச வேண்டும்."

"இன்று நான் சற்று பிஸி. நாளை வைத்துக் கொள்ளலாமே?"

"சரி, நாளை நான் வருகிறேன்," என்று சொல்லிவிட்டு உடனே அந்த வீட்டுக்கே கிளம்பினான் கணேஷ். காரை மிக வேகமாக ஓட்டினான், தூள் பறந்தான். பதினைந்து நிமிஷத்தில் 'வஸந்த் விஹார்' வீட்டை அடைந்தான். சப்தமிடாமல் நடந்தான். உள்ளே நுழைந்தான்.

பாஸ்கர் அவனைப் பார்த்து ஆச்சரியப்பட்டான். "நாளை வருகிறேன் என்றல்லவா சொன்னீர்கள்?"

"இன்றே வந்து விட்டேன். ஏன் நொண்டுகிறீர்கள் பாஸ்கர்? காலில் என்ன?"

"பஸ் ஏறும்போது ஸ்லிப் ஆகிவிட்டது. சுளுக்கு."

"பார்த்து ஏற வேண்டாம்?"

"ஹலோ லவர் பாய்!" மோனிக்கா மினி ஸ்கர்ட் அணிந்திருந்தாள். மெலிதான கட்டம் கட்டமான ஷர்ட் அணிந்திருந்தாள். தலைமயிரைக் கொஞ்சம் கவனித்திருந்தாள்.

அவள் படிகளில் ஒயிலாக இறங்கி வந்தாள். கணேஷ் படிகளை நெருங்கினான். அவள் அவனுக்குச் சற்று உயரமான படியில் நின்று அவன் தோள்களின் மேல் கைவைத்து அவனைப் பிடித்துக்கொண்டு கடைசிப் படிகளைக் குதித்தாள். அவள் மினி ஸ்கர்ட் ஒருதடவை உயர்ந்தது. அவள் தொடைகளில் மின்னலடித்தது.

"கணேஷ், நீ ட்விஸ்ட் ஆடுவாயா?"

"ம்ஹூம்."

"ஜெர்க்? ஷேக்? மின்க்கி?"

"எனக்குத் தெரிந்ததெல்லாம் கைச் சண்டை, ஜுடோ, கராட்டி," என்றான் கணேஷ் பாஸ்கரைப் பார்த்துக் கொண்டே.

"நெற்றியில் என்ன காயம்?"

"நேற்று ஓர் ஆளுடன் சண்டை போட்டுப் பழகினேன்."

"சண்டை?"

"ஆம்!"

"யூ மீன் ஃபிஸ்டி கஃப்ஸ்...ஹாலிவுட் படங்கள் போல."

"எக்ஸாக்ட்லி."

"எதற்கு?"

"சும்மா! வெறும் தேகப் பயிற்சிக்காக."

"நீ வினோதமான ஆசாமி! என் உயில் விஷயம் என்ன ஆச்சு?"

"கவனித்துக் கொண்டிருக்கிறேன். அனிதா எங்கே?"

"குளிக்கிறாள். சற்று நேரம் காத்திருந்தால் உடை உடுத்திக்கொண்டு வந்துவிடுவாள்."

"ஹலோ மிஸ்டர் கணேஷ்!"

மேலே பார்த்தான்.

"வந்து விட்டாள்," என்றாள் மோனிக்கா.

மோனிக்கா, பாஸ்கர், அந்தவீடு, அந்தக் கொலை, அந்த கோவிந்த் எல்லாம் முக்கியமில்லாமல் போய் விட்டது!

அனிதா முதல் தடவையாகச் சற்றுத் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தாள். கணேஷின் பார்வையும் அவள் பார்வையும் சந்தித்துக் கொண்டன. அந்தப் பகிர்ந்த ரகசியத்தில் சந்தோஷம் கொண்டன.

அனிதா அப்பொழுதுதான் குளித்திருந்தாள் என்பது அவளது மலர் போன்ற புதுமையும் மென்மையும் நீர்த் திவலைகளும் தெரிந்த முகத்தில் புலப்பட்டது.

"அனிதா, எப்படி இருக்கிறீர்கள்?" என்றான் கணேஷ்.

"கொஞ்சம் பரவாயில்லை."

"என்ன உனக்கு அனிதா?"

இது மோனிக்கா.

"நேற்று யாரோ ஓர் அன்னியன் என்னைக் கொல்ல முற்பட்டான். லாயர் கணேஷ் வரவில்லை என்றால் பயத்திலேயே இறந்திருப்பேன்!"

"என்ன!" என்றாள் மோனி. அவள் சண்டைக்குத் தயாராகிறாள் என்பது அந்த வார்த்தையை அவள் உச்சரித்த தோரணையிலிருந்து தெரிந்தது. "கணேஷ்! என்னிடம் நீ இதை ஏன் சொல்லவில்லை? என்னிடம் நீ என்ன சொன்னாய்? என்ன சொன்னாய்?"

"உன் நலத்துக்காகத்தான்." கணேஷ் அசட்டுத்தனமாகச் சிரித்தான்.

"யூராட்! யூ பாஸ்டர்ட்! யூ டபிள் கிராஸிங் ஸ்டிங்கிங் ஸ்டுபிட்!" மோனிக்கா அமெரிக்கப் பாணியில் சரளமாகத் திட்டி விட்டு அவன்மேல் ஒரு கண்ணாடி ஜாடியைப் பொறுக்கி எறிந்துவிட்டு விருட்டென்று வெளியே சென்றாள். போகும் போது "நான் உன்னை டிஸ்மிஸ் செய்து விட்டேன். உனக்கும் எனக்கும் சம்பந்தம் ஏதும் கிடையாது. வி ஆர் க்விட்ஸ்!" என்றாள்.

கணேஷ் அனிதாவைப் பார்த்துப் பரிதாபமாகச் சிரித்தான்.

"மேலே வாருங்கள்," என்றாள் அவள்.

அவளுடன் அவன் சென்றான். உட்காரச் சொன்னாள். "மோனிக்கா ஏன் கோபித்துக் கொண்டாள்?"

"நான் வந்தது தனக்காகத்தான் என்று அவள் எண்ணுமாறு நேற்று பொய் சொல்லியிருந்தேன். இன்று நீ குட்டை உடைத்துவிட்டாய்!"

"கணேஷ், எதற்குப் பொய் சொல்ல வேண்டும் நீங்கள்? எதற்காக என்னுடன் இருக்கப் பயப்பட வேண்டும்?"


"அனிதா நான் உன்னை இந்தக் கணமே மணக்க விரும்புகிறேன்," என்றான் கணேஷ் திடீரென்று.

(தொடர்ந்து வரும்)


## பேனா நண் ... அரங்கம்




பெயர்: கே. கிருஷ்ணராஜா.
வயது: 19
முகவரி: அங்கந்தை தோட்டம், கவுடுப்பெலல்லை, மாத்தளை.
பொழுது போக்கு: வானொலி, தொலைக்காட்சி.



பெயர்: ரி. பரிமளா.
வயது: 26
முகவரி: HOUSE NO.1449, BLOCK NO.4, STREET NO.2. AL WAHA, AL. JAHARA, KUWAIT.
பொழுதுபோக்கு: பத்திரிகை.



பெயர்: ரி. புவனேந்திரராஜா.
வயது: 24
முகவரி: P.O.BOX-5113, DOHA, QATAR.
பொழுது போக்கு: பத்திரிகை, நண்பர் தொடர்பு.



பெயர்: ஏ. அன்ஸார்.
வயது: 22
முகவரி: பமுனுகம, முறியகடவல, கஹட்டகஸ்திகிலிய.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: ரி. சகீலா.
வயது: 24
முகவரி: மாஞ்சோலை, கிண்ணியா-03
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: எம். சலீம்.
வயது: 30
முகவரி: P.O.BOX-177, SHAHAB ASSAIB SALALAH-211, OMAN.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், சினிமா.

பெயர்: முகமட் பாயிஸ்.
வயது: 30
முகவரி: 206/5, பண்டார நாயக்கா மாவத்தை, கொழும்பு-12.
பொழுதுபோக்கு: ரீ.வி. நண்பர் தொடர்பு.

பெயர்: எம். சைபுதீன்.
வயது: 18
முகவரி: ஆலங்குடா, ஏத்தாலை, புத்தளம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, சினிமா.

பெயர்: ஆர். சூரி.
: 24
VIA-SOLDINI-14C, 6830 CHIASSO, SWITZERLAND.
க்கு: ரீ.வி.

பெயர்: லோகிதகுமார் ஜெயசுதாகரன்.
வயது: 20
முகவரி: மகாவித்தியாலய வீதி, கோட்டைக்கல்லாறு-01, கல்லாறு.
பொழுது போக்கு: ரீ.வி., பத்திரிகை.

பெயர்: ஜே. இருதயதாசன்.
வயது: 21
முகவரி: 244, மன்னார் வீதி, வேப்பங்குளம், வவுனியா.
பொழுது போக்கு: வானொலி, சினிமா.

பெயர்: எம். ஜெமீல்.
வயது: 20
முகவரி: 88/ஏ, காட்ரோட், நிந்தவூர்-02.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.


படிப்பகம்

www.padippakam.com



# இரகசியக் குறிப்பு 09

## என் அதிகாரி

**இதுவரை** செக்கோஸ்லாவாக்கிய நாட்டின் போராளிகளின் தலைவர் ஜூலியஸ் பூசிக்.

ஜெர்மன் படைகளின் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடியவர்.

ஜெர்மன் இரகசியப் பொலிசாரால் அவர் கைதுசெய்யப்படுகிறார்.

தான் ஜூலியஸ் பூசிக் அல்ல என்கிறார். அவரது மனைவியும் கைதாகிறார். பூசிக் சித்திரவதை செய்யப்படுகிறார்.

அவர் இறந்துவிட்டதாக சிறையில் உள்ள மனைவிக்கு தவறான தகவல் கிடைக்கிறது. பின்னர் அது வதந்தி என்று அறிகிறாள்.

அவளை மட்டும் போலந்துக்கு கடினவேலைகள் செய்யும் தண்டனைக்காக அழைத்துப் போகிறார்கள்.

சிறையில் சித்திரவதைகள் மத்தியில் உறுதியோடு தாக்குப் பிடித்தவர்களைப் பற்றி விபரித்த பூசிக்,

**இனி...** விசாரணை அதிகாரிகள் பற்றியும் விபரிக்கிறார்.

இவன் பாத்திரங்களில் ஒருவனல்ல. எனினும் சுவாரசியமானவன்; மற்றவர்களை விடக் கவனிக்கத்தக்கவன்.

மனிதனை அடித்துச் சாப்பிடும் மிருகத்தைப்போல சந்தடியில்லாமல் நகரக்கூடிய ஆற்றல் இவனுக்கு இருந்தது.

எதையும் பார்த்தகணமே உணரும் அம் மிருகங்களின் கண்களும் அவனுக்கு இருந்தன.

ஜிலினிக் வீட்டில் என்னைக் கைது செய்தபோது, துப்பாக்கியால் என்னைக் குறிபார்த்து "இவன்மேல் எனக்கு என்னவோ அக்கறை ஏற்படுகிறது!" என்று சொன்னான்.

அவன் பிறவியிலேயே புத்திசாலி. மற்றவர்களிடம் இல்லாத ஒரு விசேஷம் என்னவென்றால், அவன் ஆட்களைப் புரிந்துகொண்டான்.

இந்தக் காரணத்தால் அவன் கிரிமினல் பொலிஸ் இலாகாவில் வெற்றி மேல் வெற்றிபெற்று கீர்த்தி அடைந்திருக்கலாம்.

சிறிய கிரிமினல் குற்றவாளிகள், கொலைகாரர்கள், சமூக விரோதிகள் முதலியோர் தங்களுடைய தோலைக் காப்பாற்றிக் கொள்ள மட்டுமே அக்கறைப்படுகிறார்கள். அதனால் விஷயம் முழுவதையும் சொல்லிவிடுவார்கள்.

ஆனால் நம் விடயம் வேறானது. ஒரு உறுதியான கொள்கைப் பிடிப்பையும், தங்களிடம் கைதான நபர் சேர்ந்திருக்கும் இயக்கத்தின் புத்திசாலித்தனத்தையும் பொலிசார் சந்திக்க வேண்டியிருக்கிறது.

தந்திரமும், மிரட்டலும், அடி உதைகளும் கொள்கைப் பிடிப்பை உடைக்க முடியாது.

என் அதிகாரியின் உள்ளத்தில் எந்த ஒரு கொள்கையின் பேரிலும் உறுதியான பற்றுக்கிடையாது. அது வேறு சில அதிகாரிகளிடம் இருக்கலாம். அதுவும் கூட முட்டாள்தனத்துடன் கூடியதாகவே இருக்கிறது.

இப்படிப்பட்ட நிலையிலும் இவர்கள் இதுவரை பொதுவாக வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள். நம்மில் பலரைக் கைது செய்திருக்கிறார்கள்.

இது எப்படி முடிந்தது?

மிகவும் கஷ்டமான இடத்தில், மிகவும் குறுகிய இடத்தில் நீண்டகாலமாக நாம் போராடவேண்டி இருக்கிறது.

ரசியாவில் கம்யூனிஸ்டுக்கள் சொல்வார்கள், தலைமறைவாக வேலைசெய்யும் போராளிகளில் சிறந்த ஒருவன், இரண்டு ஆண்டுகள்வரை அகப்படாமல் தப்பலாம், என்று!

அங்கு பல நகரங்கள் இருக்கின்றன. மொஸ்கோவில் நிலமை கடுமையானால் வேறு ஒரு நகரத்திற்கு ஓடிவிடலாம். இலட்சக்கணக்கான நகர வாசிகள் மத்தியில் மறைந்துவிடலாம்.

இங்கே செக் நாட்டில் அப்படி இல்லை. இங்கே இருப்பதெல்லாம் ஒரு நகரம்தான். பிரேக் நகரம் மட்டும்தான்.

இந்தப் பிரேக்கில் உன்னைப் பாதிப் பேருக்கு மேல் தெரியும். எதிரியின் உளவாளிகளில் பெரும்பாலோர் இங்கேயே குவிந்து கிடக்கிறார்கள்.

இப்படி இருந்தபோதும், இங்கேயே நாங்கள் வருடக்கணக்கில் தாக்குப்பிடித்து சமாளித்திருக்கிறோம். இரகசியப் பொலிசாருக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு ஐந்து வருடங்களுக்குமேல் இங்கேயே வேலை செய்த தோழர்களும் இருக்கிறார்கள்.

இதற்குக் காரணம், நாங்கள் அநேக விஷயங்களைக் கற்றுக்கொண்டதுதான்.! அது மட்டுமல்ல, எதிரி பலசாலியாகவும், கொடுமைக்காரனாகவும் இருந்தபோதிலும், அவன் அழிவு வேலையைத் தவிர வேறு ஒன்றையும் கற்றுக் கொள்ளாததுமாகும்.

புரட்சியை நசுக்கும் இலாகாவில் பிரடரிக், ஜாண்டர், ஜோஸப் பொஹ்ம் ஆகிய மூவரும் முக்கியமான அதிகாரிகள்.

புரட்சிக்காரர்களை, போராளிகளை, கம்யுனிஸ்டுக்களை ஈவிரக்கமின்றி கருவறுப்பவர்கள் என்று பாராட்டப்படுபவர்கள் இவர்கள். இவர்களில் மூன்றாவது நபர்தான் 'என் அதிகாரி'.

இவர்களுக்கு ஹிட்லருடைய தேசிய சோஷலிசத்தைப் பற்றி அக்கறையில்லை. அதை அதிகமாகத் தெரிந்திருக்கவில்லை. ஏனெனில் இவர்கள் போராட்டத்தில் ஒரு அரசியல் தத்துவத்திற்காகக் கலக்கவில்லை. தங்களுடைய சொந்த நன்மைக்காகவே கலந்திருக்கிறார்கள். ஒவ்வொருத்தனும் தத்தம் சொந்த வழியில் நடக்கிறான்.

**ஜாண்டர்**–மண்டை பெருத்த அற்பமான குள்ளன். பொலிஸ் முறைகளைப் பற்றி மற்றவர்களைவிட இவனுக்கு அதிகம் தெரியும். ஆனால் இவன் கவனமெல்லாம் பெரும்பாலும் பணத்தின்மீதுதான்.

பிரேக்கிலிருந்து இவன் ஜெர்மன் தலைநகரான பெர்லினுக்கு மாற்றப்பட்டான். ஆனால் ஏதேதோ செய்து பிரேக்குக்கே திரும்பி வந்துவிட்டான்.

ஜெர்மன் தலைநகரில் உத்தியோகம் பார்க்க இவன் விரும்பவில்லை. அங்கு 'மேல் வருமானத்தை' தியாகம் செய்ய வேண்டியிருந்தது.

பெர்லினில் இருப்பதைவிட கைப்பற்றப்பட்ட அடிமை நாடுகளில் அதிகாரியாக இருப்பவன் சக்தி வாய்ந்தவனாக இருக்கிறான். தன் வங்கிக் கணக்கை விருத்தி செய்து கொள்ள நிரம்ப வசதியும் பெறுகிறான்.

ஜாண்டர் சுறுசுறுப்பானவன். எவ்வளவு கஷ்டப்பட்டு உழைக்கிறான் என்பதை மற்றவர்கள் பார்க்க வேண்டும் என்பதற்காக சாப்பாட்டு நேரத்தில்தான் விசாரணை நடத்துவான்.

உத்தியோகத்துக்கு சம்பந்தமில்லாத பல நலன்கள் அவனுக்கு இருந்தன. அதனை மற்றவர்கள் பொருட்படுத்தாமல் இருக்க வேண்டும் என்பதற்காக, அவன் தனது உத்தியோகக் காரியங்களை சிறப்பாகச் செய்வதாக காட்டவேண்டி இருந்தது. அதன் மூலம் தன் யோக்யதையை அவன் நிரூபிக்கப் பாடுபட்டான்.

இவன் கையில் சிக்குபவன்நிலை பரிதாபத்துக்குரியது. அதுவும் அவன் வங்கியில் பணம் வைத்திருப்பவனாக இருந்துவிட்டால் இருமடங்கு பரிதாபத்துக்கு உரியவனாகிவிடுவான். பணம் பறிக்கும் கலையில் ஜெர்மன் அதிகாரிகளுக்கிடையே மிகுந்த ஆற்றல் உள்ளவன் இவன்தான்!

**பிரடரிக்**–நெட்டை, ஒல்லி, குரூரக் கண்கள், கெட்ட சிரிப்பு- இதுதான் இவனது இலட்சணம்.



ஜூலியஸ் பூசிக்

செக்கோஸ்லாவாக்கியா குடியரசில் பல ஜெர்மன் கம்யுனிஸ்டுக்கள் தஞ்சம் புகுந்தார்கள். அவர்களைப் பிடித்து ஜெர்மனுக்கு அனுப்பும் பொருட்டு 1937ல் செக் நாட்டுக்கு வந்தான்.

இவனுக்கு ஆசை பிணங்களின் பேரில்? யாரையும் இவன் தன்னுடைய வாயால் நிரபராதி என்று சொல்வதே இல்லை.

இவனது அலுவலகத்திற்குள் நுழைந்துவிட்டால் ஒவ்வொருவனும் குற்றவாளியே.

பெண்களிடம், அவர்களுடைய புருஷர்கள் மந்தைச் சிறையில் மடிந்தனர் என்றோ, அல்லது தூக்கிலிடப்பட்டனர் என்றோ கூறுவதில் இவனுக்கு அலாதிப்பிரியம்.

தன் மேசையில் உள்ள ஏழு டப்பாக்களை இவன் எடுத்து எதிரே உள்ளவர்களிடம் திறந்து காட்டுவான். அவற்றுக்குள் சாம்பலும், எலும்புத்துண்டும் இருக்கும். பிறகு சொல்வான்:

"அந்த ஏழு பேரையும் நான் என் சொந்தக் கையால் அடித்தே கொன்றேன். நீ எட்டாவது ஆளாகப் போகிறாய்!"

இப்போது தன் மேஜையில் இவன் வைத்திருக்கும் டப்பாக்கள் எட்டு.

ஏனெனில் ஜான் ஷிக்கா என்னும் போராளியை இவன் அடித்தே கொன்றான்.

மற்றவர்களைவிடப் பெண்களைச் சித்திரவதை செய்வதில்தான் இவனுக்கு அபாரமான பிரியம்.

அலங்கார அணிபொருட்கள், சுகபோக பொருட்கள்மீது இவனுக்கு மோகம். நன்கு அலங்கரிக்கப்பட்ட ஒரு வீடு, அல்லது பணம் உன் கையில் இருந்தால், அது இவன் கையில் உன் மரணத்தை விரைவுபடுத்தும்.

**என் அதிகாரி ஜோசப் பொஹ்ம்**– பணத்தின் பேரிலோ, பிணத்தின் பேரிலோ இவனுக்கு அலாதியான ஆசை கிடையாது. ஆனாலும் இவன் கொன்றவர்களின் எண்ணிக்கை மற்ற இருவருடைய பட்டியல் கணக்குக்குக் குறைந்ததல்ல.

புகழும், மதிப்பும் உள்ள ஒருவனாக விளங்கவேண்டும் என்பதே இவனுடைய ஆசை.

ஹிட்லருடனும் இவன் நேரில் பழகியிருக்கிறான். ஹிட்லருடன் பழகியதைவிட பெரிய வாய்ப்பு பின்னர் கிடைத்தது.

அதுதான் மக்களை வேட்டையாடும்படி உத்தரவிடுவதற்கு, மக்களின் வாழ்வையும், சாவையும் நிச்சயிக்கும் கடவுளாக இருப்பதற்கு, முழுக் குடும்பங்களையும் கொல்லும்படி கட்டளை பிறப்பிப்பதற்கு கிடைத்த வாய்ப்பு.

விசாரணை செய்வது இவனுக்கு அலுப்பாக இருந்தது. ஆட்களைப் பிடிப்பதும், தன் தீர்ப்புக்காக அவர்கள் கைகட்டிக் காத்திருப்பதைப் பார்ப்பதுமே இவனுக்கு மன ஆறுதலைத் தந்தது.

ஒரு சமயம் பிரேக் நகரில் இருநூறு டிராம் வண்டி நடத்துநர்களையும், பஸ் சாரதிகளையும் கைதுசெய்தான். எல்லோரையும் ஆட்டு மந்தைகள் போல நடுத்தெருவில் நடத்தி வந்தான். போக்குவரத்துக்களை நிறுத்தினான். எங்கும் பீதி கிளப்பினான். அதில் இவனுக்கு பரமானந்தம்.

**கொடும் சிறைக்கூடத்திலிருந்து இரகசியமாக எழுதப்பட்டு, சிறைக் காவலாளி ஒருவரின் துணையுடன் வெளியே கடத்தப்பட்ட குறிப்புக்கள் இவை. ஹிட்லர் வீழ்ந்த பின்னர் ஒன்று திரட்டப்பட்டு வெளியிடப்பட்டது.**

பின்னர் நூற்றைம்பது பேரை விடுதலை செய்தான். 'நூற்றைம்பது குடும்பங்கள் என்னை காருண்யவான் என்று பேசிக் கொள்ளும்' என்று சொல்லி திருப்தியடைந்தான்.

இவன் கையில் பிடிபடும் வழக்குகள் சாதாரணமாக முக்கியமானவை அல்ல. ஆனால் சிக்கலானவை. நான் மட்டுமே இதற்கு விதிவிலக்கு. காரணம், நான் தற்செயலாகவே இவனிடம் சிக்கினேன்.

நாங்கள் இருவரும் எப்போதுமே ஒருவரிடம் ஒருவர் பொய்யையே சொன்னோம்.

ஆனால் ஒரு வித்தியாசம். இவன் பேசுவதில் எது பொய் என்று எனக்கு எப்போதுமே சுலபமாகத் தெரிந்துவிடும். இவனுக்கு என் பொய் பல தடவை தெரியாது.

விசாரணையின்போது இவன் உபயோகித்த ஆயுதங்கள் தடியும், இரும்புக் கம்பியும் மட்டுமல்ல; ஆளுக்குத் தக்கபடி சாதுர்யமாகப்பேசி தன் வழிக்குத் திருப்ப விரும்பினான்.

முதல் இரவில் மட்டுமே என்னைச் சித்திரவதை செய்தான். அதன் பின்னர் அவசியமென்று கருதினால், என்னை வேறு ஒருவனிடம் ஒப்படைப்பான்!

மற்றவர்களிடம் இல்லாத கற்பனா சக்தி இவனிடம் இருந்தது. அதை எப்படி உபயோகிப்பது என்பதும் இவனுக்குத் தெரிந்திருந்தது.

"பார்த்தாயா? உன்னை நாங்கள் கைது செய்தோம். அதனால் இந்த ஜனங்களிடம் ஏதாவது மாறுதல் ஏற்பட்டிருக்கிறதா? ஒன்றுமே இல்லை. முன்னைப் போலவே அவர்கள் போகிறார்கள்; வருகிறார்கள்; புன்னகை புரிகிறார்கள்; தம் அன்றாடக் கஷ்டங்கள் பற்றிக் கவலைப்படுகிறார்கள். நீ ஒருபோதும் அவர்களிடம் இருந்து வேலை செய்யாததுபோல உலகம் நடக்கிறது. அவர்களில் சிலர் நிச்சயமாக உன் பத்திரிகையின் பழைய வாசகர்கள். உன்னைப் பற்றிய கவலையினால் அவர்களில் யாருடைய முகத்திலாவது ஒரு சுருக்கம் அதிகமாயிருக்கிறது என்று நினைக்கிறாயா?"

சில சமயம் நாள் முழுவதும் விசாரணை நடந்த பிறகு அவன் என்னைத் தன் காரில் ஏற்றிக்கொள்வான்.

"நீ பிரேக்கை நேசிக்கிறாய் என்பது எனக்குத் தெரியும். பார் அதோ! இந்த நகரில் திரும்பிவந்து வாழ உனக்கு விருப்பமே இல்லையா? பிரேக் எவ்வளவு அழகாக இருக்கிறது! நீ ஒழிந்த பிறகும் அழகாகவே இருக்கும்!"

சாத்தான் ஆசை காட்டி மோசம் செய்யும். அதன் வேலையைத்தான் இப்போது என்னிடம் இவன் காட்டுகிறான்.

கோடைக்கால அந்திப் பொழுது பிரேக்கை அழகில் குளிப்பாட்டிற்று. பனித்திவலைகள் இலேசாக விழுந்தன. பழுத்துக் குலுங்கும் திராட்சைத் தோட்டம் போல ஒரே நீலநிறமாக வானமும், பனிப்படலமும் தோன்றின. திராட்சையைப் போல மனதைக் கவர்ந்து போதையை உண்டு பண்ணிற்று இந்த அழகு.

பூமியின் விளிம்புவரை பார்வையைச் செலுத்த என் மனம் துடித்தது... ஆனால் அவனை இடைமறித்து நான் சொன்னேன்:

"நீங்கள் எல்லோரும் ஒழிந்த பின்னர், எங்கள் பிரேக் இன்னும் அதிக அழகாக இருக்கும்!"

அவன் சுருக்கமாக - கேவலமாக அல்ல–வருத்தமாகச் சிரித்தான். பிறகு சொன்னான்:

"நீ ஒரு குதர்க்கப் பேர்வழி!"

அந்த மாலைநேர உரையாடலை இவன் அடிக்கடி நினைவூட்டுவான்.

"நாங்கள் எல்லோரும் ஒழிந்த பிறகு.... அப்படியானால் நீ இன்னும் எங்கள் வெற்றியை நம்பவில்லையா?"

இவன் ஏன் அடிக்கடி இப்படிக் கேட்கிறான் என்றால், இவனுக்கே தங்கள் வெற்றியில் நம்பிக்கை நிச்சயமாகவில்லை.

(தொடர்ந்து வரும்)

# திசைமாறிய தென்றல்

கார்கால மேகங்கள் வானத்தை முகாமிட்டுக்கிடந்த ஒரு மார்கழி இரவு. குறிப்பிட்ட தூரத்தில் ஒருவர் பின் ஒருவராக நடந்துகொண்டிருந்தனர். இந்தப்பயணம் அவனுக்கு ஏற்கனவே பழக்கப்பட்டதுதான். ஒவ்வொரு முறையும் அவன் சாவைத் தேடிச் செல்கிறான். சந்திக்காமலே திரும்பிவிடுகிறான்.

மேகத்தைக் கிழித்துக்கொண்டு பளிச்சிடும் மின்னல் ஒளியில் கண்ணுக்கெட்டிய தூரத்தில் ஆங்காங்கே ஓட்டுவீடுகளும் அவற்றிடையே வளர்ந்திருந்த பனைமரங்களும் தெரிந்தன.

அவனது பள்ளிக்காலத்தில் ஒரு முறை, பாடசாலைக்கருகே நின்றிருந்த இரட்டைப் பனைமரமொன்றை மின்சார சபை வெட்டியதும், அதை எதிர்த்து மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதும், அதற்கு அவன் தலைமை தாங்கியதும் நினைவுக்கு வந்தன. எத்தனை இனிமையான காலங்கள். வாழ்க்கையின் வசந்த காலப் பொழுதுகள். அந்தக்காலங்களில் தான் அவளும் அறிமுகமானாள். அந்தப் பரிதாபமான கண்களுக்குள்ளே, அவன் பலமுறை காணாமற்போயிருக்கிறான்.

அவளது விழிகளின் மொழியை அவன்மட்டுந்தான் புரிந்துகொண்டானா? அல்லது புரிந்து கொள்ள முயற்சித்தானா? என்று அவனுக்கே புரியவில்லை. காரணம், அவளைக் காணாதபோது கரையைத் தேடி ஓடும் காட்டாறுபோல அவள் வரும் திசையைத் தேடும் இதயம், கண்டதும் ஆர்வமின்றி அடங்கிப்போவதை பலமுறை உணர்ந்திருக்கிறான்.

இது காதலா? ஆம்! ஓசையில்லாத காதல்; ஊமைக்காதல். மொழியில் இல்லாத அழகு மௌனத்தில் இருக்கிறது. பேசாத காதலுக்கு சக்தி அதிகம். இந்தக்காதலும் அப்படித்தான். நிறைவேறாத, ஆனால் நிஜமான காதல். அவனுக்கும் அவளுக்குமிடையே கிடந்தது சாதி எனும் வேலி. அதைத் தாண்டவோ, பெற்றோரின் எதிர்ப்பைச் சமாளிக்கவோ அவனால் முடியாது என்று தீவிரமாக நம்பினான். ஆனாலும் அவளைத்தீவிரமாகவே நேசித்தான்.

**பாண்டியூர்– கனி**

அப்போதெல்லாம் தேசத்தைப் பற்றியோ இந்தப் போராட்டத்தைப் பற்றியோ அவன் தெரிந்துகொள்ள ஆர்வப்பட்டதில்லை. படிப்பு, பட்டம், செல்வம், பரோபகாரம், சீர்திருத்தம்... என்னென்னவோ எண்ணங்கள், கனவுகள். இப்போது நினைத்தால் அவனுக்கே சிரிப்புவருகிறது. வாழ்க்கை சிக்கலானது. அதைத்திருத்துவதற்கு முயற்சிக்க முயற்சிக்க, அது இன்னுமின்னும் சிக்கலாகிப்போகிறது சிலருக்கு. அந்த சிலரில் அவனும் ஒருவனாகிப் போனான்.

ஒருநாள் அதிகாலைப் பொழுது. உயர்தரப் பரீட்சைக்காக சிமினிவிளக்கொளியில் படித்துக்கொண்டிருந்தான். தெருநாய்களின் குரைப்பொலியும் வாகன இரைச்சலும் அதைத்தொடர்ந்த காலடிச்சத்தங்களும் காதுகளைக் குடைய, இதயத்தைப்பயம் கௌவிக்கொண்டது அவனுக்கு. அம்மா அரண்டெழுந்து அவனது அடையாள அட்டையைத் தேடுவது தெரிந்தது.

திடீரென்று ஊர் சுற்றிவளைக்கப்பட்டது. அன்றைய விடியலில் அவனது வாழ்க்கை திசை திரும்பப்போவதை அறியாதவனாக முற்றுகைக்கு முகங்கொடுக்கக் காத்திருந்தான். முற்றுகையிட்டவர்கள் அவனையும் அழைத்துச் சென்றனர். கடற்கரை மணலில்- தகிக்கும் வெயிலில் அமர்த்தப்பட்டு கைகள், முழங்கால்கள் பரிசோதிக்கப்பட்டதுடன் அடையாள அட்டைகளும் சோதனையிடப்பட்டன.



திடீரென்று ஊருக்குள்ளே பலமான வெடிச்சத்தமொன்று கேட்டதைத் தொடர்ந்து சங்கிலித்தொடரான துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

ஒரு வினாடிதான் கடந்திருக்கும். முற்றுகையில் அழைத்துவரப்பட்ட அனைவரும் மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்டனர். 'இவர்களுக்கு இந்தக் கோபம் எங்கிருந்து வருகிறது? ஒன்றுமே செய்யாதவர்களை இப்படித் தாக்குவதற்கு எப்படி முடிகிறது இவர்களால்?' அந்தப்பயங்கரமான சூழலிலும் அவன் ஆச்சரியப்பட்டான்.

எல்லோரும் முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். சிலநாட்களின் பின்னர் அவனும், இன்னும் சிலரும் விடுதலையாகினர். சிலர் வரவே இல்லை.

அந்த முற்றுகையின்போது கைக்குண்டு வீசப்பட்டதாம். அதன் எதிரொலிதான் இத்தனையுமென்று அறிந்துகொண்டான். உருக்குலைந்து போயிருந்த அம்மாவைக் கண்டதும் துக்கம் தொண்டையை அடைக்க பேச்சிழந்து நின்றான்.

இன்றுபோலொரு மார்கழி இரவில் தான் வீட்டைவிட்டுப்புறப்பட்டான். ஒ... கைகளைக் கடந்து, வீதிகளைக் ... ஊரைக்கடந்து, கனவுகளைக் ... தொலைதூரம் வந்துவிட்டா...



படிப்பகம்

www.padippakam.com

> அடிக்கடி சந்தித்தாள். அவளின் விருப்பத்தைக்கூறினாள். ஆரம்பத்தில் அவன்திகைத்தான்.

# அந்த நிலா...!

**கரீமா ராஹில்**

விழிகள் விழுங்கும் தூரத்தை அந்த மலை தடுத்து நிறுத்தியது. மலை மீது அரிசியைச் சொரிந்தது போல வெண் பனிகள்- மனதுக்குக் கனிகள்தான். விழிகள்தான் சுவைக்கும் நாவு. திலீப் ஆனந்தத்துடன் அந்த இயற்கையை இரசித்துக் கொண்டிருந்தான்- ருசித்துக்கொண்டிருந்தான். இறைவனின் அற்புதம்! எவ்வளவு கற்பனை! அதைப் பருகப்பருக அலுப்பதில்லை.

இன்று ஞாயிற்றுக்கிழமை. ஜூலி வருவதாகக் கூறியிருந்தாள். திலீப் மிகுந்த சந்தோஷத்தை உள்ளமெங்கும் பூசிக்கொண்டிருந்தான். அவனின் மனம் அவனுக்கு நறுமணங் கொடுத்தது.



ஃபிரான்ஸ் நிலா! ஃபிரான்சிலா அவனின் நிலா! அவனுக்கே ஆச்சரியம். புகலிட வாழ்வு எதைத்தான் மாற்றவில்லை?

அவனின் இதயத்தையே மாற்றிய வாழ்வு! இலங்கையில் படிக்கும் காலத்தில் அறியாமை இருளைச் சலவை செய்யும் ஒரு ஆசானாக வர விரும்பினான். ஏ.எல். கலைப்பிரிவோடு அவனின் கல்விப் பயணம் முற்றுப் பெற்றது.

இலங்கையின் போர் சூழல்! அகதி வாழ்வு! போர் உண்டாக்கிய அவலங்கள்!

நண்பர்களின் இழப்பு....
உறவினர்களின் இழப்பு......
ஊரவர்களின் இழப்பு.......
.....................
.....................
.....................

இப்படி எத்தனை இழப்புக்கள்!

"மோன, நீ பிரான்சுக்குப் போறியே?" அவனின் அப்பாதான் இதயத்தில் எழுதினார்.

திலீப் பலமாக யோசித்தான். தனக்குள் ஆழமாகப் பேசினான்.

முடிவெடுத்தான். அந்த முடிவை அப்பாவிடம் கொடுத்தான்.

இரண்டு மாதங்களுக்குள் அவனின் ஃபிரான்ஸ் பயணம் சரியானது.

"மோன, எனக்கு இப்பத்தான் நிம்மதி! உன்ர தங்கைமார நீதான் ஒரு வழி பண்ணனும்....எங்க போட்டு எப்படி சீவித்தாலும் நம்முடைய பண்பாட்டை மறந்துடாதே!"

அவனின் அப்பா அவரின் இதயச் சத்தத்தைக் காட்டினார். பண்பாட்டுப் பற்றை ஊட்டினார்.

"அப்பா! நீங்க ஒண்டுக்குமே யோசிக்க வேண்டாம்....எல்லாம் நல்லபடியாக நடக்கும்..."

அப்பாவுக்கு ஒப்புதல் வழங்கினான். அவனின் உண்மை உள்ளத்தை விளக்கினான்.

ஃபிரான்ஸ் வந்தான். நெப்போலியனின் வீரம்! அவனின் துணிவு! அவனின் போர்த் திறன்! போர் முறை அத்தனையும் அவனுக்குள் எழுந்துநின்றன. கனகலிங்கம் மாஸ்டர் சமூகக்கல்வி படிப்பிக்கும்போது ஃபிரான்ஸ் பற்றி பக்கம் பக்கமாகக் கூறியவைகள் அவனின் ஞாபகத்தைத் தழுவின. சோகங்களைக் கழுவின.

'ஜேம்ஸ் சுப்பமார்க்கட்' அவனின் வேலைத் தளமானது. அந்த மார்க்கட்டுக்கு அழகு வழங்குதல்தான் அவனின் தொழில்! சுத்திகரிப்பாளராக வேலை செய்தான்.

அந்த 'ஜேம்ஸ் சுப்பர்மார்க்கட்' அந்த நிலவால் அடிக்கடி வெளிச்சம் பெறும்.

ஒரு விடியலில் அவள் அங்கு வந்தாள். திலீப் பொருட்களை ஒழுங்குபடுத்தி சுத்தம் செய்து கொண்டிருந்தான். அப்போதுதான் அதைக் கண்டெடுத்தான். அந்த மணி பேர்சில் அவளின் புகைப்படம். இன்னும் சில பொருட்கள். முக்கியமாக மூவாயிரம் டொலருக்கான கேஷ் செக்- பிரான்ஸ் நோட்டுக்கள் பல.

அவள் மனேஜருடன் பேசிக்கொண்டிருந்தாள். திலீப் அருகில் சென்றான்.

"இது உங்களுடையதா...?" ஆங்கிலத்தில் கூறினான்.

அந்த நிலவின் சோகம் விலகியது. அவனுக்கு அவள் நன்றி சொன்னாள். அவனைப் பற்றி அந்த மனேஜரிடம் விசாரித்தாள்.

அவள் அடிக்கடி அங்கு வந்து போனாள். திலீப்புடனும் நட்பை வளர்த்தாள்.

அன்று பௌர்ணமி நிலா நாள். அந்த நிலா திலீப்பின் வாசலுக்கு வந்தது.

"உங்களோடு பேச வேண்டும். வாறீங்களா...?"

அவள் ஆங்கிலத்தை அழகு படுத்தினாள்.

ஒருநிலா அழைக்கும்போது யார்தான் மறுப்பார்கள்?

"ஹோட்டலுக்குப் போவம்..."

அவனும் அந்தக்காரில் ஏறினான். அவள் பேசிக்கொண்டிருந்தாள். அவளின் பேச்சில் அவனைப்பாராட்டி வசீகரித்தாள். அடிக்கடி சிகரட் உறவு பூண்டாள். அவனுக்கும் கொடுத்தாள்.

ஹோட்டலில் மனந்திறந்து பேசினாள் ஜூலி.

"நீங்க இந்த வேலையை விடுங்க... நான் ஒரு நல்ல வேலை தேடித்தாறன்...."

அவனும் விரும்பினான்.

அதே ஹோட்டலில் வரவேற்பாளர் வேலை பெற்றுக் கொடுத்தாள். கை நிறையச் சம்பளம்; மனம் நிறைந்து கொண்டது.

அடிக்கடி சந்தித்தாள். அவளின் விருப்பத்தைக் கூறினாள். ஆரம்பத்தில் அவன் திகைத்தாலும் திகட்டாத நிலவுமீது திலீப் அன்பு கொண்டான்.

"குட் மோனிங்......" சொல்லிக் கொண்டே கதவை விலக்கினான் திலீப்.

அவளும் பதிலுக்குச் சொன்னாள்.

"இன்டைக்கு ஒரு முக்கியமான நாள்... நீங்க என்னோட வரணும்...."

"அப்படி என்ன விசேஷம்..?"

"........"

இருவரும் புறப்பட்டார்கள். கார் வேகமாகச் சென்று கொண்டிருந்தது. அவனின் இதயமும் வேகமாக இயங்கிக் கொண்டிருந்தது.

"..........."
"..........."

அவளைப்பற்றி இதுவரைக்கும் அவன் அறிந்திருக்கவில்லை.

அவன் வினா எழுப்பவும் இல்லை.
அவள் விடை சொல்லவும் இல்லை.
அவளின் மலரழகு,
அவளின் தென்றல் பேச்சு!,
அவளின் உடையழகு!,

அவனுக்கு தேன் ஊட்டின. அதனால் நீ யார்? எனும் வினா அவசியமற்றுப் போனது. ஒரு மண்டபத்துக்கு முன்னால் கார் நின்றது.

'மியூசிக் ஷோ.....'

அவள் ரிக்கட் எடுத்தாள். இரண்டுமணி நேரம் இனிமையானது. அவனை அணைத்தாள். முத்தமிட்டாள்.

இருவரும் ஹோட்டலுக்குச் சென்று உயர்தரமாகச் சாப்பிட்டார்கள்.

திரைப்படம் பார்த்தார்கள்.

அவளின் அன்பு அவனுக்கு சுகம் கொடுத்தது.

தனக்குள்தானே பெருமை கொண்டான்.

மாலை நேரம் அவனை அவனின் இடத்துக்கே கொண்டு வந்து சேர்த்தாள்.

"..............."
"..............."
"..............."
"..............."

மௌனம்! கொல்லும் மௌனம்....

"ஜூ...லி...."

"ஐயாம் சொறி திலீப்.....!"

அந்த நிலா அழுதது.

"நாளைக்கு எனக்குத் திருமணம்.... இதுதான் கடைசிச் சந்திப்பு.....!"

அவள் எழுந்து சென்றாள்.

அவன் இடிந்து போய் உட்கார்ந்திருந்தான்.

# வசந்தி

**கார்-மேகலா**



நான் கல்முனையிலிருந்து மட்டக்களப்புக்குப் புறப்படும் அந்த நீலம்கலந்த வெள்ளை வானில் ஜன்னலோர ஆசனத்தில் தினமுரசு படித்துக்கொண்டிருந்தேன். எனக்கு ஒரே அதிசயமாகவிருந்தது. வசந்தி அப்படிச் செய்திருப்பாளா? அப்படிச் செய்யக்கூடியவளென்றால் அதற்காக அவமானப்பட்டுக்கொண்டு இத்தனை நாளாக கெம்பசுக்கு வராமல் நிற்பாளா? பாவம்! என்ன மனநிலையிலிருக்கிறாளோ?

முரசைக் கையிலெடுத்தால் முதலில் என் கண்கள் தேடுவது 'சிந்தியா பதில்'களைத்தான். இன்று சிந்தியாபதில்களிலும் சிந்தனை நிற்கமறுத்து வசந்தியைச் சுற்றியே சுழன்றது. எல்லோரும் எப்படியெப்படியெல்லாம் பேசுகிறார்கள்! இதுவே வேறு ஒரு சந்தர்ப்பமாக இருந்து, வேறு ஒருவரின் பிரச்சனையாக இருந்திருந்தால் வசந்திகூடத்தான் எப்படியெல்லாம் பேசியிருப்பாள்.

வாய்கூசாமல் வம்பளக்கும் பெண்களுக்கு போட்டியொன்று வைத்தால் அதில் வசந்திக்குத்தான் முதலிடம் என்பதில் எனக்கு எப்போதுமே சந்தேகமிருந்ததில்லை, சிலவேளைகளில், அவளுக்கு 'வசந்தி' என்று பெயர் வைத்ததைவிட 'வதந்தி' என்று வைத்திருந்தால் மிகவும் பொருத்தமாக இருந்திருக்கும் என்று நான் நினைத்ததுண்டு.

வசந்தி வாயைத்திறந்தால் அவளைப் பற்றிய கதைகளைவிட அடுத்தவர்களைப்பற்றிய கதைகள்தான் அதில் அதிகமாக இருக்கும். அதிலும் அநேகமாக ஆண்களைப்பற்றிய விவரங்களெல்லாம் அவளது விரல் நுனியில்தான். அத்தனைபேரின் சுயசரிதையும் அவளுக்கு மனப்பாடம். அயல்வீட்டு அஜந்தாவின் அரிசிப்பானையில் எலி நுழைந்ததிலிருந்து [illegible]ங்கத்து ஊரிலுள்ள பவளத்தின் மகன் பரதேசி[illegible] திரிவதுவரை அனைத்தும் அவளுக்கு [illegible]படி.

[illegible]ன்களுடன் கதைப்பதில் "பேய்க்[illegible]று பீடத்துக்குள் பெயரெடுத்த பெருமைக்குரிய பெண்களில் வசந்தியும் ஒருத்தி. சிலநாட்களுக்கு முன் கடைசியாகக்கூட ஒரு அறிக்கை சமர்ப்பித்தாள்: "யாரோ ஒரு பெடியன் பழைய காதலியைக் கைவிட்டுப் போட்டு புதிய ஃபிகரொன்றை கட்டிற்றானாம்," என்று.

வசந்தி கதைப்பதை வாய்பார்க்கவென்றே எங்களுக்குள் ஒரு கூட்டமுண்டு. நிஷா, சுமதி, சாந்தி என்று பட்டியல் நீளும். அவரவர் சார்பாக ஏதாவது அபிப்பிராயம் சொல்லாமலிருக்கமாட்டார்கள். "நாங்க மட்டும் என்ன விஷயம் தெரியாதவங்களா? எங்களுக்கும் நாட்டுநடப்புத் தெரியும்!" என்பது போன்ற பெருமை அவர்கள் பேச்சில் தொனிக்கும்.

இப்படியான கதாப்பிரசங்கங்கள் தொடங்கிவிட்டால் நான் மௌனமாக இருந்து விடுவேன். ஒருநாள் வசந்தி என்னிடம் கேட்டாள்; "நீ மட்டும் என்ன பேசாம இருக்கிறாய்? உனக்கு நாட்டு நடப்பு ஒன்றுமே தெரியாது?" மற்றவர்களும் அதை வழி மொழிந்தார்கள்.

"வசந்தி! எனக்கு இன்னும் என்னைப் பற்றியே சரியாகத் தெரியாது! இதில் உலகத்தைப் பற்றி கவலைப்பட எனக்கெங்கே நேரமிருக்கிறது? முதலில் என்னைத் தெரிந்து கொள்கிறேன். பிறகு வந்து உலகத்தைப்பற்றி உன்னிடம் சொல்கிறேன்." என்றேன்.

"ஆரையம்பதியெல்லாம் இறங்குங்க!" நடத்துநரின் சப்தத்தில் சிந்தனை கலைந்தேன். கைப்பையை எடுத்துக்கொண்டு வசந்தி வீட்டை நோக்கி நடந்தேன். கடந்த ஒரு வாரமாக வசந்தி விரிவுரைகளுக்கு வரவில்லை. விசாரித்துப் பார்த்ததில் நிஷாவும், சுமதியும் தப்புத்தப்பாக ஏதேதோ சொன்னார்கள். வசந்திக்கும், அவளது அடுத்த வீட்டு அங்கிளுக்கும் தப்பான தொடர்பாம். அவருக்கு மூன்று பிள்ளைகள். அவர் மனைவிக்கு தொடர்பு தெரிந்துபோய் பிரச்சனை வெடித்து விட்டதாம்.

வசந்தியின் வீடு வந்துவிட்டது. எதிர்பாராத விதமாக வசந்தியே வாசலில் நின்றுகொண்டிருந்தாள். என்னைக் கண்டதும் சங்கடப்பட்டு பின் சமாளித்தபடி வலுக்கட்டாயமாக வரவழைத்த புன்னகையோடு வரவேற்றாள்.

நான் நேரடியாகவே, "வசந்தி ஏன் அநியாயமாக லெக்சர்சைக் கட் பண்றாய்? ஒழுங்கா வராட்டி உனக்கென்ன விளங்கப்போகுது?" என்றேன். அவள் என் முகத்தை சந்தேகமாக பார்த்தபடியே சஞ்சலத்தோடு கேட்டாள், "உனக்கு ஒன்றும் தெரியாதா?" என்று.

"எனக்கு என்னைப்பற்றியே இன்னும் சரியாகத்தெரியாது வசந்தி! ஏனைய வதந்திகளை நான் நம்புவதில்லை! அதனால் இதையும் நான் நம்பவில்லை என்றேன்."

"எனக்குத் தெரியும் சுகி; என்னை நீ நம்புவாயென்று! சத்தியமாக அதில் உண்மையில்லையடி. அந்த அங்கிள் ரொம்ப நல்லவர். நானும் அவங்கட சின்னப்பிள்ளைகளோட சரியான விருப்பம். அதனால நேரம் கிடைக்கிறபோதெல்லாம் போய் ரியூசன் சொல்லிக் கொடுப்பேன். அவரும் நன்றாகக் கதைப்பார். உனக்கு என்னைத் தெரியும்தானே? நானும் நாலு விஷயங்களைப்பற்றி கதைப்பேன். அவர்ர மனுசி சரியான சந்தேகக்காரியாம். அவ என்னை அங்க வராமத் தடுத்திருக்கலாம். ஆனால்.... அவ ஊர் முழுக்க கதையக்கட்டி விட்டிற்றா! இனி எந்த முகத்தோட நான் அங்கு வாறது?" என்று ஏங்கி ஏங்கி அழுதாள். அவள் கண்ணீரே, செய்யாத பாவத்திற்காய் அவள் துயரப்படுவதை பறைசாற்றியது.

நான் அவள் கைகளை ஆதரவாகப் பற்றியபடி சொன்னேன், "வசந்தி, உன்னைப்பற்றி உனக்குச் சரியாகத் தெரிந்தால் உலகத்தைப் பற்றிய கவலையை வீசிவிடு. அப்படியே, உன்னைப்பற்றியே சரியாக உணராதவர்களிடம் உலகத்தைப்பற்றி விமர்சிப்பதையும் இன்றோடு மறந்துவிடு! தயவுசெய்து நாளை வா! நான் உன்னை நூறுவீதம் நம்புகிறேன்!" வசந்தி கண்ணீரைத்துடைத்தபடி என்னை வழியனுப்பினாள். இப்போது அவள் தூசு துடைத்த கண்ணாடிபோல் பிரகாசமாக கையசைத்தாள்.

# தடைதாண்டும் பயணங்கள்

**யாழ்– மு. கனல**

> "இதுவரை பதினைந்தாயிரம் பேர் கப்பலில் செல்ல பெயர் பதிந்துள்ளனர். அப்படியிருக்க உங்களுக்கு மட்டும் எப்படி முதலிடம் தரமுடியும்?"



"சேகர்.....சேகர்....எழும்பன் மச்சான். நேரம் எட்டுமணியாகுது!" என்ற ரகுவின் குரலுக்கு நித்திரை குழம்பிய சேகர், கண்விழிக்காமலே "இன்னும் கொஞ்ச நேரம் படுக்கவிடன் மச்சான்." அலுப்புடன் சொன்னான்.

"அப்ப நீ கம்பஸுக்கு வரேல்லையே?"

"இன்டைக்கு லெக்சர்ஸ் ஒன்பது மணிக்குத்தானே," என்ற சேகரின் பதிலுக்கு மேல் எதுவுமே போசாத ரகு தனது காலைக்கடன்களை முடிப்பதற்குத் தயாரானான்.

ரகுவும் சேகரும் யாழ் பல்கலைக்கழகத்தின் வர்த்தகபீட 3ம் வருட மாணவர்கள். அவர்கள் வெளி மாவட்ட மாணவர் விடுதியில் ஒரே அறையில் தங்கியிருக்கும் திருகோணமலையைச் சேர்ந்தவர்கள்.

"சேகர்...சேகா!" சேகருக்கு அருகிலிருந்து மெதுவாக ரகு அழைத்தான். உடல் அசதியை கஷ்டப்பட்டு முறித்துக் கொண்டு "என்ன மச்சான்?" எரிச்சலுடன் கேட்டான் சேகர். "உனக்கு ஃபக்ஸ் மெசேஜ் ஒன்று வந்திருக்காம்!" மீண்டும் மெதுவாக சொன்னான் ரகு. "என்ன விசயம் மச்சான்?" என்ற சேகரின் வினாவில் அவசரமும் பதட்டமும் கலந்திருந்தன.

"அது ஒன்றுமில்லை மச்சான். உன்னுடைய அம்மாவுக்கு...." ரகு முடிப்பதற்குள், "அம்மாவுக்கு என்ன மச்சான்?" அவசரப்பட்டான் சேகர். "அம்மாவுக்குச் சுகமில்லையாம்......அதுதான் உன்னை உடனடியாக ஊருக்கு வரட்டாம்." நிதானமாக சொன்ன ரகு, திருமலை செஞ்சிலுவைச் சங்கத்தினால் அனுப்பப்பட்டிருந்த கடிதத்தை சேகரிடம் கொடுத்தான்.

"உடனடியாக ஊருக்கு வரவும்" என்ற பதம் சேகருக்கு பயத்தைக் கொடுத்தது. கவலை அவனை ஆட்கொண்டுவிட்டது. அம்மாவுக்கு அடிக்கடி வருத்தம் வருவது சேகருக்குத் தெரியும். ஆனால் உடனடியாக வரவும் என்பதிலிருந்து வருத்தத்தின் கடுமையை சேகர் உணர்ந்துகொண்டான்.

விடுதி முழுவதும் செய்தி பரவி மாணவர்கள் சேகரின் அறையை நிறைத்துக் கொண்டார்கள். சேகர் கடிதத்தையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான்.

"என்ன சேகர் யோசிக்கிறாய்? பெரிசா ஒன்றும் இருக்காது. வீணாக மனதைப் போட்டுக்குழப்பாதை!"

"எல்லா அம்மாவுக்கும் வருத்தம் வந்தால் பிள்ளையள் பக்கத்திலை இருக்க வேணும் என்று ஆசை வரும். அதுதான் உன்னை உடனடியாக வரச் சொல்லியிருப்பினம்."

"உன்னுடைய அண்ணா வெளிநாட்டிலை. தம்பியும் தங்கைச்சியும் என்ன செய்யிறது; உதவிக்கு ஆள்வேணும் என்றுதான் அவசரமாக உன்னை வரச்சொல்லியிருப்பினம்."

அங்கு கூடியிருந்த சக மாணவர்கள் சேகரின் மனதை ஆறுதல் படுத்தக்கூடிய வாறு தங்கள் கருத்துக்களை தெரிவித்துக் கொண்டிருந்தனர்.

"சரி மச்சான். இதிலை கதைச்சுக் கொண்டிருந்து வேலையில்லை. நாளைக்கு திருமலையிலிருந்து வாற கப்பல் உடனேயே நாளை திரும்பப் போகுதாம். இப்பபோய் கதைச்சால்தான் கப்பலிலை இடம் கேட்கலாம்," என்றான், அங்கிருந்தவர்களில் ஒருத்தன்.

கப்பல்சேவைப் பொறுப்பாளரை சந்திப்பதற்குரிய நேரம் வந்ததும், சேகரும் அவனுடன் சேர்ந்து கொண்டு உள்ளே சென்றனர். பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பொறுப்பதிகாரியின் மொழி இருவருக்கும் புரியவில்லை. ரகு ஆங்கில மொழியில் சேகரின் அம்மாவுக்கு வருத்தம் கடுமை என்பதனையும் சேகர் உடனடியாக அடுத்த கப்பலுக்கு ஊர் போவதற்கு அனுமதி வழங்குமாறும் கேட்டு, செஞ்சிலுவைச் சங்கத்தினால் அனுப்பப்பட்ட செய்தியினை ஆதாரமாக பொறுப்பதிகாரியிடம் கொடுத்தான்.

சில வினாடிகள் கரைந்த பின்னர், பொறுப்பதிகாரி நிலமையினை ஆங்கிலத்திலேயே விளக்கினார்.

"இதுவரை பதினைந்தாயிரம் பேர் ஆறு மாதங்களுக்கு முன்பே கப்பலுக்கு பெயர்களை பதிவு செய்திருக்கிறார்கள். அப்படியான நிலையில் நாளைக்குச் செல்கிற கப்பலில் எப்படி உங்களுக்கு இடம்தரமுடியும்? அத்தோடு நாளை வர இருந்த கப்பல் பாதுகாப்புக் காரணங்களால் வரமாட்டாது. இனி எப்போது கப்பல் சேவை நடைபெறும் என்பதும் இன்னும் முடிவாகவில்லை. அவசரம் என்பதால் இதற்கு அடுத்து வரும் கப்பலில் உங்களுக்கு இடம் தருகிறேன்."

பொறுப்பதிகாரியின் பதில் சேகரின் காதினுள் வேல் பாய்ந்தது போலிருந்தது. ரகு மனந்தளராது நிலமையை விளங்கப் படுத்திச் சொன்னான்.

"இவருடைய அம்மாவைக் கவனிப்பதற்கு வீட்டில் எவரும் இல்லை. இவர் ஊர் போனால்தான் அம்மாவை நன்கு கவனிக்க முடியும். தயவு செய்து அடுத்த கப்பலுக்கு இடம் ஒதுக்கித்தாருங்கள்."

பொறுப்பதிகாரி மௌனம் காத்தார். ரகுவும் சேகரும் பொறுப்பதிகாரியின் பதிலை ஆவலுடன் எதிர்பார்த்தனர்.

"சரி உங்கள் விபரங்களை இந்த விண்ணப்பப்படிவத்தில் தந்துவிட்டு, அடுத்த கப்பலுக்கு வாருங்கள்!" என்ற பொறுப்பதிகாரியின் பதில், இருவருக்கும் சந்தோசத்தைக் கொடுத்தது. விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து கொடுத்துவிட்டு நிம்மதிப் பெருமூச்சுடன் இருவரும் விடுதிக்குத் திரும்பினர்.

கப்பலுக்குப் பதிவு செய்த நான்காவது நாள் பத்திரிகை "இன்று கப்பல் சேவை நடைபெறும்" என்ற செய்தியைத் தாங்கி வந்தது. ஏற்கனவே தயாராக வைத்திருந்த பயணப்பையுடன் சேகர் புறப்பட்டான்.

பலத்த சோதனைகளின் பின்னர் பயணிகளை ஏற்றிக்கொண்டு கப்பல் புறப்பட ஆறுமணிநேரமானது.

இரவைக் கிழித்துக்கொண்டு கப்பல் போய்க்கொண்டிருந்தது. கப்பலுக்குள் ஏறும்வரை ஏற்பட்ட உடல் அசதியினால் பலர் தமது இருக்கைகளில் தூங்கி வழிந்து கொண்டிருந்தனர். சிலர் கப்பல் பயணம் ஒத்துக்கொள்ளாத காரணத்தால் வாந்தி எடுத்துக்கொண்டிருந்தனர்.

இரவைத் துரத்திக்கொண்டு வெளிச்சம் வந்தபோது, கப்பல் திருமலைத் துறை முகத்தை தொட்டது. பயணிகள் கப்பலால் இறக்கப்பட்டு, நீலச் சீருடை தரித்தவர்களால் மேற்கொள்ளப்பட்ட கடும் சோதனைக்குப்பின் வெளியே விடப்பட்டனர்.

சொந்த மண்ணில் கால் பதித்ததும் சேகருக்குப் புதுத்தெம்பு வந்திருந்தது. எல்லாத்தடைகளையும் தாண்டி ஊர் வந்து சேர்ந்ததனால் ஏற்பட்ட நிம்மதிப்பெருமூச்சுடன், உயிர் பெற்று, தயாராக நின்ற வாடகை ஓட்டோவில் ஏறி வீடு வந்து சேர்ந்தான்.

அம்மாவைப் பார்க்கப்போற சந்தோசத்தில் உள்ளே புகுந்த சேகரைக் கண்ட தங்கை, "அண்ணா....." என அழுதபடி சேகரை நோக்கி ஓடிவந்தாள். இலண்டனில் இருந்த அண்ணாவும், தம்பியும் வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்தனர்.

இவற்றிலிருந்து நடந்து முடிந்த விபரீதத்தை சேகரால் புரிந்து கொள்ள முடிந்தது. அன்பான அம்மா இவ்வுலகை விட்டுப் பிரிந்து மூன்று நாட்களாகிவிட்டன.

சகோதரங்களைக் கட்டியணைத்து அழுது கொண்டிருந்தான் சேகர். எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள இலண்டனிலிருந்து அம்மாவின் இறுதிக்கிரியைக்கு அண்ணாவால் வரமுடிந்துள்ளது. ஆனால் ஒரே நாட்டில் சில மைல்களுக்கு அப்பாலிருந்து சேகரால் வரமுடியவில்லை.

சேகர் அம்மாவின் இழப்பை மட்டுமல்ல, தம் இனத்தின் தலைவிதியையும் நினைத்தே அழுதுகொண்டிருந்தான்.




படிப்பகம்

www.padippakam.com

# விழிகளின் யுத்தம்

இலக்கிய நயம்

தருவது — ரசிகன்



"யார் செய்த பாவம்?
நான் செய்த பாவமா?-என்
கண் செய்த பாவமா?"
உறங்காமல் உயிர் நோகக் கிடந்தவள்
தன் மனதை விசாரித்தாள்!

கண்ணுக்குப் பூசிய மையும்
கண்ணீரில் கரைந்து போனது!
மண்ணிலே ஏன் பெண்ணைப்படைத்தான்?
ஆண் மனம் அறியாத
இரு கண்ணை ஏன் படைத்தான்?
முகம் அறிந்த கண்கள்-அவன்
அகம் அறியவில்லை!
தவம் கிடந்து கண்கள் விழித்திருந்தாலும்
நலம் அறிய நாயகன் வந்ததில்லை!

இரகசியமாய் காதலித்தாலும்-காதல்
குடத்து விளக்காய் இருப்பதில்லை!
ஊருக்கு ஆயிரம் கண்கள்-இந்த
ஊருக்கு ஆயிரம் செவிகள்!
கண்டதும் பழிக்கும், காணாததையும் உரைக்கும்.
குன்றின் மேல் இட்ட விளக்காய்
காதலைத் தூக்கி நிறுத்தும்!

"காதலாம் காதல், கண்டறியாக் காதல்!
கூதலோ உடலுக்கு, குளிர்காயவோ காதல்?
சாதலே ஆயினும் காதலை மாய்ப்பேன்,
ஈசலைப்போல நீ விளக்கில் விழாதே!"
ருத்திர தாண்டவம் தந்தை ஆடினார்.

"பொன் இல்லாப், பொருள் இல்லா ஏழை
மண் இல்லாத, மாண்பில்லாக் காளை
கண் இல்லாத, கருத்தில்லாக் காதல்
கண்ணே மறந்துவிடு, துறந்துவிடு அவனை!"
அம்பிகாபதி அமராவதி கதைசொன்ன பாட்டி
வீட்டுக்குள் காதல் வராமல் கதவை மூடினாள்!

"நாட்டுக்குள் காதல் கதை இனிக்கும்
வீட்டுக்குள் காதல் வந்தால் கசக்கும்
கூட்டுக்குள் போட்டுவிட குயிலோ?
காட்டுகின்றேன் என் உறுதி பாரீர்!"
சுற்றத்தை எதிர்த்து சவால் விட்டாள்!

"நெஞ்சுக்குள் முளைத்துவிட்ட காதல்
நஞ்சுக்கு நிகரெனவோ நினைத்தீர்?"
உதடு துடிக்க வினா வெடித்தது.

"பஞ்சுக்கும் நெருப்புக்கும் காதல்
பற்றிக் கொண்டால் மிஞ்சும் பிடி சாம்பல்!"
அன்னையிட்டாள் தீ நெஞ்சில்!

"பஞ்சுமில்லை, நெருப்புமில்லை நாங்கள்,
வஞ்சமில்லை, சூதுமில்லை நடுவில்;
பஞ்சமில்லா பற்றுக் கொண்டோம் நாங்கள்
தஞ்சமில்லா மனது கொண்டீர் நீங்கள்."

"போகும் வழி தெரியாத பேதை
மூழ்கும் கப்பலடி அவன் அந்தக் காளை!
சின்னப் பெண் உனக்குத் தெரியாது உலகம்
கண்ணைத் திரையாக மறைக்கும் உந்தன் பருவம்!"

"தடைக் கற்கள் படிக்கற்களாகும்
மடை கட்டக் காதல் உடைப்பெடுத்துப் பாயும்!
படைதிரட்டி எதிர்த்தாலும் காதல்
பாடையிலே படுத்தபடி போனாலும் காதல்
ஓடையிலே ஓடும் சாம்பலிலும் காதல்,
வாடையிலும் வீசும் எங்கள் காதல்!"
வற்றாத உறுதியில் பற்றி நின்றாள்.

ஓடினாள், உயிர் நெகிழ ஓடினாள்
நாடினாள் அவன் வரவை நாடினாள்.

"தடையெல்லாம் தாண்டி வந்தேன்-காதல்
படைகொண்டு மோதி வந்தேன்!
நெஞ்சுக்குள் நீயிருக்கும்போது-எனை
மிஞ்சுகின்ற தடையிங்கு ஏது?"
துள்ளிக் கூவவேண்டும் என நினைத்தாள்.

"வாடி என் வஞ்சி இளமானே
பாடிப் பறந்திடுவோம் வானத்திலே ஏறி!
பொன் எதற்கு, பொருள் எதற்கு நமக்கு
பூந்தேகத்திலே இல்லாத பொருளா
பூவிதழ்களிலே இல்லாத அமுதா?
பொருள் அறிந்திடலாம், அமுதுண்டிடலாம்
நம்மை நாம் உடையெனவே அணிந்திடலாம் வாடி!"
என்று அவன் பதிலுக்குத் துள்ளுவான்,
வரட்டும் என வழி பார்த்திருந்தாள்.

நகம் கடித்துத் காத்திருந்தாள்-அவன்
முகம் படித்து மகிழ்வறியத் துடித்திருந்தாள்!

"தொட்ட இடம் சிவப்பதென்ன-கை
பட்டவுடன் நெகிழ்வதென்ன?
கட்டழகு மேனி கனிவதென்ன
கட்டிக்கொள்ளவோ உள்ளம் மின்ன?"

கெஞ்சுவான், குறும்பால் மிஞ்சுவான்

"என்ன, என்ன?" என்று
இவள் சீறுவாள்.

"பின்னப் பின்ன வலை பின்ன-நம்
கண்கள் நான்கும் கவிபாட
சின்னச் சின்ன இதழ் விரிய-நான்
செந்தேன் பருகி இளைப்பாற
வண்ண வண்ணக் கனவாக-நான்
கண்டு வந்தேன் உன் நினைப்பாக!"
கண் சிமிட்டிக் கை பிடிப்பான்.

நினைப்பில் இருந்தாள் நகம் கடித்து;
கனைப்புக் கேட்டது பக்கத்தில்!

வந்தான் என்றதும் முகம் மலர்ந்தாள்-அவன்
வதனம் கண்டதும் மனம் அதிர்ந்தாள்!

சூரியன் இல்லாத வானமாக
அவன் முகம் இருண்டு கிடந்தது!

"வாட்டமென்ன வதனத்தில்?"
சோகமறியும் நாட்டத்துடன் கேட்டாள்.

தரை நோக்கினான், தயங்கினான்.
பெண் வெட்கப்படும்போதுதான்
தரையை நோக்கி தலை குனியும்.
அச்சப்படும் ஆணும் சிலசமயம்
தரை நோக்கித்தான் தலை குனிவான்!

அவன் தயக்கம் அவளுக்குள்
கலக்கத்தை உற்பத்தி செய்தது!

தன் துணை துன்பப்படும்போது
பெண் தோழியாகிவிடுகிறாள்.

இன்பத்தை பகிர்ந்து கொள்ள
மஞ்சம் இருக்கலாம்.
துன்பத்தைப் பகிர்ந்து கொள்ள
நெஞ்சத்தால்தானே முடியும்!

அருகில் சென்றவள்-அவன்
தோளில் கைவைத்தாள்!
அவள் கையை தொட்டு
விலக்கியவன் உதடு திறந்தான்!

"இதுதான் நம் இறுதிச் சந்திப்பு!
இனிநாம் பிரிவதே விதியின் தீர்ப்பு!
எதுதான் நம் கையில் உண்டு?
எல்லாம் நம் தலையில் எழுத்து!"

வானம் இடிந்தது போலிருந்தது
அவன் வாய் திறந்த போது
வையகம் அழிந்தது போலிருந்தது
அவன் முடிவு சொன்ன போது!

காறி உமிழலாம் போலிருந்தது
அவன் விதியை நொந்தபோது!

"நெஞ்சில் எழுதியதை-நீ
நீரில் எழுதியதாக நினைத்தாயோ?"
கேட்கத்தான் துடித்தாள்!-செவி
இருக்கிறதா இவனுக்கு?
என் நெஞ்சின் துடிப்பை அறிய
உயிர் இருக்கிறதா இவனுக்கு?
மனமறிந்து துரோகம் செய்பவன்
பிணமென்றுதானே அர்த்தம்!"

நெஞ்சை முட்டிய சோகத்தை
உள்ளேயே அடை காத்துக் கொண்டு
கந்தலாய் கிழிந்த மனதோடு
திரும்பினாள்!

அவன் மறந்து போனான்!-அவனுக்கு
காதல் நீரின் மேல் எழுத்து.
அவள் மறக்க முடியாமல்
உறக்கத்தை தொலைத்துக்
கொண்டிருக்கிறாள்!

'உள்ளத்தால் நினைத்தாரில்லை-வெறும்
உதட்டால் உறவென நடந்தார்!
என் கண்ணே! ஏன் கண்ணே-நீ
உறக்கத்தை மறந்தாய்?
உன் இமைகளுடன்-ஏன்
யுத்தத்தை அழைத்தாய்?'

வினா தொடுத்தாள்!-விழிகளிடம்
விசாரணையா?
விசித்திரமல்ல! இதைத்தான்
திருவள்ளுவரும் சொல்லியிருக்கிறார்.

"பேணாது பெட்டார் உளர்மன்னோ மற்றவர்க்
காணாது அமைவில கண்"

குறள்-1178-அதிகாரம்-118

ஸ்போர்ட்ஸ்

## "ஜடேஜாவை புறக்கணிப்பதா?" கபில் தேவ் கடும் கண்டனம்

தென் ஆபிரிக்கச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருக்கும் இந்திய அணியில் அஜய் ஜடேஜா சேர்க்கப்படாததற்கு தேர்வுக் குழுவை இந்திய அணியின் முன்னாள் கப்டன் கபில்தேவ் கடுமையாகச் சாடியுள்ளார்.



அஜய் ஜடேஜா இடம் பெறாததற்காக வருத்தப்படுவதாக அவர் தெரிவித்தார். கிரிக்கெட் பயிற்சி முகாம் ஒன்றில் அவர் கலந்து கொண்டு பேசுகையில் இதைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:

"அடித்து ஆடும் குணம் கொண்ட ஜடேஜா ஏன் அணியில் சேர்க்கப்படவில்லை என்பது எனக்குப் புரியவில்லை.

ஜடேஜா ஒரு தினப் போட்டிக்கு மட்டுமே லாயக்கானவர் என்று ஏன் நினைக்க வேண்டும்? ஒருவர் ஒரு தினப்போட்டியில் நன்கு விளையாடுகிறார் என்றால் அவரால் டெஸ்ட் போட்டியிலும் நன்கு விளையாட முடியும்.

உதாரணமாக, தென் ஆபிரிக்க வீரர் கேரி கேஸ்டன் ஒரு தினப் போட்டிக்கு மட்டும் லாயக்கானவர் என்று பேசப்பட்டார். ஆனால் இன்று அவர் உலக அளவில் ஒரு தின-டெஸ்ட் போட்டிகளில் திறமையானவர் என்பதை நிரூபித்துள்ளார்.

இந்திய அணிக்கு மூன்று விக்கெட் கீப்பர்களைத் தேர்ந்தெடுத்துள்ளது ஏன் என்பது எனக்கு விளங்கவில்லை. (பங்கஜ் தர்மனி, சபா கரீம், நயான் மொங்கியா ஆகிய மூவரும் விக்கெட் கீப்பர்கள்.)

அணித் தேர்வு சமநிலையில் இல்லை. விக்கெட் கீப்பர் பங்கஜ் தாமனி, நவ்ஜோத் சிங் சித்துவை விடத் திறமையான பேட்ஸ்மன் என்றால் இங்கு நடைபெற்ற தென் ஆபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டிக்கு அவர் ஏன் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

இந்தியா வெற்றி பெறாத பட்சத்தில் தேசிய உணர்வைவிட பிராந்திய உணர்வுக்கு மதிப்பளித்து வெட்ட வெளிச்சமாக்கி விடும். பிராந்திய உணர்வைவிட தேசிய உணர்வுக்கு மதிப்பளிக்கத் தக்கவர்களே தேர்வுக்குழுவுக்குத் தேவை."

இந்திய அணியின் கப்டன் டெண்டுல்கர், மேலாளர் மதன்லால் ஆகியோரைப் பற்றிக் கருத்துக் கேட்டதற்கு, "டைட்டன் கோப்பை ஒரு டெஸ்ட் தொடரை வென்றதை வைத்துக் கொண்டு எதைப் பற்றியும் எடை போட்டுவிட முடியாது. இது துவக்கமே போகப்போகப் பார்க்கலாம்," என்றார் டெஸ்ட் போட்டியில் உலகிலேயே அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ள இந்தச் சாதனை வீரர்.

தென் ஆபிரிக்க சுற்றுப்பயணத்தில் வினோத் காம்ளி, நவ்ஜோத் சித்து, அஜய் ஜடேஜா, சஞ்சய் மஞ்ச்ரேக்கர் ஆகியோரும் இடம்பெறவில்லை.

## நட்சத்திர கிரிக்கெட்

ரஜினி, அமிதாப்பச்சன், சிரஞ்சீவி உட்பட இந்தியத் திரையுலகின் முன்னணி நட்சத்திரங்கள் கலந்து கொண்ட 'ஆந்திர வெள்ள நிவாரண நிதி'க்கான கிரிக்கெட் அண்மையில் ஹைதராபாத்தில் நடைபெற்றது.

ரஜினி, சிரஞ்சீவி, நாகர்ஜுனா ஆகியோர் விளையாடிய அணிகள் துவக்கச் சுற்றுப் போட்டிகளிலேயே தோல்வியைத் தழுவின. முதலாவது அரையிறுதிப் போட்டியில் சரத்குமார் தலைமையிலான அணியும் (இதில் பார்த்திபன், அப்பாஸ் ஆகியோரும் இடம் பெற்றனர்) தெலுங்கு நடிகர் பாலகிருஷ்ணா தலைமையிலான அணியும் மோதின. இதில் பாலகிருஷ்ணா அணி வென்றது.

மற்றொரு அரையிறுதியில் அமிதாப் பச்சன் தலைமையிலான அணியும் (இதில் நக்மா, மதுபாலா ஆகியோரும் இடம்பெற்றனர்) ஜித்தேந்திரா தலைமையிலான அணியும் மோதின. இதில் அமிதாப் பச்சன் அணி வென்றது.

மற்றப் போட்டிகளைப் போன்று இறுதிப் போட்டி 5 ஓவர்களைக் கொண்டதாகவே நடத்தப்பட்டது. இதில் அமிதாப் அணியும், பாலகிருஷ்ணா அணியும் மோதின. இறுதியாக அமிதாப் பச்சன் அணியே வெற்றிபெற்றது.

★ அன்பின் சிந்தியா! மிருகங்கள் பேச ஆரம்பித்தால் எப்படி இருக்கும்?

எஸ். பத்மாவதி, கொழும்பு-10.

அவையும் பொய் பேசக் கற்றுக் கொள்ளும்வரை நன்றாக இருக்கும்.

★ வீட்டுச் சொந்தக்காரர்கள் அதிக வாடகையை அறவிடுவதைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

நா. ஆனந்தன், கண்டி.

கொடுக்க ஆட்கள் இருக்கிறார்கள். அதனால் காற்றுள்ளபோதே அவர்கள் தூற்றிக் கொள்கிறார்கள்!

★ புத்தாண்டு பிறந்தால் போர் முடிவுறுமா?

பி.எம்.எம். காதர், மருதமுனை-01.

ஆம்! 96ம் ஆண்டுக்கான போர்.

★ புத்தாண்டை முன்னிட்டு போர்நிறுத்தம் செய்யாதது ஏன்?

க. ரட்னலிங்கம், கொழும்பு-06.

வழக்கமாக புத்தாண்டு போர்நிறுத்தங்களே ஒரு கண்துடைப்புத்தான்! சமாதானத்தில் ரொம்பவும்தான் அக்கறை என்று சொல்லாமல் சொல்லும் தந்திரம்! தற்போதைய நிலையில் புலிகளுக்கு எதிராக பூரண போர்க்கோலம் பூண்டிருப்பதாக காட்டுவதே தெற்கில் மரியாதை என்று நினைக்கிறது அரசாங்கம். ஆகவே அந்தத் தந்திரத்தை கையில் எடுக்கவில்லை. 'போர் மூலம் சமாதானம்' என்பதுதான் அரசாங்கம் போட்டுள்ள அரசியல் முதலீடு. முதலுக்கு மோசம் வர அனுமதிப்பார்களா? ஆக, தற்போதைக்கு பேச்சுவார்த்தை, போர்நிறுத்தம் என்ற நினைப்பையெல்லாம் மூட்டை கட்டி ஓர் ஓரமாகப் போட்டுவிடுங்கள்!

★ இயற்கையான உணர்வுகளுக்கு தடைபோட முடியுமா?

எஸ். யோகநாதன், மஸ்கெலியா.

ஓர் அரசனுக்கு ஆண் குழந்தை பிறந்தது.

பிறந்த குழந்தைக்கு ஜாதகக் கோளாறு இருக்கிறது. அதனால் அது வளர்ந்து வாலிபனாகும்வரை வெளியுலகத்தையே பார்க்கக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள் ஜோசியர்கள்.

அதனால் உலகில் உள்ள எதுவும் கண்ணில்படாதபடி ஒரு பாதாள அறைக்குள் வைத்து அந்தக்குழந்தையை வளர்த்தார்கள்.

அவன் வாலிபனானதும் அவனுடைய கண்ணுக்கு விருந்தாக தங்கம், வெள்ளி, வைரம் என்று பல்வேறு அணிகலன்களை அவனிடம் காட்ட ஏற்பாடு செய்தார் அரசர்.

இளம் பெண்கள் பலர் தட்டுக்களில் அணிகலன்களை ஏந்திவந்து காட்டினார்கள். ஒவ்வொன்றையும் காட்டி விளக்கினார்கள்.

இளவரசனோ அணிகலன்களைப் பார்ப்பதை விட்டுவிட்டு அந்தப் பெண்களைக் காட்டி "என்ன?" என்று விசாரித்தான்.

"இவர்கள் பிசாசுகள், ஆண்களை ஆட்டிப்படைப்பவர்கள்," என்று விளக்கினார் அதிகாரி.

பின்னர் அரசர் வந்தார்.

"மகனே! பல பொருட்களை அனுப்பி வைத்தேனே! அதில் உனக்குப் பிடித்தது எது?" என்று கேட்டார்.

இளவரசன் சொன்னான்:

"பிசாசுகள்தான்!"

★ நம்நாட்டில் இன்று மலிவாகக் கிடைப்பது எது?

ஐ.எம்.பௌஸ், மருதமுனை-03.

வதந்தி!

★ மைடியர் சிந்தியா! நல்ல நண்பர்கள் என்றால் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்ளலாமா?

முருகேஸ் தெய்வீகரஞ்சனி, பது/ தெளிவத்தை.

கொள்ளலாம்! அன்பாக, ஆரோக்கியமாக! நண்பன் தவறான பாதையில் செல்லும்போது சுட்டிக் காட்டி அக்கறையோடு போடும் சண்டை ஆரோக்கியமானது!

★ ஜெயலலிதா மீதான கலைஞரின் துணிச்சலான நடவடிக்கையைப் பற்றி?

செ. புவனேந்திரன், மாத்தளை.

துணிச்சல் என்று சொல்லமுடியாது. மெல்ல மெல்ல ஆழம் பார்த்துத்தான் அம்மணியில் கைவைத்திருக்கிறார்.

### போர் நிறுத்தம் வருமா?

★ இந்திய மத்திய அரசு நம் இனப் பிரச்சனையில் மீண்டும் தலையிடுமா?

வி. காளிதாஸ், புத்தளம்.

தற்போதைக்கு மூச்! என்ன நடக்கிறது என்பதை மட்டும் வோச்!

★ "எனக்கு மீனைக் கொடுக்காதே; மீனைப் பிடிப்பது எப்படி என்று கற்றுக்கொடு," என்கின்ற சீனப் பழமொழியில் இருந்து என்ன புரிகிறது?

ஷபீனா பக்சீர்தம்பி, நிந்தவூர்.

பிச்சை வேண்டாம்; பிழைக்கச் சொல்லித்தா.

"உழைத்து வாழவேண்டும் பிறர் உழைப்பில் வாழ்ந்திடாதே!"

★ டியர் சிந்தியா! ஆணின் பலம் எது? பெண்ணின் பலம் எது?

ஷகிலா வேலுப்பிள்ளை, நாவுஓயா.

இருவரின் பலமும் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வது!

★ பதவிக்கு வருபவர்கள் மறக்கக்கூடாதது எது?

செல்வி இ. சத்யா, மட்டக்களப்பு.

ஈரானிய மன்னர் கஜினி முகம்மது ஒரு வெள்ளிக்கிழமை மசூதிக்குச் சென்று கொண்டிருந்தார். வழியில் ஒரு மூதாட்டி வந்து அவரது படையில் பணிபுரியும் தனது பேரனைப் பற்றி விசாரித்தாள்.

"ஆயிரக்கணக்கான படைவீரர்கள் இருக்கிறார்கள். அதில் உன் பேரனை மட்டும் நான் எப்படிச் சொல்ல முடியும்?" என்று கேட்டார் மன்னர்.

"இதைச் சொல்ல முடியவில்லை என்றால் நீ ஆண்டுகொண்டிருக்கும் கோடிக்கணக்கான மக்களை எப்படியப்பா நினைவு வைத்திருப்பாய்? ஆள்பவன் ஆண்டவனுக்குச் சமம். ஒவ்வொருவருக்கும் படியளக்கும் இறைவன் படைத்தவர்களை நினைவில் வைத்துள்ளார். உன் பிரஜைகள் ஒவ்வொருவரும் உனக்கு வரி கட்டுகிறார்கள். அவர்களை 'தன் எண்ணத்தில் கொள்ளாதவன் ஆளத் தகுதியற்றவன்' என்று வேதமே சொல்கிறது. அதனால் நீ சிம்மாசனத்தை விட்டு இறங்கிவிடு," என்று சொல்லிவிட்டுத் திரும்பிவிட்டாள் மூதாட்டி.

★ டியர் சிந்தியா! கமலஹாசனின் முன்னாள் மனைவி வாணி, அவ்வை சண்முகியை பாராட்டியிருக்கிறாராமே? தமிழக சஞ்சிகை செய்தி வெளியிட்டுள்ளதே?

ஜெ. கணபதி, கொழும்பு-12.

முன்னாள் மனைவி இந்நாள் ரசிகையாக இருக்கக்கூடாதா என்ன? அது இருக்க மற்றொரு உப தகவல்:

நடிகை ஸ்ரீவித்யா, மும்பாய் ஆங்கில இதழுக்கு ஒரு பேட்டி கொடுத்துள்ளார். "அபூர்வராகங்கள் படத்திலிருந்து ஒரு நடிகருடன் நெருங்கிப் பழகினேன். திருமணம் செய்வதாகச் சொன்னார். திடீரென்று அவர் மனம் மாறிவிட்டார். நான் உடைந்து போனேன்," என்று சொல்லியுள்ளார்.

ஸ்ரீ வித்யா சொல்லியுள்ள நடிகர் கமலஹாசன்! இப்போது ஸ்ரீவித்யாவும் கமல் ரசிகைதான்!

## சிந்தியா பதில்கள்

★ ஒரு ஜோக் சொல்லுங்கள் பார்க்கலாம்?

சே. ரமணி, வவுனியா.

"மாப்பிள்ளை ஏன் ரொம்பக் கோபமாக இருக்கிறார்?"

"அவர் 'செஸ்' சாம்பியனாம். கல்யாணப் பத்திரிகையிலே 'செக்ஸ்' சாம்பியன் என்று போட்டுவிட்டார்களாம்!"



★ வயதானவர்கள் என்று சொன்னால் சிலருக்கு கோபம் வருகிறதே?

மு. ரவிராஜ், கம்பளை.

சமரசமாகப் போகவேண்டியதுதான்!

ஓர் இளம் பெண் பஸ்ஸில் ஏறினாள். அவளுக்கு இருக்க இடம் கிடைக்கவில்லை. சுற்றும் முற்றும் பார்த்தாள். ஒரு பகுதியை நோக்கி:

"அதோ அந்த அழகான ஆண் எழுந்து எனக்கு இடம் தருவார் என்று நினைக்கிறேன்." என்றாள்.

அந்தப் பகுதியில் இருந்து ஒரே நேரத்தில் ஆறுபேர் எழுந்து அந்த அழ[illegible] இடம் கொடுக்க முன்வந்தார்கள்.

அந்த ஆறுபேரும் அறுபது[illegible] தாண்டியவர்கள்.



படிப்பகம்

# இராமாயணம் அங்கம் 63

இராமபிரான் சீதாப்பிராட்டியாரின் நினைவால் துயருற்றிருப்பதுபோல் சீதாப் பிராட்டியாரும் சொல்லொணாத்துயரச் சுழலில் சிக்கித் தவித்தார். சீதாப்பிராட்டியார் இருக்கும் இடத்தை எப்படியாவது கண்டு பிடித்தேயாக வேண்டும் என்ற எண்ணத்துடன் இலங்கை மாநகரத்து அரண் மனைகளையெல்லாம் அலசித் தேடிய ஆஞ்சநேயர், பிராட்டியாரை அங்கெங்குமே காண வில்லை என்பதனால் மனம் தளர்ந்து போனார். சீதாப்பிராட்டியாரைக் காணாமல் இராமபிரானிடம் திரும்புவதில்லை. இலங்கையை அழித்துவிட்டு தன் உயிரையும் மாய்த்து விடுவது என்ற முடிவுக்கு வந்தார். இறுதியாக ஓர் அழகிய சோலையினுள் நுழைந்தார்.

பொழுது புலர்ந்தாலும் அச்சோலையினுள் கதிரொளி பரவவில்லை. அடர்த்தியாக அசோக மரங்கள் வான் முட்ட வளர்ந்திருந்தன. இராம நாமத்தை இடையறாது ஜெபித்தவண்ணம் சோலைக்குள் புகுந்தார் ஆஞ்சநேயர். சலசலத்தோடும் சிற்றருவியின் அருகே கூட்டங் கூட்டமாக அரக்கியர் சுற்றித்திரிவதைக் கண்டார். அவர்களிடம் பரபரப்புக் காணப்பட்டது. போர்ப்பயிற்சி பெற்ற வீராங்கனைகள் போல் அவர்களில் பலர் காணப்பட்டனர். பெரிய வாட்களைத் தாங்கியவர்களாகவும் அவர்களில் சிலர் அங்குமிங்குமாகத் திரிந்தனர்.

## திரிசடை - சீதைக்குக் கிடைத்த துணை

மற்றோரிடத்தில் ஆயுதப்பயிற்சி, மல்யுத்தம் போன்ற போர்ப் பயிற்சிகளிலும் சிலர் ஈடுபட்டிருந்தமையையும் அனுமனால் அவதானிக்க முடிந்தது.

### அரக்கியர் மத்தியில்...

இராவணனால் சிறைப்பிடிக்கப்பட்ட சீதை இலங்கை மாநகரை வந்தடைந்த பின்னர், இராவணனின் ஏவலாளர்களால் பல மாளிகைகளுக்கும் அழைத்துச் செல்லப்பட்டார். எப்படியாவது தான் இராமபிரானிடம் போய்ச் சேர்ந்துவிட வேண்டும் என்ற எண்ணமே அவரிடம் வேர்விட்டிருந்தது. இராமபிரான், தான் இருக்குமிடத்தைக் கண்டறிந்து சிறை மீட்டுச் செல்ல எப்படியோ சிலகாலம் செல்லும். அக்காலம் வரும்வரை தான் வனவாசம் பூண்டு வாழவேண்டும் என்பதே அவர் கருத்து. தன் கணவனுடன் கானகத்தில் எவ்வாறு வாழ்ந்து வந்தாரோ அதே வாழ்க்கையையே தானும் கடைப்பிடித்தாக வேண்டும் என்ற திடமான முடிவுடனிருந்தமையால் மாளிகை வாசத்தை வெறுத்தார். தன்னைக் காவல் காப்பதுடன் தனக்குரிய பணிகளில் உதவுவதற்காக அமர்த்தப்பட்ட அரக்கியர்களுள், தனக்கு இசைவாக நடக்கக் கூடியவள் என்று ஒருத்தியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்.

பாலைவனத்தினுள்ளே ஒரு சோலை வனம் போல, கரடுமுரடான கற்களுக்கு நடுவே ஒரு பசும்புற்தரைபோல, கொடிய குணம் படைத்த அரக்கியர் கூட்டத்தின் மத்தியிலே திரிசடை என்ற ஒரு பெண்மணி இருந்தாள். நீதி நியாயங்களைத் தெரிந்தவள்; நன்மை-தீமை, புண்ணியம்-பாபம் ஆகியவற்றை உணர்ந்தவளாக அவள் இருந்தாள். சீதாப்பிராட்டியார் அங்கு வந்து சேர்ந்த நாள் முதல் திரிசடை அவருடன் ஒட்டிக் கொண்டாள். சீதாப்பிராட்டியாரின் துயரங்களை முழுமையாக உணர்ந்து அனுதாபப்பட்டு ஆறுதல் வார்த்தைகளைக் கூறிக் கொண்டிருந்தாள். இராவணேசன் புரியும் கொடுமைகளையும் அக்கிரமங்களையும் அடியோடு வெறுத்தாள் திரிசடை.

அசோக வனத்தில்- பர்ணசாலையைப் போன்ற- ஒரு குடிசையை அமைத்து அதிலேயே சீதாப்பிராட்டியார் வாழ்ந்தார். ஏதாவது ஒரு மாளிகையில் இருக்கும்படி அரக்கியர் மூலம் இராவணன் பலதடவை தகவல் அனுப்பினான். அக்கோரிக்கை எவற்றையும் ஏற்காத சீதாப்பிராட்டியார், அரக்கியரைக் கொண்டே குடிசையை அமைத்துக் கொண்டார். இருப்பினும் குடிசைக்குள் தங்குவது மிகக்குறைவே. சோலையினுள் ஒரு மரத்தின் அடியிலேயே-இராமபிரானை நினைந்த வண்ணம் இருப்பார்.

சீதாப்பிராட்டியாரின் நிலையினை கம்பர் பெருமான் பல பாடல்களில் எடுத்துக் காட்டுகிறார். இராமபிரானை நினைத்து அவர் பட்ட பாடுகளை வர்ணிக்கும் ஒரு பாடலை இங்கு பார்க்கலாம்:

**விழுதல் விம்முதல் மெய் உற**
**வெதும்புதல் வெருவல்**
**எழுதல் ஏங்குதல் இரங்குதல்**
**இராமனை என்னித்**
**தொழுதல் சோருதல் துளங்குதல்**
**துயர் உழந்து உயிர்த்தல்**
**அழுதல் அன்றி மற்று அயல்**
**ஒன்றும் செய்குவது அறியாள்.**

(சுந்தரகாண்டம்-333)

**பொருள்:**

இராமபிரானை நினைந்து, அவர் இருக்கும் வட திசை நோக்கித் தொழுவாள்; நிலத்தில் விழுந்து எழுவாள்; விம்மி விம்மி அழுவாள்; அவளுடைய உள்ளம் வெதும்புவதால் உடல் வெப்பமடைந்து விடும். இதனால் அச்சமடைகிறாள்; ஏக்கப் பெருமூச்சு விடுகிறாள்; உடல் தளர்கிறது; கண்ணீர் பெருகுகிறது. கணவனை விட்டுப் பிரிந்த நாள் முதல் சீதையிடம் இத்தகைய செயல்களே காணப்படுவதைத் தவிர வேறு எச்செயலையும் காணக்கூடியதாக இல்லை.

### நினைவலைகளில்...

அசோக வனத்தில் சீதை எப்போதும் சிந்தனை வயப் பட்டவராகவே காணப்பட்டார். மாயமான் மீது மையல் கொண்டமையினால்தான் இத்தகைய கேடுவந்துற்றது என்றுணர்ந்தமையால் எப்போதும் அச் சம்பவத்தின் நினைவுகள் சீதையை ஆட்டிப் படைத்தன. இராமருடைய அபயக்குரல் கேட்டதும், அவருக்கு உண்மையில் ஏதோ அபாயம் நேர்ந்து விட்டதோ என்று வேதனைப்பட்டு இலக்குமணனை அண்ணனிடம் போகுமாறு வற்புறுத்தினார். வந்தது உண்மையான மானல்ல; மாயமான் என்று இலக்குவன் கூறியவற்றையெல்லாம் சீதை எண்ணிப்பார்த்தார். 'இராமரும் இலக்குவனும் ஒருவரை ஒருவர் சந்திக்காமல், அரக்க மாயாவிகள் தடுத்துவிட்டனர் போலும். அவ்வாறு இருவரும் சந்தித்திருந்தால் என்னைத் தேடி நிச்சயம் வந்திருப் பார்கள். என்னை அரக்கர்க்கரசன் விமானத்தில் எடுத்து வரும்போது தடுத்து-இராவணனால் தாக்குண்டு குற்றுயிராய் வீழ்ந்த சடாயுவும் சாவைத் தழுவிக் கொண்டார் போலும். இராமரும் இலக்குவனும் ஒருவரை ஒருவர் சந்தித்து என்னைத் தேடி வரும் வழியில் சடாயுவை- அவர் உயிர் பிரியாதிருந்தால்- கண்டிருப்பார்கள். எனக்கு என்ன நேர்ந்தது என்று தெரியாமல் இருவரும் என்னைத் தேடுவதைக் கைவிட்டிருப்பார்களோ? அவ்வாறானால் இனிமேல் நான் உயிருடன் இருந்து பயன் எதுவுமில்லை; உயிரை மாய்த்துவிடுவதே மேல்' என்றெல்லாம் எண்ணி கண்ணீர் சிந்திய வண்ணம் கவலைக் கடலில் மூழ்கியிருந்தார் சீதாப் பிராட்டியார்.

சீதாப்பிராட்டியாரின் கவலைகளில் திரிசடையும் பங்குகொள்வாள். திரிசடையின் துணையில்லாவிட்டால், ஏனைய அரக்கியரின் கொடிய பார்வைகளுக்கு அஞ்சியே சீதாப் பிராட்டியார் உயிர் துறந்திருக்கக்கூடும். அவ்வரக்கியர் சீதையை அணுகி, எப்போதும் இராவணனின் புகழையே பாடிக் கொண்டிருப்பர், ஈரேழு பதினான்கு உலகிலேயும் இராவணனைப் போல் ஆணழகனும் இல்லை; வீரனும் இல்லை என்று கூறுவார்கள். அண்ட சராசரத்தில் இலங்கேஸ்வரனால் ஆகாதது எதுவுமே இல்லை என்பார்கள். இவற்றையெல்லாம் கேட்டுக்கேட்டே சீதையின் காதுகள் மரத்துப்போய்விட்டன. அந்நிய ஆடவனைப்பற்றிய வர்ணனைகளை எத்தனை . நாட்கள்தான் ஒரு பத்தினிப் பெண்ணால் கேட்டுக் கொண்டிருக்க முடியும்? ஆகவேதான் அரக்கியரைக்காணும் போது சீதாப்பிராட்டியார் அஞ்சி நடுங்கினார்.

### நல் நிமித்தம்

அன்று மதியம் அரக்கியர் அனைவரும் தூங்கிவிட்டனர். தூக்கத்தையே துறந்து விட்ட சீதாப்பிராட்டியார், ஒரு வகைப் புன் சிரிப்புடன் திரிசடையை அருகழைத்தார். தனது இடது தோளும் கண்ணும் அடிக்கடி துடிப்பதாகக்கூறி, அதற்கான அர்த்தம் தெரியுமா, என்று திரிசடையை வினவினார்.



பல வருடங்களுக்கு முன்னர் மிதிலையில் தனது அந்தப்புர உப்பரிகையில் நிற்கும் போது முதன் முதலில் இராமபிரானைக் கண்டு மையல்கொண்ட கதையை திரிசடையிடம் கூறினார். அச்சம்பவம் நடைபெறுவதற்கு முன்னர் சில நாட்களாகவே தனது இடது கண்ணும் தோளும் துடித்ததையும், அந்தப்புரத்திலிருந்த தனது செவிலித்தாய், "பெண்களின் இடது தோளும் இடது கண்ணும் துடித்தால் இன்பமான செய்திவரும்" என்று கூறியதையும் சீதாப் பிராட்டியார் கூறினார். "நேற்றுக் காலையிலிருந்து எனது இடது கண்ணும் தோளும் துடிக்கின்றன. ஆகவே எனக்கு நல்ல செய்தி வரப்போகிறது" என்று மகிழ்ச்சியாகவே சீதாப்பிராட்டியார் கூறிய செய்தி திரிசடைக்கும் மகிழ்ச்சியை அளித்தது. தானும் சில நற்சகுனங்களைக் கண்டதாகவும் அதன்

இராஜகுமாரன்

படி பார்த்தாலும் விரைவில் நல்ல செய்தி வந்தே தீரும் என்று திரிசடையும் சொன்னாள்.

### காகமாக வந்த காமுகன்

இச்சந்தர்ப்பத்தில் இராமபிரானுக்கும் தனக்கும் மட்டுமே இடம்பெற்ற பல இனிய சம்பவங்களை திரிசடையிடம் விபரிக்கலானார். "இந்திரனின் மகனான சயந்தன் என்மீது கொண்ட காமத்தினால் காக்கை வடிவமெடுத்து என்னருகே வந்து என் தலை, தோள், மார்பு ஆகிய அவயவங்களில் கொத்தி சேட்டைகள் செய்து கொண்டிருந்தான். எனக்கு இது பெரும் உபத்திரவமாகவே இருந்தது. இது ஏதோ அரக்கனின் சூதாக இருக்குமோ என்று எண்ணி என் கணவனிடம் முறையிட்டேன். அவர் காக்கையைப் பார்த்தவுடன் உண்மையை உணர்ந்து கொண்டார். தனது கோதண்டத்தைக் கையில் எடுத்ததும், காக்கை பறந்தோடியது. கணவர் ஒரு சிறு துரும்பினை அக்காகத்தின் பின்னே ஏவிவிட்டார். அக்காகம் எங்கெங்கெல்லாமோ பறந்து அபயம் தேடியும் பயன் கிட்டாமல் இறுதியில் என் கணவரின் கால்களில் சரணடைந்தது. இதனால் மனமிரங்கிய என் கணவர் அதனைக்கொல்லாமல், அதன் ஒரு கண்பார்வையை அம்பினால் அகற்றினார். இதன் காரணமாகத்தான் இன்றும் காக்கைகளின் பார்வை ஒரு தடவை ஒரேகண் மூலமாகவே சாத்தியமாகிறது," என்று கூறினார்.

சீதாப்பிராட்டியாரும் திரிசடையும் உரையாடிக் கொண்டிருந்த நேரத்தில் காவலன் ஒருவன் அங்கு வந்து சேர்ந்தான். தூங்கிக் கொண்டும் வேறொருபுறம் அரட்டையடித்துக் கொண்டுமிருந்த அரக்கியரைத் திட்டித் தீர்த்தான். "கைதியாகவிருக்கும் ஒரு பெண்ணைக் காவல் காக்கும் இலட்சணம் இது தானா?" என்று இரைந்தான். ஆங்காங்கே அமர்ந்தும், படுத்தும் கிடந்த அரக்கியர் அனைவரும் காவலன் குரல் கேட்டு உசாராயினர். சாதாரணமான வேளைகளில் அந்தக் காவலன் அங்குவருவது அரிது. அவன் பிரதான அரண்மனையிலிருந்து முக்கியமான செய்திகளை, முக்கியமான இடங்களுக்குக் கொண்டு செல்பவன். சீதாப்பிராட்டியாரின் பாதுகாப்புக்குப் பொறுப்பாகவிருந்த அரக்கியர் தலைவியை அழைத்து ஏதோ கூறினான். இதனைத் தொடர்ந்து அரக்கியர் மத்தியில் பெரும் பரபரப்புக் காணப்பட்டது.

இத்தனை சம்பவங்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இதேவேளையில் இராம தூதனான அனுமன் அந்தப் பகுதியில் சடைத்து வளர்ந்த ஒரு பெருமரத்தின் கிளையிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி: 61**
**சரியானவிடை:- பிரம்மதேவன்**

1. ஏ.எல். கலீல், 157, கொங்காவெல வீதி, மாத்தளை.
2. குனா அழகேசன், மொக்கா எஸ்டேட், மஸ்கெலியா.
3. க. தர்ஷனி, 223, பிரதான வீதி, திருகோணமலை.
4. திருமதி ஜோதிமலர் இராஜேந்திரன், 15, எல்லை வீதி, மட்டக்களப்பு.
5. செல்வி குமுதினி சிவதாஸ், 36, சின்சபா வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-6.

**போட்டி இல. 63** கேள்வி:- சீதாப்பிராட்டியார் சிறைவைக்கப் பட்டிருந்த இடத்தின் பெயர் என்ன?

...வரி. 04 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

இராமாயணப் போட்டி-இல.63, தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## காதிலை பூ கந்தசாமி

*செல்வி ஜெயலலிதா சிறையில் இருக்கிறார். கலைஞர் கருணாநிதி அவரைச் சிறையில் நலம் விசாரிக்கச் செல்கிறார். செல்வி முகத்தில் கோபம் தூள்பறக்கிறது.*

கலைஞர்: (சோகமாக முகத்தை வைத்துக் கொண்டு பாடுகிறார்)

பால் குடித்து வளர்ந்த செல்வி
பழம் தின்று செழித்த செல்வி
நான் ஜெயித்து வீழ்ந்த செல்வி
நாளும் வரும் ஜட்ஜ்மெண்ட்டுக்கு
செல்லம்மா-கோட்ஸுக்கு செல்லம்மா!
செல்லம்மா-கோட்ஸுக்கு செல்லம்மா!

செல்வி: (பாடுகிறார்)

யானைக்கொரு காலம் வந்தால்
பூனைக்கொரு காலம் வரும்
புரிஞ்சுக்கோ நீ புரிஞ்சுக்கோ

வைக்க நினைத்திருந்தால் கூவம் நதியை இங்கே திருப்பியிருக்கலாம். கொசு உற்பத்தியை உயர்த்தியிருக்கலாம். அண்ணா வழிவந்த ஆட்சி என்பதால் பழிவாங்கும் எண்ணத்தை மண்ணாக்கிவிட்டு பால் பழம் வழங்கிக் கொண்டிருக்கிறோம்! பழி வாங்கும் எண்ணம் இருந்திருந்தால் பாலில் நீர் கலந்திருப்போம்! பழங்களை அழுக வைத்து அள்ளித் தந்திருப்போம்! பால்-பழம்-பஞ்சணை வேறென்ன வேண்டும் சொகுசுக்கு?

செல்வி: பால்-பழம்-பஞ்சணை! (பாடுகிறார்)

# கலைஞர்-செல்வி நலம்-நலமறிய ஆவல்

கலைஞர்: (காவலர்களை திரும்பிப் பார்த்து விட்டு பாடுகிறார்)

பூவா? தலையா? போட்டாத் தெரியும்!
நீயா? நானா? பார்த்துவிடு!
கமான்! க்ளாப்! ஒன்.. டூ
(காவலர்கள் கைதட்டுகிறார்கள்)
பூவா? தலையா? போட்டாத் தெரியும்
நீயா நானா பார்த்துவிடு!
பூ விழுந்தா நீ நெனைச்சபடி
தலை விழுந்தா நான் ஜெயிச்சபடி!

செல்வி: (சீற்றத்துடன் உரத்துப் பாடுகிறார்)

கலைஞரே
நீயும் நானுமா- கலைஞரே
நீயும் நானுமா
சிறையில் தள்ளினால்
செல்வாக்கும் மாறுமா?.. நெவர்

கலைஞர்: (கரகரவென்று சிரித்துவிட்டு பாடுகிறார்)

அடி ஆத்தாடி
நீ பேசும் வார்த்தை என்ன பொய்மானே?
அடி அம்மாடி
நான் கோட்டையில் ஆளும் முதல்வர் ஆனேனே!

செல்வி: (முகத்தை தோளில் இடித்து பழிப்புக் காட்டிவிட்டு பதிலுக்குப் பாடுகிறார்)

அடி ஆத்தாடி
கிழ மனசொன்று றெக்க கட்டிப் பறக்குது சரிதானா?
ஒரு அலை வந்து தேர்தலில் அடித்தது அதுதானா?

கலைஞர்:

என்னைப் பத்தி நீ என்ன நெனைக்கிற?
என்னைப் பத்தி நீ என்ன நெனைக்கிற
உப்பு நீரில் குளிக்கும் போதும்
ஆயிரம் கொசு கடிக்கும்போதும்
சாக்கடை நாத்தம் வீசும்போதும்
என்னப் பத்தி நீ என்ன நெனைக்கிற?

செல்வி:

ஒன்னப் பத்தி நான் ஒண்ணும் நினைக்கல
கண்ணு ரெண்டும் துடிக்கும் வரைக்கும்
கன்னம் கொஞ்சம் வெளுக்கும் வரைக்கும்
தூக்கம் கெட்டுத் துடிக்கும் வரைக்கும்
இந்த மேனி இளைக்கும் வரைக்கும்
ஒன்னப் பத்தி நான் ஒண்ணும் நெனக்கல

கலைஞர்: அப்படியா சங்கதி? உன்னப் பத்தி நீ என்ன நெனைக்கிறே? அதையாவது சொல்லக்கூடாதா?

செல்வி: (சோகமாகப் பாடுகிறார்)

நானொரு சிந்து
காவடிச் சிந்து
ராகம் புரியவில்ல-உள்ள
சோகம் புரியவில்ல
சொத்து இருந்தும்
தோழி இருந்தும்
சொர்க்கம் தெரியவில்ல-அதச்
சொல்லத் தெரியவில்ல

கலைஞர்:

இல்லாத உறவுக்கு
பொய்யான பேரோ?
நீ சேர்த்த சொத்துக்கு
பினாமி யாரோ?

செல்வி: (முகபாவம் மாறுகிறது. குரல் கம்மப் பாடுகிறார்)

சொன்னாலும் வெட்கமடா
சொல்லாவிட்டால் துக்கமடா
தூக்கமில்லாமல், தோழியில்லாமல்
வாழுகிறேன் ஒரு பக்கமடா!

கலைஞர்: என்ன வசதி இல்லை இங்கே? சிறையிலே பஞ்சணை தந்திருக்கிறோம். வேறுயார் தருவார் பஞ்சணை? நமக்கில்லை உம்மீது வஞ்சனை! ஆப்பிள் பழங்களும், குளுக்கோசும், தேவைப்பட்டால் கொசு வர்த்தியும் தரச்சொல்லி உத்தரவிட்டிருக்கிறது கழக ஆட்சி! உம்மைக் கலங்க



பாய் விரித்துப் படுபவரும்
வாய் திறந்து தூங்குகிறார்
பஞ்சணையில் நான் படுத்தும்
நெஞ்சிலோர் அமைதி இல்லை.
குத்தவரும் கொசுக்களெல்லாம்
கொடும்பாம்பாய் மாறுதடா!
குத்திவிட்டுப் புத்தனைப்போல்
சத்தியமாய் மாறுதடா

கலைஞர்: கொசுவர்த்தியில் கலப்படமாக இருக்க வேண்டும். கலர்ப்படத்தில் நீர் நடித்தபோது ரசித்தவனும் இந்த கருணாநிதிதான். கலப்படத்தை நீர் ஊக்குவித்த போது கொதித்தவனும் இந்த கருணாநிதி தான்! தன்வினை தன்னைச் சுடும் என்பது பழம் தமிழர் முன்மொழி! கொசுவர்த்தியில் கலப்படத்தை ஊக்குவித்தீர், கோடைக் கானலில் அந்த ஊழல் பணத்தில் பங்களா வாங்கினீர்.! இப்போது கொசு உம்மைக் குத்துகிறது, இரத்த ருசி பார்க்கிறது! கழக ஆட்சி இதற்கு காரணமல்ல என்று உலகத் தமிழர்கள் அறிந்து வைத்திருக்கிறார்கள்!

செல்வி: (பாடுகிறார்)

யாரை எங்கே வைப்பது என்று
யாருக்கும் தெரியலே-அட
அண்டங் காக்கைக்கும் குயில்களுக்கும்
பேதம் புரியலை!

கலைஞர்: செல்வியை எங்கே வைக்க வேண்டும், உயிர்த் தோழியை எங்கே வைக்க வேண்டும் என்று கழக ஆட்சிக்கு யாரும் சொல்லித் தரவேண்டியதில்லை. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காக்க அண்ணா நமக்கு சொல்லித்தந்திருக்கிறார். சிறைக்குள் கண்ணியம், கட்டுப்பாடு காக்க வேண்டிய காரணத்தால் உடன் பிறவா சகோதரியை வேறு இடம் பார்த்து வைத்திருக்கிறோம்!

செல்வி: (தேம்பித் தேம்பி அழுதபடி கைக் குட்டையைத் தேடுகிறார். அதைக் காண வில்லை. தேம்பியபடி பாடுகிறார்)

எந்தன் கைக்குட்டையை
யார் எடுத்தது?
அன்புக் காதலின் சின்னமாய்
எந்தன் சசிகலா தந்தது!

(செல்வி பாடியது சசிக்கு கேட்டுவிட்டது. தன் அறையில் இருந்து பாடுகிறார்)

சசி:

சின்னச் சின்ன நூல்களில் பூக்கள் வரைந்தேன்
என்னை வைத்து நான் அதில் பின்னியிருந்தேன்!

செல்வி: இங்கிருந்தே உரத்த குரலில் பதில் பாடுகிறார்)

கைக் குட்டையில் வேர்வையைத் துடைத்ததில்லை
அதற்கு வலித்திடும் என்று நான் தோய்த்ததில்லை

கலைஞர்: (பாடிக்கொண்டே நழுவுகிறார்)

திண்டாடுதே ரெண்டு கிளியே
கண்ணீரு ஒண்ணாச்சேர்ந்து ஆறாப்போகுதே
என்ன தலைவிதியோ-இது
என்ன புது உறவோ?

சசி: (செல்விக்கு ஆறுதல் சொல்லி உரத்துப் பாடிக்கொண்டிருக்கிறார்.)

ஒரு ஜீவன் அழைத்தது
ஒரு ஜீவன் துடித்தது-இனி
எனக்காக அழவேண்டாம்-இங்கு
கண்ணீரும் விழவேண்டாம்
உன்னையே எண்ணியே வாழ்கிறேன்.

அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS



பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.

433631

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு




## சீறுவதில் வேகம்

← மேலைத்தேச நாடுகளில் ஜாலியான கொண்டாட்டங்கள் என்றால் 'சம்பெய்ன்' உடைத்துத்தான் ஆரம்பிப்பார்கள்.

'சம்பெய்ன்' என்பது ஒரு வகையான பியர் பானம். அதில் விசேஷம் என்னவென்றால் அட்டகாசமாக ஒரு குலுக்குக் குலுக்கினால் சீறியெழுந்து நுரைதள்ளி போத்தல் மூடியை உயரத்தூக்கி வீசிவிடும். அந்தக் காட்சியே உற்சாகத்தை தூண்டிவிடும்.

பேராசிரியர் ஹெயின்றிச் என்பவர் சம்பெய்ன் குலுக்கலில் ஒரு சாதனை படைத்திருக்கிறார். எப்படிக் குலுக்கினால் சம்பெய்ன் போத்தலின் தக்கை மூடியை அதிக உயரத்திற்கு எழச் செய்யலாம் என்று அவராது ஆராய்ந்து இறுதியில் வெற்றி பெற்றிருக்கிறார். அவரது அதிவிசேஷ குலுக்கலில் 54.18 மீட்டர் (177 அடி 9 அங்குலம்) தூரத்திற்கு தக்கை மூடி உயர்ந்து பறந்து சென்று விழுந்தது. அதாவது ஒரு டென்னிஸ் மைதானத்தின் நீளத்தை விட இரு மடங்கு தூரம்.

1988 ஜூன் 5ல் (அமெரிக்கா) நியூயோர்க்கில் இந்த உலக சாதனை செய்யப்பட்டது. உங்களிடம் இருந்தால் நீங்களும் முயன்று பார்க்கலாம்.




ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

323657

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


## பாதணி பத்திரம்



பிலிப்பைன்ஸ் நாட்டு சர்வாதிகாரி மார்க்கோஸின் மனைவி இமெல்டா முதல், → தமிழ்நாட்டு முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவரை பாதணிகள் சேகரிப்பதில் அலாதிப் பிரியம் உடையவர்கள்.

பாதணிகளுக்கு மரியாதை இருக்கிறதோ இல்லையோ, அதை அணிந்து கொள்ளும் நபர்களால் பாதணிக்கு மதிப்பு வந்துவிடுகிறது. இராமரின் பாதணி நாட்டையே ஆண்டதல்லவா!

படத்தில் பாவையின் கையில் உள்ள பாதணிக்கும் ஒரு விசேஷம் இருக்கிறது. இதனைச் 'சிவப்புச் சப்பாத்து' என்றழைக்கிறார்கள். 1939ல் வெளியான 'த விஷார்ட் ஒவ் ஒஸ்' என்னும் படத்தில் ஜூடி கார்லண்ட் என்னும் பிரபல நடிகை அணிந்து நடித்தது இந்தச் சப்பாத்து. சுமார் 49 வருடங்களின் பின்னர் அதாவது 1988 ஜூன் 2ம் திகதி இந்தச் சப்பாத்தை அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஏலத்தில் விட்டனர். ஒரு பிரபல செல்வந்தர் இதனை ஏலத்தில் எடுத்தார். என்ன விலை கொடுத்தார் என்று நினைக்கிறீர்கள்? ஒரு இலட்சத்து 65 ஆயிரம் அமெரிக்க டொலர்கள். அதன் இன்றைய மதிப்பு 92 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய்கள்.

பிரேமதாசா காலத்தில் இறக்குமதி செய்த தங்கமுலாம்பூசிய கட்டில்கூட இந்த சப்பாத்தின் விலையோடு கிட்ட நிற்க முடியவில்லை.

தருவது ரசிகன்



## அருகிய மான்

↑ 'அந்த மானைப் பாருங்கள் அழகு' என்று பாடாமல், இந்த மானைப் பாருங்கள் அரிது! பெரிய கொம்புகளை உடைய இதனை 'மறிமான்' எனவும், 'அன்ரலோப்' என்றும் அழைப்பர். மான்போன்ற ஆட்டினம் இது.

உலகில் இந்த மறிமான்கள் வெகு வேகமாக அழிந்துவருகின்றன. இந்த மறிமான்களை இன அழிவில் இருந்து பாதுகாக்க அமெரிக்க கலிபோர்னியா மாநிலத்தில் ஒரு மிருகக் காட்சிசாலை அமைத்திருக்கிறார்கள். அகதிகளுக்கு தஞ்சம் கொடுப்பதுபோல, மறிமான்களை அங்கு தருவித்து பாதுகாப்பாக வளர்த்து வருகிறார்கள். வளர்ந்த பின்னர் ஓமான், ஜோர்டான் போன்ற நாடுகளுக்கு அனுப்புகின்றனர். அங்குள்ள பசும் தரைகளில் இவை வாழ்கின்றன. ஆனாலும் 150 மறிமான்கள் மட்டுமே தற்போது உயிர்வாழ்கின்றன.

## வானில் வர்ணக் கோலம்



↑ மேலிருந்து கீழே வீசப்படும் எப்பொருளும் பூமியின் ஈர்ப்பு விசையால் பூமியை நோக்கிக் கவரப்படும். வானவெளியில் குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் காற்றழுத்தம் குறைவு. அங்கு மனிதன் விடப்பட்டால் அந்தரத்தில் ஊசலாடி படிப்படியாக கீழ்நோக்கி விழுவான். அப்படி விழும்போது உயிரும் போகலாம். உடலின் முக்கியபாகங்களும் போகலாம். பரசூட் உதவியுடன் என்றால் சேதமில்லாமல் தரையில் இறங்கலாம். அவ்வாறு தரையிறங்கும் விளையாட்டை 'பரசூட்டிங் ஸ்போர்ட்ஸ்' என்றழைப்பார்கள்.

பரசூட் விளையாட்டில் பல சாதனைகள் படைக்கப்பட்டிருப்பினும், படத்தில் நீங்கள் காணும் சாதனைதான் பிரமிக்க வைக்கிறது. கின்னஸில் இடம்பிடித்திருக்கிறது.

1992 ஆகஸ்ட் 14ம் திகதி ஃபிரான்ஸ் நாட்டில் இச்சாதனை செய்யப்பட்டது. 5200 மீட்டர் உயரத்தில் (17 ஆயிரம் அடி) பறந்த விமானத்தில் இருந்து குதித்த நூறுபேர் தமது கைகளைக் கோர்த்துக் கொண்டு வட்டமான மனிதச் சங்கிலியாக அந்தரத்தில் மிதந்தனர். 5.97 செக்கன்கள் வரை இந்த மனிதச்சங்கிலி வானில் நீண்டிருந்தது. என்ன பிரம்பபாக இருக்கிறதா? இன்னொரு மகா முக்கியமான தகவல்: இந்த நூறுபேரும் பெண்கள்!

## 10வது பிறந்த நாள் வாழ்த்து

*19-12-1996*

பூமி வாழ்த்துரைக்க
பூ மகளே! நீ வாழ்க!

**செல்வி பிரவீனா செந்திநாதன்**



அல்வாய் வடக்கைச் சேர்ந்த செந்திநாதன் நிர்மலாதேவி தம்பதிகளின் இனிய மகள் பிரவீனா தனது *10*வது பிறந்தநாளை சுவிற்ஸர்லாந்தில் பாடன் நகரில் உள்ள தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடினார். இவரை அன்பான அப்பா, அம்மா, தம்பி நிரோஷன், பெரியத்தை, மாமா, மேகலா, காசினி மச்சாள், கிருஷா மச்சான், மாமா, அத்தை, சித்தி, சித்தப்பா, இலங்கையிலுள்ள அன்பான அப்பப்பா, அப்பம்மா, அத்தைமார், சுயா, அச்சுகி மச்சாள், அண்ணா, அக்காமார், தம்பி, பெரியப்பா குடும்பத்தினர், அம்மம்மா, லண்டன் மாமா, மற்றும் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்: ரவி

## விளையாட்டில் விரோதம்

விளம்பர ரீதியில் கிரிக்கெட் போட்டிகள் ஒரு யுத்தம் போலவே சித்தரிக்கப் படுகின்றன. அவ்வாறு சித்தரித்து ரசிகர்களின் வெறித்தனமான ஆர்வத்தை தூண்டிவிட்டால் தான் விளம்பர நிறுவனங்களுக்கு கோடி கோடியாக இலாபம் சேரும்.

இந்திய-பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே நடைபெறும் கிரிக்கெட்போட்டிகள் இரு நாடுகளின் யுத்தத்துக்கு சமமாகவே நோக்கப்படுகின்றன.

இரு நாடுகளின் ரசிகர்களும் தமது நாட்டு அணியின் தோல்வியை ஜீரணிக்கத் தயாராக இல்லை. அதனால் தமது அணி அடிவாங்கும்போது கொதித்துப்போய்விடுகிறார்கள். மறுதரப்பு அணியை நோக்கி கிண்டல்களும் செருப்புகளும் சோடாப்புட்டிகளும் மைதானங்களை நோக்கிப் பறக்கின்றன.

படத்தில் நீங்கள் காணும் காட்சி கனடா சகாரா போட்டியில் 'கிளிக்' செய்யப்பட்டது. இந்திய ஆதரவாளர் ஒருவர் அமீர் சொகைலை கிண்டல் செய்திருக்கிறார். அமீர் சொகைல் அவரை நோக்கி சைகையால் எச்சரிக்க, அந்த ஆதரவாளர் மைதானத்திற்குள் புகுந்த அமீர் சொகைலைதாக்க செல்ல, பொலிசார் அவரை கைதுசெய்தனர். அமீர் சொகைல் பொலிசாரிடம் கோபமாக முறைப்பீடு செய்யும் காட்சிதான் இது. (படஉதவி தயா- கனடா)





இப்பத்திரிகை கொழும்பு நிலப்பனை காலித் பிளேஸ், 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 25, வெல்லபார், [illegible] அச்சகத்தில் டிசம்பர் மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிட[illegible]

படிப்பகம்